திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 4] சுபகிருது ஆவணி-செப்டம்பர் 1962 [மணி 12

திருமாகறல்

காலையொடு துந்துபிகள் சங்குகுழல்
யாழ்முழவு காமருவுசீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்கள்
ஏத்திமகிழ் மாகறலுளான்
தோலையுடை பேணியதன் மேலொர்சுடர்
நாகமசை யாஅழகிதாப்
பாலையன நீறுபுனை வானடியை
யேத்தவினை பறையுமுடனே
—திருஞானசம்பந்தர்.

திருக்குற்றாலத் தலபுராணத்தில் "தொண்டை வளநாட்டு எண்ணான்கு" என்றும், பெருந்தொகை என்னும் நூலில் "நாணாட்டிய தொண்டை நன்னாட்டிலாறைந் திருநகரே" (ஆறு × ஐந்து + இரு = 32) என்றும், அண்ணாமலைச் சதகத்தில்" தொண்டை நாட்டிற் குறிக்கி லெண்ணான்கு தலமாம்" என்றும் நாடுவாரியாகப் பிரித்துச் சிவத்தல எண்ணிக்கையைக் கூறும்போது தொண்டைநாட்டில் முப்பத்திரண்டு சிவப்பதிகள் இருக்கின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. அவற்றுள் ஆறுவதாக வைத்தெண்ணப்படுவது திருமாகறல் என்னும் திருத்தலம். இது செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரம் பகுதியில் இருக்கிறது; காஞ்சிபுரத்திற்குத் தென்கிழக்கே ஒன்பது கல் தொலைவிலிருக்கிறது; செய்யாறு என வழங்கும் சேயாற்றின் வடகரையிலிருக்கிறது; காஞ்சிபுரம்—உத்திரன் மேரூர் நெடுஞ்சாலையிலுள்ளது. காஞ்சிபுரம், மதுராந்தகம், செங்கற்பட்டு, திருவள்ளூர், உத்திரன்மேரூர் முதலிய இடங்களிலிருந்து பஸ்கள் இவ்வூர் வழியாகச் செல்கின்றன. காஞ்சிபுரத்திலிருந்து வரும்போது வேகவதியாறு பாலாறு இவைகளைக் கடந்துவரவேண்டும்.

மாக்கிரகன் என்ற அசுரன் இத்தலத்துப் பெருமானை வழிபட்டதால் அந்தப் பெயர் மருவி மாகறல் என்று வழங்குகிறதென்று தலபுராணம் கூறுகிறது. இவ்வூரிலிருக்கும் திருமால் கோயிலை முன்னிட்டு இவ்வூரைத் திருநாராயணபுரம் என்றும் வழங்குகின்றனர். இறைவன் திருக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோபுரம் இல்லை. இரண்டு பிரகாரங்கள் உள்ளன. உட்பிரகாரமும் மூலஸ்தானமும் மாடக்கோயில் போன்று உயரமான இடத்திலிருக்கின்றன. தென்புறத்திலும் ஒரு சிறு வாயில் இருக்கிறது. சந்நிதித் தெருவில் நேரே சம்பந்தர் மண்டபம் இருக்கிறது. கிழக்கு வாயிலுக்கு வெளியே வடக்கு பக்கத்தில் பெரிய மண்டபம் ஒன்றும் உள்ளது. உள்ளே நுழைந்ததும் கொடிமரம், நந்தி இவைகளும், தென்புறம் அழகிய சிறு திருக்குளமும், வடபக்கம் யாகசாலையும் உற்சவ மண்டபமும் காணப்படுகின்றன. இரண்டாவது வாயிலைக் கடந்ததும் நேரில் மூலஸ்தானத்தில் சிவலிங்க மூர்த்தியாகக் காட்சியளிப்பவர் திருமாகறலீசர்; சுயம்பு மூர்த்தி; உடும்பின் வால்போல இலிங்கம் தோன்றுகிறது. உட்பிரகாரத்தில் வடபக்கத்தில் தேவியின் திருச்சந்நிதி தெற்கு நோக்கியிருக்கிறது. அம்பிகையின் திரு

நாமங்கள் திரிபுவனேசுவரி, புவனநாயகி என்பன. அதையடுத்து மேற்கே நடராஜப்பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார். தெற்கு உட்பிரகாரத்தில் வடக்கு நோக்கி ஆறுமுகப்பெருமான், சப்த மாதாக்கள், நால்வர், அறுபத்துமூவர் முதலியோர் சந்நிதிகளிருக்கின்றன. வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுரர் சந்நிதி இருக்கிறது. அதையடுத்துள்ள கிணறு படிக்கட்டுகளுடன் காணப்படுகிறது.

இத்தலவிருட்சம் பலா. அது இப்போது இல்லை. பல தீர்த்தங்கள் உள்ளன என்று தலபுராணம் கூறுகிறது. அக்கினி தீர்த்தம் கோயிலுக்குள் இருக்கும் திருக்குளம். சந்நிதித்தெருவில் சம்பந்தர் மண்டபத்திற்குப் பின்புறம் இருப்பது இந்திர தீர்த்தம். தலத்தின் தெற்கே ஓடும் சேயாறும் ஒரு தீர்த்தமாகக் கருதப்படுகிறது. அந்த ஆற்றின் வடகரையில் பொய்யா விநாயகர் கோயில் இருக்கிறது. தலவரலாற்றுத் தொடர்புடையது. மேலே சொன்ன தீர்த்தங்களேயன்றி எட்டு திக்குகளிலும் அஷ்டதிக்குப் பாலகர்கள் தீர்த்தங்களும் உள்ளன. மாசிமகத்தைத் தீர்த்தவாரியாகக்கொண்டு பத்துநாள் பிரமோற்சவம் நடைபெறுகிறது. கோயிலில் நாள்தோறும் நாலுகால பூசை நிகழ்கிறது.

மாகறல் கஜப்பிரஷ்ட விமானம்

இத்தலத்தில் வழிபட்டுப் பேறுபெற்றவர் பலர். பிரமன், இந்திரன், தாரை, இரதி முதலிய தேவர்களும், காசிபர், அகத்தியர் முதலிய முனிவர்களும், மலையன், மாக்கிரகன் என்ற அசுரர்களும், இராஜேந்திர சோழனை மன்னனும் இப்பதியிறைவனை வழிபட்டுய்ந்தனர். திருஞான சம்பந்தப்பெருமான் இத்தலத்துப் பெருமான்மீது ஒரு பதிகம் ஓதியருளியிருக்கின்றார். திருவோத்தூர் இறைவனைப்பாடி ஆண்பனையைப் பெண்பனையாக்கி அருள் பெற்ற பின், பல பதிகளை வணங்கி திருமாகறல் வந்து பதிகம்பாடி, திருக்குரங்கணின்முட்டத்திற் கெழுந்தருளினார். இதைச் சேக்கிழார் சுவாமிகள்,

அங்கண் அமரர் பெருமானைப்
பணிந்து போந்தா டரவினுடன்
பொங்கு கங்கை முடிக்கணிந்தார்
மகிழும் பதிகள் பலபோற்றி
மங்கை பாகர் மகிழ்ந்தருளும்
வயல்மா கறலை வழுத்திப்போய்க்
கொங்கு மலர்நீர்க் குரங்கணின்
முட்டத்தைச் சென்று குறுகினார்

என்று கூறியுள்ளார். சம்பந்தர் பாடிய ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் மாகறலீசர் திருவடிகளைத் தொழுவார், நினைவார் முதலியோருக்குத் தீவினைகள் அகலும் என்று திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

மகப்பேறு வேண்டுவோர் இக்கோயிற் பிரகாரத்தில் அங்கப்பிரதட்சணம் செய்து பிள்ளைப்பேறு பெறுகின்றனர். இத்தலத்தில் திங்கட்கிழமையில் இறைவனை வழிபடுவது சிறந்ததென்று சொல்லப்படுகிறது. காஞ்சிபுரத்தில் 'சர்வதீர்த்த ஸ்நானம், சகஸ்ரேஸ்வர தர்சனம், யமலோகபயம் நாஸ்தி" என்பது போலவே திருமாகறலிலும் "அக்நி தீர்த்த ஸ்நானம், அகஸ்த்யேஸ்வர தர்சனம், யம லோகபயம் நாஸ்தி சிவ லோகம் நிரந்தரம்" என்ற வழக்கு இருக்கிறது. சீகாழி என்னும் திருத்தலத்திற்குப் பன்னிரண்டு பெயர்கள் இருப்பதுபோல இத்தலத்துப் பெருமானுக்கும் பன்னிரண்டு திருநாமங்கள் உள்ளன. அவை அடைக்கலம்காத்த நாதர், நிலையிட்ட நாதர், ஆபத்திற்

காத்தவர், மங்கலங்காத்தவர், மகம்வாழ்வித்த நாதர், அகத்திசர், பரிந்துகாத்த நாதர், ஆபத் சகாயர், தடுத்தாட்கொண்டார், புற்றிடங் கொண்டார், பாரத்தழும்பர் (பாறைத்தழும் பர்), மாகறலீசர் என்பன. இவை ஏற்பட்ட தற்குரிய காரணங்களைத் தலபுராணத்தில் விரிவாகக்கூறப் பட்டிருக்கிறது.

அண்மையில் அற்புத நிகழ்ச்சியொன்று இங்கே நடந்தது இத்தலத்தின் மகிமையை விளக்குகின்றது. சேலம் திரு. சுப்பராய பிள்ளை யென்பார் சிறந்த சிவபக்தர்; நாடோறும் திருமுறைகளை ஓதிவருபவர்; பாடல் பெற்ற பதிகள் 274-ல் 260 தலங்களை வழிபட்டவர். அப்பெரியாரின் 74-ஆம் வயதில் இடறிவிழுந்து கால் எலும்பு முறிந்துவிட்டது. மருத்துவர்கள் அவருக்கு வயதாகிவிட்டபடியால் குணமடையாது என்று கைவிட்டனர். பிள்ளையவர்கள் நம்நாட்டு வழக்கப்படி திருமுறையில் கயிறு சார்த்திப்பார்த்தனர். திருஞானசம்பந்தர் அருளிய திருமாகறல் பதிகத்தின் "விங்குவிளை கழனி" என்று தொடங்கும் முதற்பாட்டு கிடைத்தது. "செங்கண்விடை அண்ணல் அடிசேர்பவர்கள் தீவினைகள் தீருமுடனே" என்ற அப்பாட்டின் ஈற்றடியைப் பற்றுக்கோடாகக் கொண்டார். அப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் கடைசி அடியிலும் தீவினையகலும் என வருவதையும் கண்டார். அவ்வளவில் அன்பர்கள் உதவியுடன் மாகறலை யடைந்தார். எழுந்தும் நிற்கமுடியாத நிலையில் தவழ்ந்தும், நகர்ந்தும், ஊர்ந்தும் திருக்கோயிலை வலம் வந்து ஓராண்டு வழிபட்டார். முறிந்த எலும்பு கூடி நடக்கும் ஆற்றலையும் பெற்றார். அந்தப் பெருமகனாருக்கு இப்போது வயது 84 ஆகிறது. மாகறலுக்கு அருகிலுள்ள வன்பாரத்தான் பனங்காட்டூர் என்ற பாடல்பெற்ற பதியிலிருந்துகொண்டு கோயில் திருப்பணிகளைக் கவனித்து வருகின்றனர். தேவாரத்தால் ஆகாதது ஒன்றுமில்லை யென்பதற்கு இந்த அற்புத நிகழ்ச்சியொன்றே போதும் அன்றோ?

மாகறல் கோயிலைக் கட்டியவன் உறையூரிலிருந்து சோழநாட்டை யாண்ட இராஜேந்திரசோழன் என்று தலபுராணம் கூறுகிறது. மிகப் பழய கோயில் என்று சொல்ல வேண்டும். கர்ப்பக்கிரகத்தின் மேலுள்ளது கஜப்பிரஷ்ட விமானம்; அதாவது யானையின்

மாகறல் அதிகாரநந்தி

பின்புறம் போன்றது. துவாரபாலகர்கள் இரு கைகளுடன் வெகு அழகாகக் காட்சியளிக்கின்றனர். அதிகாரநந்திகேசுவரர் திருவுருவமும் மிக்க வனப்புவாய்ந்தது. அறுபத்துமூன்று நாயன்மார்களுள் காணப்படும் சேரமான் பெருமாள்நாயனார் குதிரை மேலும், சிறுத்தொண்டர் கையில் குழந்தையுடனும் காணப்படுகின்றனர்.

இக்கோயிலில் கர்ப்பக்கிரகச் சுவர்களிலும், முன்மண்டபச் சுவர்களிலும், இவ்வூரிலுள்ள பெருமாள் கோயிலிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றின் சுருக்கம் பின்வருமாறு:—மாகறலீசர் கோயிலிலுள்ளவை—(1) இரண்டாம் குலோத்துங்க சோழனின் பதினொராவது ஆட்சியாண்டில் எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறலிலுள்ள அகத்திசர் கோயிலுக்கு நிலதானம் செய்யப்பட்டது. (2) முதலாம் சுந்தர பாண்டியனின் (கி. பி. 1251–64) ஏழாவது ஆட்சியாண்டில் நிலம் வழங்கப்பட்டது.

"சமஸ்தஜகதாதார" என்ற மெய்க்கீர்த்தியுடன் இக்கல்வெட்டு தொடங்குகிறது. (3) மூன்றாம் இராஜராஜ சோழனின் ஐந்தாவது ஆட்சியாண்டில் உக்கல் என்ற விக்கிரமாபரண சதுர்வேதிமங்கலக் கிராமச் சபையார் நிலம் விற்றதைக் குறிக்கிறது. இப்படிச்செய்தது கி. பி. 1220-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 19-ஆம் நாளில். (4) முதலாம் சுந்தரபாண்டியனின் ஏழாவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் சாமனவரதன் என்பவன் அகத்தீசர் கோயிலைச்சுற்றி மடவிளாகங்களும் திருவீதிகளும் அமைத்தான். (5) இரண்டாம் இராஜராஜனின் (கி. பி. 1146-78) பத்தாவதாண்டுக் கல்வெட்டில் விளக்கெரிப்பதற்காக நிலம் விட்டதை அறிவிக்கிறது. (6) மூன்றாம் குலோத்துங்கனின் முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டில் நந்திவர்மன் என்ற ஒருவனின் வேண்டுகோளின்படி அகத்தீசர் கோயிலுக்கு முன்பு சொந்தமாக இருந்த நிலங்களை மன்னன் மீட்டுக்கொடுத்தான். அவ்வரசனே தேவதான இறையிலியாகக் குலோத்துங்க சோழநல்லூரில் 41 வேலி நிலம் அளித்தான். அந்த ஊரில் ஈராயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தைந்து (2925) கலனே முக்குறுணி நெல் விளையக் கூடிய நிலம் விடுமாறு கோப்பரகேசரிவர்மரான திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்க சோழன் பூஜை மடத்திலிருந்து உத்தரவு பிறப்பித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. மாகறல் வைகுந்தப்பெருமாள் கோயிலில் உள்ளவை:- (1) மூன்றாம் இராஜராஜ சோழனின் இருபத்தெட்டாம் ஆண்டில் திருமேற்கோயில் வீற்றிருந்த பெருமாள் கோயிலுக்கு ஒரு விளக்கு தானம் செய்யப்பட்டது. (2) அதே மன்னனின் அதே ஆட்சியாண்டில் இரண்டு விளக்குகள் அளித்ததைக் குறிக்கிறது. (3) அவ்வேந்தனே மற்றொரு விளக்கு வழங்கியதை அறிவிக்கிறது. (4) அந்த அரசனின் முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மற்றொரு மண்டபம், படிக்கட்டுகள், ஸ்ரீபீடம் இவைகள் கட்டப்பெற்றதைத் தெரிவிக்கின்றது. (5) இராஜராஜசோழனின் ஆறாம் ஆட்சியாண்டில் தாயார் சந்நிதி கட்டப்பெற்றதைக் கூறுகிறது. (6) முருகன் கோயில் ஒன்றைக் கட்டியவன் அண்டம்பாக்கம் கிழான்காழன் ஆவன் என்பதை அறிவிக்கின்றது.

மாகறல் சிவன் கோயிலையன்றி வீற்றிருந்த பெருமாள் கோயில், பொய்யா விநாயகர் கோயில், சிதம்பரேசர் கோயில் முதலியனவும் இருக்கின்றன. பின் இரண்டு கோயில்களைப்பற்றிக் கீழே தலபுராணத்தைப்பற்றிக் கூறுமிடத்தில் காண்க.

திருமாகறல் தலபுராணம் என்ற செய்யுள் நூல் ஒன்று உண்டு. அது கையெழுத்துப் பிரதியாகவே இருக்கிறது. இன்னும் அச்சிடப்பெறவில்லை. அது பாயிரம் உள்பட இருபது சருக்கங்கள் கொண்டது; 642பாடல்களையுடையது. இன்னும், தென்னேரி மு. கந்தசாமி முதலியார் அவர்களால் திருமாகறலீசர் பன்னிரு திருநாமக்கோவை என்ற நூலும் இயற்றப்பெற்றிருக்கிறது. தலபுராணத்தைக் கோயில் தருமகர்த்தர்கள் விரைவில் அச்சிட்டு வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்நூலில் அடங்கியவற்றின் சுருக்கத்தை அன்பர்கள் தெரிந்துகொள்வதற்காகக் கீழே தரப்படுகிறது.

திருமாகறல் தலபுராணப் பாயிரத்தில் ஈசன், அம்பிகை, நடராஜர், பொய்யாமொழி விநாயகர், நால்வர் முதலியோரின் துதிப் பாடல்களும், அவையடக்கமும் உள்ளன. நாட்டுச் சருக்கத்திலும், நகரச்சருக்கத்திலும் தொண்டைநாட்டின் பெருமையும், திருமாகறல் சிறப்பும் விதந்தோதப்படுகிறது.

இராஜேந்திரசோழன் சருக்கம்: உறையூரைத் தலைநகராகக்கொண்டு அரசாண்டான் இராஜேந்திரன் என்ற சோழமன்னன். திருமாகறலில் உள்ள ஒரு பலாமரத்திலிருந்து நாள்தோறும் ஒரு பலாக்கனி கொண்டுவரச்செய்து தில்லைப்பெருமானுக்கு நிவேதனம் செய்துவரும்படி ஏற்பாடு செய்திருந்தான். அப்படி அதைக் கொண்டு போகும் பணியைச் செய்தவர்கள் மாகறல் மறையவர்கள். ஒருநாள் பழம் வழக்கம் போல் வரவில்லை. மன்னன் அது தெரிந்து பெரிதும் மனம் கவன்றான். அமைச்சர்கள் நேரே மாகறல் சென்று தெரிந்துகொள்வது நலம் என்றனர். அப்படியே நால்வகைப் படையுடன் புறப்பட்டு வந்து மாகறலையடைந்தான். இறைவனைத் தொழுது அங்குள்ள ஒரு மாளிகையில் தங்கினன். மறுநாள் அரசவை கூடிற்று. பலாப்பழம் வராத காரணம் யாதென வினவினான், அமைச்சர்

கள் பலாமரம் இருந்த இடத்தைப் பார்த்து வந்து சொல்வதாகச் சென்றனர். அந்த இடம் மண்மூடப்பெற்றிருந்தது; தோண்டிப் பார்த்தனர்; மரத்தை எரித்துவிட்டதாகத் தெரிந்தது. அரசனிடம் வந்து உண்மையை உரைத்தனர். மன்னன் சினந்து அப்படிச் செய்த அந்தணர் சிரங்களைக் கொய்க என ஆணையிட்டான். மந்திரிகள் மறையோரைக் கொலை செய்தல் வேண்டாம் என்றும், அவர்களை மாகறலைவிட்டுக் கடத்தி இரவெல்லாம் நடத்தி விடிகிற இடத்தில் விட்டு வந்துவிடலாம் என்றும் கூறினர். அப்படியே செய்க என்று வேந்தன் விளம்பினன். அவ்வாறே மாகறல் நகரைவிட்டுக் கடத்தப்பட்டனர் அம்மறையவர். அவர்களை அப்படி விட்ட இடம் விடிமாகறல் என்னும் பெயருடன் திருவள்ளூருக்கு அருகே இருக்கிறது. பலாமரம் இருந்த இடத்தில் சிதம்பரேசர் கோயிலிருக்கிறது.

தடுத்தாட்கொண்ட சருக்கம்: இராஜேந்திரன் தன் படைகளுடன் மாகறலைவிட்டுப் புறப்பட்டான். ஊர் எல்லையைக் கடக்கும் போது ஒரு அழகிய பொன் உடும்பைக் கண்டான். அதைத்தொடர்ந்து செல்லவே அது ஒரு புதரின் கண்மறைந்தது. புதர்களை வெட்டிப்பார்க்கப் புற்று ஒன்று தோன்றிற்று. அதைத்தோண்ட முற்படும்போது இரத்தம் பீறிட்டெழுந்தது. மேலும் தோண்டிப்பார்க்கவே சிவலிங்கம் காணப்பட்டது. மன்னன் மனத்துயர் அடைந்து இறைவனை இறைஞ்சினன். அப்போது விநாயகப்பெருமான் அந்தணச் சிறுவன் கோலம்கொண்டு அரசன் முன் தோன்றினர். அரசன் உடும்பு கண்ட அதிசயத்தைக் கூறினன். "சிவபெருமான் உன்னைத் தடுத்தாட்கொள்வதற்கே இவ்வாறு செய்தனர்" என்றும், இறைவனுக்கு இவ்விடத்தே கோயில் எழுப்பும்படியும் கூறி கணபதி தன் சுய உருவத்துடன் காட்சியளித்து மறைந்தார். அவர் பெயர் பொய்யாமொழி விநாயகர். அவருடைய கோயில் மாகறலில் சேயாற்றங்கரைமேல் இருக்கிறது. சோழமன்னனும் அவ்வண்ணமே சிவபெருமானுக்குக் கோயிலைக் கட்டினன்.

பிரமனுபதேசச் சருக்கம், திரிபுரதகனச் சருக்கம், மங்கலங்காத்தசருக்கம் இவைகளில் பிரமன் உபதேசம் பெற்றது, சிவபெருமான் திரிபுரத்தை எரித்தது, மன்மதன் எரியவும் இரதிக்கு அருள்புரிந்தது முதலியன கூறப்பெறுகிறது. மலையன் மாக்கிரகன் சருக்கத்தில், மலையன், மாக்கிரகன் என்ற இரண்டு அசுரர்கள் மாகறல் பெருமானை வழிபட்டு, மாக்கிரகன் என்னும் பெயரால் இவ்வூர் வழங்கவேண்டும் என்று வரங்கேட்டதையும் அவ்வாறே இறைவன் அருளியதையும் சொல்லப்பட்டிருக்கிறது. மாக்கிரகன், மாக்கிரகம், மாக்கிரம் என்று மருவி மாகறல் ஆயிற்றென்பர். சம்பந்தர் தேவாரத்தில் மாகறல் என்றே குறிக்கப்பெறுகிறது.

மற்றும், வேள்வி காத்தருள் சருக்கம், சண்முகன் வேல் கரதலமுற்ற சருக்கம், குறுமுனி உபதேசச்சருக்கம், பரிந்துகாத்தருள் சருக்கம், வேதநூபுரச்சருக்கம், மனேலயம் முடித்த சருக்கம், கண்டகவயிரிகிராதகி முத்திபெற்ற சருக்கம், தெய்வயானை திருமணச்சருக்கம், தீர்த்தச்சருக்கம், திருமால் மகிமைச்சருக்கம், யாத்திரைச்சருக்கம் முதலியவைகளில் பல புராணச் செய்திகள் விரிவாகக் கூறப்பெற்றிருக்கின்றன.

பூமலியுந் திசைமுகனும் நெடுமாலும் மகபதியும்
புத்தேள் யாரும்
காமலியும் பூதலத்தும் பாதலத்தும் மீதலத்தும்
வாழ்கின் றோரும்
தேமலியும் மலர்கொடுபூ சித்தருள அருள்புரியுந்
தேவ தேவன்
மாமலியும் மாகறலின் இலிங்கமதாய் வளர்
வணங்கு வோமே [வோனை

—மாகறல் தலபுராணம்.

சென்னை: மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலில் பன்னிருதிருமுறை விழா 8—8—62 முதல் 19—8—62 வரை நடைபெற்றது. பன்னிருதிருமுறைகளைப் பற்றியும் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

மேலதிருமண்ஞ்சேரி: மத்யார்னேசுவரர் கோயிலில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 20—8—62-ல் நடைபெற்றது.



மாகறல் கோயில் முன்தோற்றம்

திருமருகல்: இரத்தினதிரீசுவரர் கோயிலில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 6—8—62-ல் நடைபெறும்

காஞ்சிபுரம்: கச்சபேசுவரர் கோயிலில் 12—8—62 முதல் ஒவ்வொரு ஞாயிறும் மாலை 6 மணி முதல் 8-30 மணி வரை திரு. மா. சுந்தரமூர்த்தி முதலியார் அவர்களால் சமயச்சொற்பொழிவு நடைபெற்று வருகிறது.

திருமருகல்: வரதராசப்பெருமாள் கோயிலில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 2—9—62-ல் நடைபெற்றது.

திருவொற்றியூர்: தியாகராஜப்பெருமாள் கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 6—9—62-ல் நடைபெறும்.

திருவண்ணமலை: அருணசலேசுவரர் கோயிலில் கார்த்திகைத்தீப விழா 27–11–62 முதல் 13—12—62 வரை நடைபெறும். 9—12—62 மாலை 6 மணிக்கு அண்ணமலையார் மகாதீபம்.

திருவல்லம்: வில்வநாதீஸ்வர கோயிலில் புதிதாக அமைக்கப்பெற்ற மின்ஒளி விளக்குகளை திருமதி சௌந்திரம் கைலாசம் அவர்கள் தலைமையில் இந்து சமய அறநிலையத் துறை துணை ஆணையர் திரு, டி. இராமலிங்க ரெட்டியார், எம்.ஏ., பி.எல்., அவர்கள் 15—8—62-ல் ஏற்றிவைத்தார்கள்.

காமட்சிபுரம்: (ரெட்டியார் சத்திரம்) கோபிநாதசுவாமி கோயிலில் 23, 24-8-62 தேதிகளில் உறியடி உற்சவம் நடைபெற்றது.

சிதம்பரம் அனந்தீசுவரர் கோயில்

செல்வ நெடுமாடஞ் சென்று சேண்ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே

—திருஞானசம்பந்தர்.

பொய்யினைத் தவிர விட்டுப்
புறமலா அடிமை செய்ய
ஐயநீ யருளிச் செய்யாய்
ஆதியே யாதி மூர்த்தி
வையகந் தன்னின் மிக்க
மல்குசிற் றம்ப லத்தே
பையநின் றுடல் காண்பான்
பரமநான் வந்த வாறே

—திருநாவுக்கரசர்.

மடித்தாடு மடிமைக்க ணன்றியே
மனனேநீ வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடுங் கரதலத்திற் றமருகமு
மெரியகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே

—சுந்தரர்.

இறைவன் உறைந்தருளும் எல்லா இடங்களையும் பொதுவாகக் கோயில் என்ற சொல்லால் குறிக்கிறோம். சிறப்பாகப் பேசும்போது சைவசமயத்தினர் கோயில் என்பதைச் **சிதம்பரம்** என்றும், வைணவர் கோயில் என்பதைத் **திருவரங்கம்** என்றும் கொள்ளுவர். தரிசிக்க முத்திதருவது சிதம்பரம். பஞ்சபூதத்தலங்களில் ஆகாசத்தலம். ஐந்து சபைகளில் ஒன்றான பொற்சபை. ஆண்டவன் நவதாண்டவங்களில் ஒன்றான ஆனந்ததாண்டவம் நிகழ்த்திய இடம். தேவார திருவாசகத் திருமுறைகள் வெளிவரக் காரணமாயிருந்த பெரும்பதி. இத்தலத்திற்குப் பல பெயர்கள் உண்டு. அவற்றில் பெரும்பற்றப் புலியூர், தென்புலியூர், புலியூர் என்ற பெயர்களும் உள்ளன. அதற்குக் காரணமும் இருக்கிறது. முனிவர் ஒருவர் இறைவனைப் பூசித்துவந்தார். வண்டுகள், தேனீக்கள் மலர்களை மொய்ப்பதற்கு முன்பே பூக்களை யெடுக்க வேண்டுமென்று எண்ணினார். விடிவதற்கு முன்பே மலர்பறிக்க உதவுவதற்காக இறைவனைத் தமக்குப் புலிக்கண்களும், புலிக்கால்களும் வேண்டிப் பெற்றார். அதனாலேயே அவருக்கு, **புலிக்கால்முனிவர்** அல்லது **வியாக்கிரபாதர்** என்ற பெயர் ஏற்பட்டது. அவர் பூசித்த தலத்திற்கும் **புலியூர்** என்றபெயர் உண்டாயிற்று. சிதம்பரத்தில் அவர் இருந்து தவம் செய்த இடம் **புலீச்சரம்** என்பது. இப்போது **இளமையாக்கினர் கோயில்** என்று வழங்கி வருகிறது.

புலிக்கால் முனிவருக்குத் துணையாக மற்றொரு முனிவரும் சிதம்பரம் வந்தடைந்தார். அவர் வரலாறு பின்வருவது:—அரவணையில் அறிதுயிலமர்ந்திருந்த கருணைமாமுகில் ஒருநாள் திடீரென எழுந்து சற்றுநேரம் ஆனந்தக்கண்ணீர் சொரிந்து பின்னர் பள்ளிகொள்ளச் சென்றார். இதைப் பார்த்த அவருக்குப் பாயலாய் அமைந்த ஆதிசேடன் திருமாலை அதன் காரணம் என்னவென்று சொல்லும்படி வேண்டிக்கொண்டார். சிவபெருமான் ஆடிய நவதாண்டவங்களில் ஒன்றாகிய ஆனந்ததாண்டவத்தைக் கண்டுகளித்தேன் என்று பரமன் கூறினார். "அப்படியானால் நானும் அந்த நடனத்தைக் கண்டு மகிழ்வதற்கு விடைகொடுத்தனுப்பியருள வேண்டும்" என்று பரந்தாமனிடம் குறையிரந்தார் ஆதிசேடன். "அப்படியே ஆகட்டும். ஆனால் நீ ஆயிரம் தலையுடன் போகாமல் ஐந்து தலையுடன் போகவேண்டும். அத்திரி முனிவரும் அவர் மனைவி அனுசூயையும் புத்திரப்பேறு வேண்டித் தவம் செய்கின்றனர். அனுசூயை நீராடிக் கரையேறியவுடன் அஞ்சலியாகக் கைகூப்பி நிற்கும்போது அவள் கைகளில் ஐந்துதலைப் பாம்பாய்ச் சென்றடைவாய். பயந்து கீழே விட்டுவிடுவாள். அதனால் உனக்குப் **பதஞ்சலி** என்றபெயர் உண்டாகும். பின்னர் நீ நாகலோகம் சென்று அங்குள்ள ஒரு மலைக்கருகிலுள்ள துவாரத்தின் வழியாகச் சென்றால் தில்லைவனம் சேர்வாய். அங்கு ஒரு ஆலமர நிழலில் இலிங்கத்தைப் பூசித்துக்கொண்டு வியாக்கிரபாத

முனிவர் நம்முடைய நடன தரிசனம் காண வேண்டித் தவமியற்றுகிறார். நீயும் அவருடன் போயிருந்தால் தைப்பூசத்தில் வியாழக்கிழமையோடு கூடும் சித்தயோக நன்னாளில் நாம் நமது ஆனந்தக்கூத்தைக் காண்பிப்போம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். இறைவன் அருளியபடியே ஆதிசேடன் பிலத்துவாரத்து வழியாகத் தில்லை வனம் அடைந்தார். அவர் அவ்வாறு வெளிப்பட்ட இடம் இப்போது **நாகசேரிகுளம்** என்ற பெயரால் வழங்குகின்றது. இவ்விடம் சிதம்பரத்தின் மேற்குக் கடைசியில் இருக்கிறது.

பதஞ்சலி முனிவர் வியாக்கிரபாதரைக் கண்டு பின்னர் ஒரு திருக்குளம் தோண்டி அதன் மேல்கரையில் இலிங்கமூர்த்தியை அமைத்து வழிபட்டுக் கொண்டிருந்தார். ஆண்டவன் கூறியபடி தாண்டவத் திருநாளும் வந்தது. பதஞ்சலி வியாக்கிரபாதர் என்ற இருமுனிவர்களும் எம்பெருமானின் ஆனந்த அற்புதத் திருக்கூத்தைக்கண்டு பேரின்பம் பெற்றனர். பதஞ்சலியாரை வேண்டும்வரம் யாதென்று கூத்தப்பெருமான் கேட்க, முனிவரும் "எக்காலத்தும் இப் பொன்னம்பலத்தில் ஆனந்தக்கூத்தை ஆன்மாக்களுக்குக் காட்சி கொடுத்தருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். அவ்வண்ணமே இன்றும் அம்பலத்தில் எம்பெருமான் ஆடி அருளுகிறார்.

ஆதிசேடன் என்றால் எல்லாப்பொருள்களும் அழிந்தாலும் தான் அழியாமல் மிச்சமாய் (சேடமாய்) இருப்பவன் என்று பொருள். **அனந்தன்** என்றாலும் அந்தம் அல்லது கடைசி அதாவது அழிவு இல்லாதவன் என்று பொருள். அந்த அனந்தன் தங்கியிருந்து இறைவனை இலிங்க வடிவத்தில் ஆன்மார்த்த வழிபாடு செய்த இடமே **அனந்தீசுவரன் கோயில்** என்பது. இது சிதம்பரத்தின் மேற்குக் கோடியில் இருக்கிறது. கோயில் கிழக்குநோக்கியது. சந்நிதிக்கெதிரே **சிவகங்கை** என்ற தீர்த்தம் இருக்கிறது. பின்புறம் நாகசேரிகுளம் இருக்கிறது. இந்த இரண்டு தீர்த்தங்களிலும் தில்லைப்பெருமான் தை அமாவாசையன்று எழுந்தருளித் தீர்த்தம் கொடுக்கின்றார். பதினைந்து நாட்களுக்குப் பின்னர் பதஞ்சலி முனிவருக்காக ஆனந்தக் கூத்தையே இயற்றுகிறார். இவ்விழா இன்றும் நடைபெற்று வருகிறது.

பதஞ்சலிமுனிவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்தவராயினமையின் அனந்தீசுவரன் கோயில் மிகப் பழம்பெருமை வாய்ந்தது. பின்னர் சோழமன்னர்களால் கட்டப்பெற்றது. இப்போது முழுவதும் புதுத்திருப்பணி நடைபெற்று வருகிறது. 800 ஆண்டுகட்கு முற்பட்ட கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ளன. அவற்றைத் தனியே எடுத்துப் பாதுகாத்து வருகின்றனர்.

"பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த" எனவும், "புலிமுனியும் பதஞ்சலியும் கண்டுதொழப் புரிசடையார் குலாவு நடந்தருந்தில்லை" எனவும் உமாபதி சிவனார் போற்றியுள்ளது ஈண்டு நினைவு கூறற்பாலது.

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

—திருநாவுக்கரசர்.

கொல்லங்குடி அரியாகுறிச்சி: வெட்டுடையார் காளியம்மன் கோயிலில் 2—8—62-ல் பூச்சொரி விழா நடைபெற்றது.

கோவில்குளம்: தென்னழகர் கோயிலில் ஆடிப்பெருந்திருவிழா 4—8—62 முதல் 14—8—62 வரை நடைபெற்றது.

சேலம்-அம்மாபேட்டை: பலபட்டரை மாரியம்மன் கோயிலில் ஆடித்திருவிழா 24—7—62 முதல் 31—7—62 வரை நடைபெற்றது.

திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்.]

(முன் தொடர்ச்சி)

திருமறைக்காடு செல்லல்

திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையில் இறைவன்பால் படிக்காசு பெற்று, வற்கடக்காலத்தில் அடியவர்கட்கு உணவளிக்க, அவ்வுணவு இருவர், திருமடங்களிலும் அளவற்ற அடியவர்கள் வந்து உண்ணவும் தொலையாது பெருகி வந்தது. அதனால், உலகத்தார் மிக்க வியப்புக் கொண்டு அவ்விரு பெருமக்கள் தம் பெருமையைப் பெரிதும் உணர்ந்து போற்றினர்.

இவ்வாறு இரு பெருமக்களும் திருவீழிமிழலையில் அமர்ந்திருக்கும் நாட்களில், காலக் கொடுமை மாறி எங்கும் மழை மிகப் பெய்தது. அதனால், நிலம் முழுதும் வெப்பம் நீங்கி விளைவு பெருகிற்று. ஆகவே, மக்கள் அனைவரும் உணவுப் பஞ்சம் நீங்கப்பெற்று இனிதே உண்டு உடுத்து வாழலாயினர். அதனால், இருபெரு மக்களும் பிற தலங்களை வணங்க நினைத்துத் திருவீழிமிழலைப் பெருமானை வணங்கிப் பிரியா விடைபெற்றுப் புறப்பட்டுத் திருவாஞ்சியத்தை வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்தார்கள்.

திருவாஞ்சியம்

திருவாஞ்சியத்திற்குக் கிடைத்துள்ள திருநாவுக்கரசு நாயனார் திருப்பதிகம் ஒன்றே. அது, "படையும் பூதமும்" எனத் தொடங்கும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம். அதனுள் ஏழு திருப்பாடல்களே கிடைத்துள்ளன. அத்திருப்பதிகம் இறைவனை யேத்துதலே அல்லலை அகற்றுதற்கு வழி என்பதனை வலியுறுத்தருளுவது.

மேலும் அது, திருவாஞ்சியம் ஒழுக்கம் குன்று உயர்வுடை அந்தணர்கள் வாழ்வது, திருமால் சூரியன் அக்கினி இயமன் என்பவர்களால் வழிபடப்பட்டது என்னும் பொருள்களையும் அமைத்தருளியது,

"அற்றுப் பற்றின்றி யாரையும் இல்லவர்க்கு
உற்ற நற்றுணை யாவான் உறைபதி"

என்னும் அரும்பொருளும் அதன்கண் அமைந்து விளங்குகின்றது. 'பற்று ஒன்றும் இல்லாதவாறு அற்று, களைகணாக ஒருவரையும் இல்லாது தன்னையே அடைந்தார்க்கு உற்ற நற்றுணையாகின்றவன் இறைவன்' என்பது இதன் பொருள்.

திருவாஞ்சியத்தை வணங்கிய பின் இரு பேராசிரியர்களும் மற்றும் பல தலங்களை வணங்கிக்கொண்டு திருமறைக்காட்டை அடைந்தார்கள்.

மறைக்கதவம் திறப்பித்தல்

அடைந்து அடியார்கள் புடைசூழ இருவரும் திருக்கோயிலினுள் புகுந்து வலம்வந்து திருமுன்பே அடைந்தனர். அங்கு நேர்முக வாயிற்கதவு திறக்கப்படாமல் அடைக்கப்பட்டிருந்தது. அதற்குக் காரணம், * பழைய வேதங்கள் ஒருகால் அங்கு வந்து இறைவனை வழிபட்டு, நீங்கிச் செல்லும்பொழுது, தங்கள் மந்திர வலியினாலே அக்கதவினை அடைத்துச் சென்றமையும், அதன் பின்பு அம்மந்திரவலி பிறரால் நீக்க வியலாது இருந்தமையுமே யாகும். எனவே, மக்கள் வேறொரு பக்கம் வாயிலை உண்டாக்கி, அதன் வழியாகச் சென்று இறைவனை வணங்கி வந்தனர்.

இவ்வரலாற்றினை அங்குள்ளார் சொல்ல, நாயன்மார் இருவரும் கேட்டருளினார்கள். அப்பொழுது திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருநாவுக்கரசரை நோக்கி,

* 'பழைய வேதங்கள்' என்றல், அவற்றை இயற்றிய பெரியோர்களையே என்பது, இனி இங்கு அதனைத் திறக்கவும் அடைக்கவும் செய்பவர் இவ்விரு நாயன்மார்களேயாகின்ற நிகழ்ச்சியானே யறிக. இதனால், வேதங்களை இறைவன் உலகத்தார்க்கு அருளுதல், பெரும்பான்மையும், கரணங்கள் பசுத்தன்மை நீங்கிப் பதித்தன்மையாகப் பெற்ற பெருமக்கள் வாயிலாகவேதான் என்பது நன்குணரப்படும்.

'அப்பரே, அடியார் பலருக்கும் இறைவனை நேரே சென்று இறைஞ்சுதற்கு இக்கத வடைப்புத் தடையாய் உள்ளதன்றோ?நாமும் இதனால் தடையுண்டு வேறு வழியாற் செல்லாது நேரே சென்று இறைவரை வணங்கவும், அதனாலே மற்றைய அடியார்களும் தடை நீங்கப்பெறவும் இக்கதவம் திருக்காப்பு நீங்கித் திறக்குமாறு நீர் திருப்பதிகம் பாடியருளும்' என்று அருளிச்செய்தார். பிள்ளையார் தம்மாட்டுள்ள பேரன்பினால் இவ்வாறு அருளிச்செய்தபொழுது, நாவுக்கரசர் அங்ஙனமே செய்தருளுவாராய், "பண்ணினேர் மொழி யாளுமை பங்கரோ" என்றெடுத்து, ஒரு திருக்குறுந்தொகைத் திருப்பதிகத்தைப்பாடியருளினார்.

இது போழ்து நாயன்மார் இருவரும் ஒருங்கே எழுந்தருளிவந்திருத்தலால், ஏனைய தலங்களிற் போலவே ஈண்டும் அவ்விருவர் திருப்பதிகத்தின் பயனையும் ஒருங்கு அனுபவிப்பாராய், இறைவர் திருக்கதவம் திறப்பியாதிருந்தார். ஆயினும், நாவுக்கரசர் தமது திருப்பதிகம் முடியும் எல்லையை அறுகவும் இறைவர் திருவருள் புரியவில்லையே என நினைந்து, இறுதித் திருப்பாடலில்,

"அரக்கனை விரலால் அடர்த்திட்டநீர்
இரக்கம் ஒன்றிலீர் எம்பெருமானிரே"

என வலியுறுத்து வேண்டினார். அதனால், இறைவர் உடனே திருவருள்புரிய, திருப்பதிக முடிவில் கதவம் திருக்காப்பு நீங்கித் திறந்தது. உடனே மறைக்காட்டுப் பெருமான் மாண்புறு வடிவம் தோன்ற, ஞான முனிவராம் பிள்ளையாருடனே நாவுக்கரசர் நிலத்திலே வீழ்ந்து பணிந்தார். தேவரது ஆர்ப்பொலியும், முனிவர்களது வேதமுழக்கமும் கடலொலியினும் மிக்கெழுந்தன. அடியவர் கூட்டம் களிப்புமிக்கது. ஆளுடைய அரசுகளும், ஆளுடைய பிள்ளையாரும் நேரே திருமுன்பு சென்று வணங்கித் திருப்பதிகம் பாடி, இறைவர் செய்த திருவருள் திறத்தை நினைந்து என்பும் கரைய மனம் நெக்குருகிக் கும்பிட்டு, அரிதில் வெளிப்போந்தார்கள்.

போந்த பின்னர் நாவுக்கரசர், ஞானசம்பந்தரை நோக்கி, மறைக்கதவம் நம்பெருமான் அருளால் திறக்கப்பட்டது. இனி, அடைத்தல் வேண்டுமன்றோ! அவ்வாறு அடைக்குங்கால் முன்போலத் திறத்தலும் அடைத்தலும் மறைகட்கே உரியனவாகாமல் யாவர்க்கும் இயலும் வகையில் அடைக்குமாறு நீர் இறைவரைப் பாடுவீராக' என்று அருளிச்செய்தார். அது கேட்ட பிள்ளையார் அங்ஙனமே திருப்பதிகம் பாடினார். அப்பொழுது முதற்றிருப்பாட்டிற்றானே கதவம் திருக்காப்புச் செய்து கொண்டது. அதைக் கண்ட இருபெருமக்களும், 'நாம் நினைத்தவாறே நம்பெருமான் திருவருள் செய்யப் பெற்றோம்' என்று சொல்லி வணங்கினர். பின்பு பிள்ளையார் திருப்பதிகத்தை முடித்து வணங்கினார். அன்று முதல் அக்கதவம் அனைவரும் திறக்கவும், அடைக்கவும் உரியதாயிற்று.

இவ்விரு பேராசிரியர் தம் அருண்மொழிகள் மறைகளாதலை உலகர்க்குக் காட்சியளவையாலும் இனிதுணர்த்துதற் பொருட்டே இந்நிகழ்ச்சி இறைவன் திருவருளால் நிகழ்விக்கப்பட்டதென உணர்க. இதனைக் கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் அவர்களும், இத்தலக் குறிப்புக் கூறுமிடத்தில், 'வேதங்கள் பூசித்துத் திருக்காப்பிட்ட திருக்கதவினைத் திருநாவுக்கரசு நாயனார் திறந்தும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அடைத்தும் தேவாரத் திருவருட்பாக்கள் தமிழ் வேதமாம் என்று வற்புறுத்திக் காட்டிய வளநகர்' என்று, தமது திராவிடவேதத் திரட்டில் அறிவுறுத்துள்ளார்கள்.

இவ்வற்புத நிகழ்ச்சியைக் கண்ட அடியார்களெல்லாம் பெரிதும் அதிசயித்து, அன்பின் பெருக்கால் உடல் மயிர்சிலிர்க்க, கண்களில் நீர்பெருக, யாண்டும் தமக்கு நிகரில்லாதவர்களாகிய இருபெரு மக்கள் திருவடிகளிலும் வீழ்ந்து வணங்கினார்கள். அப்பால் இருவரும் இரு திருமடங்களில் அடியார்களுடன் சென்று தங்கினார்கள்.

திருநாவுக்கரசு நாயனார் அன்றிரவு மறைக்கதவம் அரிதில் திறக்கும்படி தாம் பாட, பிள்ளையார் அஃது எளிதில் அடைக்கும்படி பாடியதை நினைந்து, 'இறைவரது திருவுள்ளம் பிள்ளையாரது திருப்பதிகத்தையும் கேட்பதாய் இருந்ததை அறிந்துகொள்ளாது, எனது பதிகத்திற்குள்ளே திறந்தருளுமாறு, 'இரக்க மொன்றிலீர் எம்பெருமானிரே' என வலியுறுத்து வேண்டி மிகைசெய்தேன், இதற்கு இனி நான் என் செய்கேன்' என்று, அருள்நெறி பிழைத்தமைக்குப் பெரிதும்

அஞ்சி, மிக்க கழிவிரக்கங்கொண்ட உணர்வோடே, திருமடத்தின் ஒரு பக்கத்தில் தனித்துச் சிறிது துயில்கொண்டருளினார். இஃது அவரது அருள்நெறி பிழையா வாய்மையால் நிகழ்ந்தது. அருள்நெறி பிழையா தொழுகுதலை நம் பெருமக்கள் அருள் வாழ்க்கையிற் போல, வேறு எவர் வாழ்க்கையில் நாம் காண இயலும்! அருமை! அருமை!! பெரிதும் அருமை!

தாம் அயர்த்துச் செய்த அதனை இறைவர் தமது பெருங்கருணையால் நன்றெனவே உடன்பட்டுத் திருவருள்புரிந்து அமையவும் தாம் அமையாராய், "தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்—கொள்வர் பழிநாணு வார்" (குறள் 433) என்பதற்கு இலக்கியமாய்க் கவலையுறுகின்ற நாயனாருக்கு அக்கவலையை, நீக்கி அமைதியுண்டாக்க வேண்டுவது அவ்விறைவருக்கு இன்றியமையாக் கடனாயிற்று, அடியவரைத் தாங்குதல் அவன் கடனே யன்றோ! அதனால், மறைக்காட்டுப் பெருமானாரையே மனத்துட்கொண்டு, அவர் முன்பு தாம் செய்ததை நினைத்து உறங்குகின்ற வாகீசரது கனவில் இறைவர் தமது உண்மைக்கோலம் விளங்கத் தோன்றி, 'நாம் வாய்மூர்த்தலத்தில் இருப்பேமாவேம்; எம்மைப் பின்பற்றிவா' என்று அருளிச்செய்தார்.

நாயனார் துயிலுணர்ந்து;

"எங்கே யென்னை யிருந்திடம் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாஎன்று போனார்அ தென்கொலோ"

என்னும் திருப்பாடலை அருளிச்செய்து, 'தொடர்ந்து செல்லவேண்டும் என்பது எங்கள் பெருமானது ஆணையாயின், யான் அவ்வண்ணம் இப்பொழுதே செல்வேன்' என்று எழுந்து திருமறைக்காட்டைவிட்டுப் புறப்பட்டுத் திருவாய்மூரை நோக்கி நடந்தருளினார்.

அதுபோது இறைவர் நாயனாரது கனவிற்றோன்றிய கோலத்தோடே தோன்றி நாயனாருக்கு முன்னே நடந்தருளினார். அதனைக் கண்ட நாயனார் அவரை அணுகிவிட விரைந்து நடந்தார். ஆயினும், நாயனார் தம்மை அணுக இயலாதவாறு இறைவர் சேய்மையாளராயே நடந்தார். அண்மையில் அகப்படுவார்போலக் காட்டி அகப்படாது அகல்கின்ற இறைவரை 'அணுகிவிட்டோம்; அணுகிவிட்டோம்' என்று நாயனார் விரைந்து விரைந்து நெடுந்தொலைவு சென்றார். இவைகளையும், இனிப் பின்னர் இங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் நாயனார் மேற்காட்டிய திருப்பாடலை முதலாகக்கொண்ட திருக்குறுந்தொகைத் திருப்பதிகத்தில் அப்பொழுதே பாடிக்கொண்டு சென்றார். ஆதலின், இத்திருப்பதிகம் இந்நிகழ்ச்சியை நம் கண்முன் நிகழ்வதுபோல் இனிது காட்டியருளுகின்றது. அதன்கண், தாம் இறைவர் பின் விரைந்து சென்றமையை ஓடினதாகவே அருளிச்செய்துள்ளார். அங்ஙனம் ஓடியும் இறைவரை அணுகப்பெறாமை நாயனாருக்குக் கையிற்கிடைத்த அரிய தேவாமிர்தம் வாயில் உண்ணக்கிட்டாதது போன்ற நிலையை உண்டாக்கியது.

இந்நிலையில் இறைவர் தொலைவில் இருந்த நிலை நீங்கி அருகில் அகப்படுவர் போலத் தோன்றி, ஓர் அழகிய கோயிலைக் காட்டி அதனுள் மறைந்தருளினார்.

இதற்குள் திருஞானசம்பந்தர், அப்பர் தம்மிடம் ஒன்றும் அறிவியாது தனித்துச் சென்றமையை அறிந்து, 'அவ்வாறு அவர் சென்றதற்குச் சிறந்த காரணம் இருத்தல் வேண்டும்; ஆதலின், நாம் விரைந்து சென்று அவரை அடைதலே செய்யத்தக்கது' என நினைந்து விரைவிற் புறப்பட்டுச் சென்று, இறைவர் மறைந்த காரணத்தால், மேலே செல்லமாட்டாது திகைத்து நிற்கின்ற திருநாவுக்கரசரை நெருங்கச் சென்றார். அதனைக் கண்ட நாவுக்கரசர், 'தமது திருவுளப் பாங்கினை அறியாது மறைக்கதவைத் திறக்குமாறு வலிமை எனக்காயின் எம்பெருமானார் தம்மை யான் எய்தாதவாறு மறைத்தல் கூடும்; அருள் நெறியிற் பிழையாது நின்று அடைக்கப் பாடிய பிள்ளையாருக்கு அவர் தம்மை எங்ஙனம் மறைத்தல் கூடும்?' என அத்திருப்பதிகத்துள் ஒரு திருப்பாடலில் பாடியருளி, மேலும் திருப்பதிகத்தை முடித்தருளினார். அப்பொழுது ஞானசம்பந்தர் வந்து உடன் எய்த, இறைவர் முதலில் அவருக்குக் காட்சியளித்தருளினார். அதனை ஞானசம்பந்தர் கண்டு, 'அப்பரே, நம் பெருமான் காட்சி வழங்குதலைக் காண்மின்' என ஒரு திருப்பதிகத்தால் இறைவரது காட்சியின் இயல்பை இனிது

பாடிக் காட்டியருள, அதன்பின் இறைவர் திருநாவுக்கரசருக்கும் தமது காட்சியை வழங்கினார். அதனைக் கண்ட நாவுக்கரசர் பெருமகிழ்வுற்று, "பாட அடியார் பரவக் கண்டேன்" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தைப் பாடி வணங்கினார். அத்திருப்பதிகம் இறைவரை நேரே கண்டு அவரது திருக்காட்சியின் சிறப்பை இனி தெடுத்து இயம்பியருள்வது. அம்முதற்றிருப் பாடல் வருமாறு:

பாட அடியார் பரவக் கண்டேன்;
பத்தர் கணங்கண்டேன்; மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்;
அங்கை அனல்கண்டேன்; கங்கை யாளைக்
கோடல் அரவார் சடையிற் கண்டேன்;
கொக்கி னிதழ்கண்டேன்; கொன்றை கண்டேன்;
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்;
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே.

இங்ஙனம் தமக்கு அகப்படாது சென்று ஒரு திருக்கோயிலுள் மறைந்த இறைவர், திருஞானசம்பந்தருக்கு முதலிற் காட்சியளித்து, அவர் திருப்பதிகம் பாடிக் கண்டு தமக்குக் காட்ட, அதன் பின்னர்த் தமக்குக் காட்சியளிக்கத் தாம் கண்டமை முன்பு திருஞானசம்பந்தரது திருப்பதிகத்தைக்கேளாது, தமது திருப்பதிகத்திற்குள்ளே மறைக்கதவம் திருக்காப்பு நீக்கிக் காட்சி வழங்குமாறு வலியுறுத்து வேண்டிய செயலுக்குத் தீர்வாய், நாயனாரது உள்ளத்திற்கு அமைதியைத் தந்ததென்க.

இவ்வாற்றான் மறைக்கதவம் திறத்தற்குத் திருஞானசம்பந்தரது திருப்பதிகமும் இன்றியமையாதது என இங்கு உணர்வித்தமையானும், திருஞானசம்பந்தருக்கு வாசி பட்டகாசை வழங்கி, திருநாவுக்கரசரது கைத்திருத்தொண்டும் இன்றியமையாதது எனத் திருவீழிமிழலையில் உணர்வித்தமையானும் இவ்விருவர் ஆசிரியரும் சைவ சமயத்திற்கு இருகண்களாமாறு இறைவன் ஒரு காலத்தே இவண் தோற்றுவித்து ஒருங்குகூடி உலாவச் செய்தான் என்பதும், அதனான் இவ்விருவர் ஆசிரியரோடும், இவர் தம் திருமுறைகளோடுமே சைவ சமயம் குறைவின்றி நிரம்பி நிற்பதாம். அதனால், பிற ஆசிரியர்களும் அவர்கள் வாய்மொழிகளும் சைவ சமயத்திற்கு மேலும் அமைந்த செல்வங்களாம் என்பதும் இனிது விளங்கும். இவற்றையெல்லாம் நுனித்துணர்ந்தன்றோ, சேக்கிழார் நாயனார், இவ்விருவரையும், "பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியக்கண் இரண்டு" என்று அருளிச்செய்தார்!

இங்ஙனம் இறைவர் எழுந்தருளித் தமது மனக்குறையைப் போக்கியருளினமையால், திருநாவுக்கரசர் கவலை நீங்கிக் களிப்பெய்தினார். இறைவரும் இருவரது திருப்பதிகங்களையும் ஏற்றுக்கொண்டு மறைந்தருளினார். அப்பால் இருவரும், தாம் புறப்பட்டபடி திருவாய்மூருக்கே சென்று, அங்குக் கோயில் கொண்டுள்ள பெருமானை வணங்கித் திருப்பதிகம் பாடி, அத்தலத்திலே தங்கியருளினார்கள்.

பின்னர் மீண்டும் திருமறைக்காட்டீசர் மீதுள்ள அன்பு ஆராமையால், வாய்மூர்ப் பெருமானை வணங்கி விடைபெற்றுக் கொண்டு திருமறைக்காட்டிற்கு வந்து, அப்பெருமானை வணங்கிக்கொண்டு அங்கே எழுந்தருளியிருந்தார்கள். (தொடரும்)

ஆத்தானூர்: வீரமாகாளியம்மன் கோயிலில் பிரம்மோற்சவம் 13—7—62 முதல் 22—7—62 வரை நடைபெற்றது.

திருவேற்காடு: தேவி சுகுமாரி அம்மன் கோயிலில் ஆடித்திருவிழா 22—7—62 29—9—62, 5—8—62, 12—8—62, 19—8—62, 26—8—62, 2—9—62 தேதிகளில் நடைபெற்றது.

சேலம் செவ்வாய்ப்பேட்டை: மாரியம்மன் கோயிலில் ஆடிப்பெருவிழா 24—7—62 முதல் 14—8—62 வரை நடைபெற்றது.

சேலம் அம்மாப்பேட்டை: மாரியம்மன் கோயிலில் ஆடிப்பெருவிழா 21—7—62 முதல் 13—8—62 வரை நடைபெற்றது.

மன்னார்குடி: செங்கமலத்தாயார் கோயிலில் ஆடிப்பெருவிழா 26—7—62 முதல் 3—8—62 வரை நடைபெற்றது.

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

திருக்கச்சி நம்பிகளிடத்தே கேசவசோமயாசியார் என்ன செய்தால் மகப்பேறு பெறுவார் என்று விரகுரைத்த அருளாளப் பெருமான் மேல் விளையுமது அறியாமலா கூறினான்! உலகிலே, அவனுடைய பெய்தகாவான இவ்வுலகிலே, அவன் சித்த சங்கல்பத்தைப்பற்றியன்றோ யாவும் நிகழ்கின்றன. அதனால் மேலால்தான் செய்ய உன்னியதைத் திருவுளத்தில் கொண்டே அவன் திருக்கச்சி நம்பிகளிடம் அவ்விதம் கூறினான். அதன் பயனால் இரு உண்மைகள் உலகிற்கு வெளியாயின. பெருமாளின் அந்தரங்க பக்தனின் சம்பந்தம் கிட்டப்பெற்றார்க்குக் கிடையாத பொருளும் கிடைக்கும் என்பதொன்று. மற்றொன்று கர்மவினையால் எச்சமற்றவனாயினும் அவன் கடாட்சமிருப்பின் வினைகள் கால்வாங்கி ஓட்டமெடுக்கும் என்பது. பின் புத்திரகாமேஷ்டியாகம் செய்ய நியமிப்பானேன் என்னில் சாஸ்திர மரியாதை குலையாதிருக்கவே.

காஞ்சியிலே கச்சிநம்பிகளிடம் அளவளாவி அவர்போய் பிற்கணத்தே மேலே வைகுந்த விண்ணகரிலே நிகழ்ந்தது ஒரு நிகழ்ச்சி! திருமாமணி மண்டபத்திலே அனந்தன் தன் ஒளிபொருந்திய ஆயிரம் பணமுடிகளையும் அழகுறக் கவித்து அமைந்து கொண்ட ஆதனத்திலே ஸ்ரீதேவி பூமிப்பிராட்டி இருவருடனும் எம்பெருமான் தன் வீறுதோன்ற எழுந்தருளியிருக்கிறான். அனந்தன் ஆயிரம் பணிமணிகளின் ஒளி இருளாம்படி சொலிக்கின்றது எம்பெருமானின் திருமேனி. அருகே பஞ்சாயுதாழ்வார்களும், வைனதேயனும் (கருடனும்) பெருமாளின் அதிசய சோபையை ஸேவித்துக் கைகுவித்து நிற்கின்றனர். சட்டென்று எம்மானின் திருமுகத்திலே ஒரு மந்தகாசம் ஒளிவிடுகின்றது. திருமுகத்தைச் சற்றேசாய்த்து அனந்தனை நோக்குகின்றான் பகவான். அனைவருமே பகவான் ஏதோ திருவுள்ளமாகிறான் என்று உணர்ந்து அதனை அறிய ஆவலுடையராகின்றனர். அவனும் மெல்லத் தன் சோதி வாய்திறந்து அனந்தனை நோக்கியபடியே கூறினான் "சேஷா! நாம் லீலாவிபூதியைத் தோற்றுவித்தோம். அதில் ஆன்மகோடிகளை விளையாடவிட்டோம். தன் உண்மைத் தன்மை தெரிந்துணரும் பகுத்தறிவும் கொடுத்தோம். அவற்றுக்குத் தெரிந்து கொள்ளவென்று வேதங்களையும் சாஸ்திரங்களையும் பிரகாசிப்பித்தோம். ஆன்மாக்கள் தம்மறிவை நன்கு பயன்படுத்தி உண்மையுணர்ந்து, தம்மையும் நம்மையும் அறிந்து மீண்டும் நம்மை வந்தடைய வழிகாணும் என்று பார்த்தோம். ஆனால் அவையோ கலியின் பிடியிலே சிக்கி மயங்குகின்றன. வேதார்த்தங்கள் நஷ்டமாகின்றன. ஸ்மிருதிப் பொருள்கள் கெடுகின்றன. வேதாந்தங்களின் உண்மைப்பொருள் பலபடியாய்க் கூறப்பெறுகின்றன. அவற்றுக்குப் பொருந்தாத கீழ்த்தரமான அர்த்தங்களைப் பலர் தம் குயுக்தி வாதங்களிலே கூறி மக்களை மயக்கி வருகின்றனர். ஏன்! ப்ரம்மவித்தை கற்கும் பிராம்மணர்களே பரப்ரும்மமாகிய நம்மையின்றி வேறு தேவதைகளைப் பிரம்மமென்று கூற முற்பட்டிருக்கின்றனர். அது மட்டுமன்று அனந்தா! ஒவ்வொருவனும் தானே பிரம்மம் என்றும் கூறிக்கொள்ளும் அளவுக்கு வேதாந்தம் சீரழிந்துபோயிருக்கிறது. வேதங்களில் கூறப்பட்ட கர்மாக்கள்தான் பிரதானம் என்றும் அக்கர்மா செய்தவனுக்கு நம் விதிப்படி பயன் நிச்சயமாகையால் அக்கர்மாவைச்செய்து அப்பயன்பெற்று அப்பயனிலேயே செருக்கி பயன்தந்தது கர்மாதானே எனவே அதுவே முக்கியம்; அதைச் செய்து கொண்டேபோனால் 'அபூர்வம்' என்பது பலன் கொடுத்துக்கொண்டே போகும் என்றும் கூறி நாம் ஒருவன் உளதான எண்ணமே அற்று நம்மையும் அவனோடொத்த ஒருவனாக எண்ணுமளவிற்கு பிராமணன் அறிவே கெட்டுவிட்டிருக்கிறதென்றால் மற்றைய ஆன்மாக்களைப்பற்றிக் கேட்பானேன்?

இப்படிக் கருமம்தரும் அல்ப பலன்களைப் பார்த்து அக்கர்மாவே லக்ஷயம் என்ற மயக்கிற்குட்படாது வாழ்வோரும் பலர் இருக்கின்றனர். ஆனால் அவர்கள், வேதார்த்தங்களுக்கு ஏற்பட்டுள்ள விபரீதார்த்தம், இவற்றின் மயக்கவழிகள், ஆகியவற்றின்பால் மக்கள் மனம் ஈர்க்கப்படும் வேகத்தைப்பார்த்து நடுங்குகின்றனர். முன் நாமே கள்ள வேடம் தாங்கிச் சிலவாதம் செய்தோம் ஒரு காரணமாக. நினைவிருக்கிறதல்லவா? அந்தத் தருக்க வாதங்களையே வைத்து வேதாந்தத்தையே குழப்பி மக்களை மயக்கி வருகின்றனர் பலர். மீண்டும் வேதாந்தத்தின் உண்மைப்பொருள் விளங்குமாறு செய்யவேண்டிய காலம் அணித்தாயிற்று. நம் பக்தனொருவர் கேசவ சோமயாசி என்பவர் சிலநாளில் ஒரு புத்திர காமேஷ்டி யாகம் செய்வார். அந்த யாகப் பிரஸாத வழியாக உம்முடைய அம்சம் அவர் தேவியார் கருவுள்சென்று கேசவ சோமயாசியாருக்குக் குமாரராய் அவதரிக்கவேண்டும். நீர்மட்டுமென்ன நம் பஞ்சாயுதாழ்வார்களின் அம்சமும்தான். இப்படி அவதாரம் செய்து வேதங்களில் தோன்றியுள்ள அபார்த்தங்களைப் பலரும் கண்டு மருள்நீங்கச் செய்து உண்மைப்பொருளை விளக்கி உலகு உய்ய வழியமைத்துவாரும். இப்படி ஒரு அவதாரம் தோன்ற வேண்டுமென்று உலகிலுள்ள உண்மைச் சாத்விகர்கள் எதிர்நோக்கியிருக்கிறார்கள்." இப்படிக் கூறிய பகவான் தன் திருமுகத்தைச் சற்றே திருப்பியதும் அப்பக்கம் நின்ற வைனதேயன் முகத்திலே ஒரு வியப்புக்குறியிருக்கக் கண்டான். மறுகணம் அதன் காரணத்தை உணர்ந்து "வைனதேயா! உன்னை மறக்கவில்லை. இந்தப் புனித கைங்கர்யத்தில் எனக்குமட்டும் பங்கில்லையா என்று எண்ணுகிறாய். உண்டு. கேசவ சோமயாசியாரின் தேவியாருக்கு த்யுதிமதி என்று ஒரு சகோதரியுண்டு. அவள் கமல நயனபட்டருடைய அறமனையாட்டி. அவள் திருவயிற்றிலே உமது அம்சம் சிலகாலம் கழித்து அவதரிக்கவேண்டும். உம்மால் சில விசேஷ உண்மைகளை உலகம் உணரவேண்டும் என்பதனாலேயே உம்மை அவர்களோடு நாம் சேர்க்கவில்லை" என்று கூறி முடிக்க நித்யசூரிகளும் பெருமாள் திருவுள்ளத்தை உணர்ந்து மகிழ்ந்து அவரை வந்தித்து வாழ்த்தினர்.

இங்கே திருவல்லிக்கேணியிலே கேசவ சோமயாசியார் ஸ்ரீபார்த்தசாரதி திருக்கோயிலிலே உரியமுறையில் தக்க பெரியவர்களைக் கொண்டு அருவாளன் நியமித்தபடியே புத்ர காமேட்டி வேள்வியை மாசற்ற மனத்தோடு விமரிசையாகச் செய்து முடித்தார். அன்றிரவே அவர் கனவிலே வைகுந்தநாதன் தோன்றி 'கேசவப் பெருமாளே! உம்முடைய வேள்விக்கு மகிழ்வுற்றோம். நமது அணையான அனந்தன் அம்சமாக உமக்கு ஒரு புத்திரன் தோன்றுவான். கவலையைவிடும்' என்று திருவாய்மலர்ந்தருளினான். கேசவப் பெருமாளும் திடுக்கென விழித்து கூப்பிய கையராய் பெருமாள் மொழிவந்த திசையை நோக்க பெருமாள் அதற்குள் மறைந்துவிடவே அத்திசை நோக்கித்தொழுது அவனுடைய கருணையை வியந்துபோற்றியிருந்தார்.

காந்திமதியார் திருமேனியிலே கருவுற்றதற்குரிய சின்னங்கள் படிப்படியாகத்தோன்றின. கௌஸல்யை, தேவகி இவர்கள் போன்று உத்தமகர்ப்பத்தை தரித்தவள் என்பதை சோமயாசியார் உணர்ந்தவராதலின் காந்திமதியம்மையாரது உடலுக்கும் உளத்துக்கும் எவ்வித குறையும் நேராதவாறு மிக விழிப்புடன் பாதுகாத்து வந்தார். உரிய காலமும் கிட்டிற்று. கலி 4119-க்குச் சரியான சாலிவாகன சகாப்தம் 939-ல் சித்திரை மாதம் வளர்பிறை சதுர்த்தியும் திருவாதிரை நாளும் வெள்ளிக்கிழமையும் கூடிய மங்களநாளிலே கடக ஓரையில் காந்திமதியம்மையார் இவ்வுலகமும், உலகில் மெய்ஞ்ஞானம் தழைக்கவும்,வேதம்,உபநிடதம்,பிரம சூத்திரம், பகவத்கீதை இவற்றின் உண்மைப் பொருள் விளங்கவும் ஒரு ஆண் மகவை ஈன்றெடுத்தாள். புண்ணியமாகிய தாமரை மலரவும், பாபமாகிய இருள் ஒழியவும் ஒரு திவாகரன் தோன்றினான்.

கேசவசோமயாசியார் மகிழ்ச்சிக் கடலிலே திளைத்தார். குழந்தை பிறந்ததுமே மறைவிதிப்படி செய்யவேண்டியவற்றை எல்லாம் குறைவறச் செய்தார். "கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில் எண்ணெய் சுண்ணம் எதிர் எதிர் தூவிட" நந்தகோபனுடைய கண் நல்முற்றம் அளறுயதுபோல கேசவப்பெருமாள் மனையும் மங்கலவிழாவெடுத்து மகிழ்ந்தது. வேறு தோடங்கள் அணுகாதபடி குழந்தைக்கு எம்பெருமானின்

பஞ்சாயுதங்கள் வடிவாகச் செய்யப்பட்ட ஐம்படைத்தாலி அணிவிக்கப்பட்டது.

மருகன் பிறந்த நற்செய்திகேட்டு திருமலை நம்பிகள் ஓடோடியும் வந்து குழந்தையைக் குளிரக்கடாட்சித்தார். பன்னிரண்டாநாளில் குழந்தைக்கு சங்க சக்கர முத்திரை பொறித்து குழந்தைக்கு இளையாழ்வார் என்று திருநாமம் சாத்தியருளினார். குழந்தை எல்லா அழகும் பொருந்தியவனையும், நல்ல கல்விமானாகவும் உலகப்புகழ்பெற்றும் விளங்குதற்குரிய குறிகளுடையனையும் காணப்பட்டமையின் இலக்குவன் பெயரையே இட வேண்டுமென்பது திருமலை நம்பிகள் திருவுள்ளம்.

இளையாழ்வாரும் கண்டவர் மனம் மகிழ நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவந்தார். தெய்வாம்சமான மகவு என்று கனவுமூலம் தெளிந்தவராதலாலே கேசவப்பெருமாள், கோகுலத்திலே கண்ணனுக்கு நந்தகோபரும் யசோதையும் என்ன என்ன செய்வித்து மகிழ்ந்ததாகப் பெரியாழ்வார் பிரபந்தமும் புராணங்களும் கூறினவோ அதையெல்லாம் செய்து களித்ததோடன்றி, இளையாழ்வார் தோன்றிய குலத்துக்கேற்ப வேதமுறைப்படி அவ்வக் காலங்களில் செய்யவேண்டிய சம்ஸ்காரங்களையும் செவ்வனே செய்தார். ஒரு வருடம் கழியவும் ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாடப்பெற்றது. மூன்றாமாண்டில் குடுமிவைக்கப்பட்டது. இளையாழ்வாரும் பூச்சுற்றிய பிற்குடுமியும் கழுத்தில் ஆபரணங்களும், அற்றம் காவாச் சுற்றுடையும், தம்மை அழகு செய்ய, அரைஞாணும் கிண்கிணியும் ஆர்ப்பத் தளர்நடைநடந்து தன்னொடொத்த சிறுவர்களோடு கூடிவிளையாடித் தம் பெற்றோர்களை மகிழ்வித்தார். பிறந்த சூழ் நிலைக்கு ஏற்ப அவர் விளையாட்டுகளிலெல்லாம் தெய்வமணம் கமழ்ந்தது. எப்போதும் கேசவன் தமர்களாய் விளையாட்டெல்லாம் கோயிலெடுப்பது, விழாவயர்வது, பெருமாளைப் பாடுவது, தோளில் எழுந்தருளப்பண்ணுவது இவ்வாறு கண்டவர் வியந்து இன்புறும் விளையாட்டுக்களாகவே இருந்தன. யாரிடமும் இன்முகமும், இன்னுரையும் பணிவும் அடக்கமும் கொண்ட ஒழுக்கமும் உடையராய்த் திகழ்ந்தமையின் கண்டவர்களுக்கெல்லாம், த்ரேதாயுகத்திலே ஸ்ரீ ராமலக்ஷ்மணர் இளமையின்பத்தைத்துய்த்த அயோத்தி நகர மக்கள் அடைந்ததாகப் புராண வாயிலாகக் கேட்ட இன்பம் நேரிலே கிட்டிற்று என்னும் படி அனைவரையும் மகிழ்வித்து வளர்ந்தார் இளையாழ்வார். ஐந்தாவது வயதில் எழுத்தறிவிப்பு விழா நடைபெற்றது. கேசவப்பெருமாள் இளையாழ்வாரை உலகளந்த பெருமாள் சன்னிதியிலே கொண்டுபோய் பெருமாள் திருமுன்பே உவாத்தியர் ஒருவரைக்கொண்டு குழந்தைக்கு பகவத் சப்தபடிவான அகாரத்தை முதலில் ஓதுவித்தார். பின்னர் முறையாகக் கல்வி கற்பிக்கப்பட்டது. இளையாழ்வாரும் ஆசிரியர்கள் வியக்கும் முறையில் அதிவிரைவாக யாவும் கற்றுவந்தார்.

கருவுற்ற காலத்திருந்து எட்டாம் ஆண்டிலே மறைக்குலமைந்தருக்கு முப்புரி நூலணிவிழாச் செய்யவேண்டியது விதியாதலின் அதன்படியே இளையாழ்வாருக்கும் உபநயனம் செய்விக்கப்பட்டது. முதல் உபாகர்மம் (ஆவணி அவிட்டத்தில் மறையவர் செய்யும் சடங்கு) கழிந்ததும் இளையாழ்வாருக்கு வேதாத்யயனம் தொடங்கப்பெற்றது. கேசவப்பெருமாளே ஆசார்யனாக விருந்து கற்பிக்க இளையாழ்வார் ஸ்ரீ கிருஷ்ணன் சாந்திபினியிடம் வேதம் கற்றதுபோல அதிவிரைவிலே நான்கு வேதங்களையும், சாஸ்திரங்கள் அனைத்தையும் திவ்யப்பிரபந்தங்களையும் மற்றும் கலைகளையும் கற்று யாவற்றிலும் வல்லவரானார்.

இளையாழ்வார் அவதரித்து சில வருடங்கள் கழிந்தபின் மழலைமங்கலத்திலே கமலநயன பட்டருக்கும் த்யுதிமதியம்மையாருக்கும் ஸ்ரீ வைனதேயன் அம்சமாக தேஜோமயமான ஒரு புத்ரன் பிறந்தார். இதுசெய்தி கேட்ட பெரிய திருமலை நம்பிகள் முன் இளையாழ்வார் திறத்துச் செய்தது போன்றே, மழலைமங்கலம் எழுந்தருளிக் குழந்தையைத் தன் திவ்விய திருஷ்டியால் மலரவிழித்து நோக்கி ஆசீர்வதித்து, செய்யவேண்டியவற்றை எல்லாம் செய்வித்தார். பன்னிரண்டாம் நாளிலே குழந்தைக்கு ஆழி சங்கப் பொறி பொறித்து அதற்கு 'கோவிந்தன்' என்று திருநாமம் சாத்தியருளினார். கோவிந்தரும் உரியகாலத்தே பெறவேண்டிய ஸம்ஸ்காரங்கள் பெற்று கல்வி கேள்விகளிலே இளையாழ்வாரைப் போன்று வல்லராயினர்,

இளையாழ்வாருக்குப் பதினாறுவது வயது வந்ததுமே கேசவப்பெருமாள் அவருக்கு தஞ்சமாம்பாள் என்ற கன்னிகையை முறைப் படி விவாகம் செய்துவைத்தார். இளையாழ் வாரும் மனையறம் புக்கு "இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்றதுணை" (பிரம சாரி, வானப்பிரத்தன், சந்நியாசி மூவர்க்கும் உற்றதுணை)யாய், தென்புலத்தார் தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐம்புலத்தா ரையும் ஓம்பி செவ்வனே வாழ்ந்து வந்தார். அந்நாளிலே பெருமாள் கோயிலை (காஞ்சி புரத்தை)ச் சேர்ந்த திருப்புட்குழி என்ற ஊரிலே யாதவப் பிரகாசர் என்ற ஒரு ஏக தண்டி (முக்கோலின்றி ஒருகோல் மட்டும் கொண்டவர்) சந்நியாசி வேதாந்தம் கற்பிக் கிறார் என்ற செய்தி இளையாழ்வார்க்கு எட் டியது. அவரும் அங்கே எழுந்தருளி மற் றையவர்களோடு சேர்ந்து தாமும் வேதாந் தம் கற்கலுற்றார்.

இதேபோல மழலை மங்கலத்திலே கமல நயனபட்டர் தம் குமாரரான கோவிந்தருக்கு விவாகம் செய்துவைத்து கோவிந்தரும் இளை யாழ்வாரைப்போல இல்வாழ்விலே சிறிது காலம் திளைத்தார். பின் திருப்புட்குழியிலே யாதவப்பிரகாசரிடம் இளையாழ்வார் வேதாந் தம் வாசிக்கிறார் என்று கேட்டு தாமும் அவ ரைப்போல கற்கவேண்டும் என்று திருப்புட் குழி வந்து இளையாழ்வாரோடு சேர்ந்து வேதாந்தம் வாசிக்கலானார். இருவரும் தெய் வாம்சமாக அவதரித்தவர் ஆதலானும், பிறப் பிலும் சகோதரிகளின் மக்கள் ஆதலானும், கல்வியிலும் இருவரும் தேர்ந்தவர்கள் ஆத லானும் இளையாழ்வாரும் கோவிந்தரும் இணைபிரியாது வாழ்ந்து வந்தனர்.

இப்படி மற்றைய மாணுக்கரோடு இவர் களிருவரும் வேதாந்தம் வாசித்து வருகையில் அவர்களைவிட இவ்விருவரும், அவ்விருவரி லும் இளையாழ்வாரும் மறைப்பொருளை வெகு விரையில் உணர்ந்துவந்தார். யாதவப் பிரகாசர் மறைகளுக்கு உரை கூறும் பொழுது இளையாழ்வார் அடிக்கடி விளக்கம் கேட்பதுண்டு. ஒருநாள் யாதவப் பிரகாசர் "சத்யம் ஞானம் அநந்தம் ப்ரும்ம" என்கிற சுருதி வாக்கியத்திற்கு இம்மூன்றும் பிரம்மத் துக்குச் சேராது என்று தவருக உரை கூறி னார். இளையாழ்வார் எழுந்து நின்று 'ஸ்வாமீ! ஒரு விஞ்ஞாபனம்! சத்யம் என் னும் பதத்தாலே க்ஷணிகத்தினின்று வேறு பட்டதாயும், அனந்த என்னும் பதத்தாலே அசித்தினின்று வேறுபட்டதாயும், அனந்த என்னும் பதத்தாலே சேதனங்களினின்று வேறுபட்டதாயும் என்று பொருள்பட்டு சேதன அசேதனங்களின்று புறம்பாய் நித்தி யமாயிருப்பது பிரம்மம் என்று காட்டாதா?" என்று கேட்டார். யாதவப் பிரகாசருக்குத் தூக்கிவாரிப்போட்டது. இளையாழ்வார் கூறி யது அறிவோடொட்டியதாயும், பதங்களுக் குப் பொருந்தியதாகவும் இருப்பதை அவர் உள்ளம் உணர்ந்தது. எனினும் அவர் கொள் கைக்கு அவ்வுரை பாதகமாயிருந்தமையால் வேறொன்றும் கூற இயலாமல் 'உம்' என்று கூறி மேலே சென்றுவிட்டார்.

அக்காலத்தே ஆசாரியரிடம் பாடம் கேட்கும் மாணவர் உடைகளைத் துவைத்தல், ஆசிரியர் பசுக்களைமேய்த்தல், அவற்றுக்குத் தீனிவைத்தல், ஆசிரியர் குளிக்க நீரிறைத் தல், ஆசிரியருக்கு எண்ணெய் தேய்த்தல் முதலியவெல்லாம் சீடரே செய்வது பண் டைய மரபு. அவ்விதம் ஆசிரியர் திருமேனி கைங்கர்யங்களில் சீடன் ஈடுபட்டிருக்கும் போதும் ஆசிரியர் கல்வி போதிப்பது வழக் கம். ஒருக்கால் இளையாழ்வார் யாதவப் பிர காசருக்கு எண்ணெய் தேய்த்துக்கொண் டிருந்தார். மாணவர் சுருதியை ஓத யாதவப் பிரகாசர் பொருள் கூறிவந்தார். அப்படிக் கூறிவருகையில் "தஸ்ய யதாகப்யாஸம் புண் டரீகம் ஏவம் அக்ஷிணீ" என்ற சுருதிவாக்கி யத்தை மாணவர் கூறி நிறுத்தினர். இந்த சுருதிவாக்கியம் சூர்யமண்டல மத்தியில் யோகிகளால் காணப்படுகின்ற புருஷனை வருணிப்பது. இந்த சுருதிக்கு யாதவப்பிர காசர் உரை கூறும்போது மேலே சொன்ன சுருதி வாக்கியத்திற்கு "குரங்கினுடைய ஆச னம்போன்ற நிறத்தையுடைய தாமரைப்பூப் போன்ற அழகிய கண்களையுடையவன்" என்று உரை கூறினார்.

திடீரென்று யாதவப்பிரகாசர் தன் தொடைகளிலே காய்ச்சின கொழுவைச் செருகி யதுபோலச் சுரீர் என்ற உணர்ச்சியேற்பட்டு, திடுக்கிட்டு துள்ளிமேலே நோக்கினார். உட் கார்ந்திருந்த அவருக்கு நின்றுகொண்டு எண் ணெய் தேய்த்துக்கொண்டிருந்த இளையாழ் வார் கண்களிரண்டும் கண்ணீர் ஆறாய்ப் பெருக நிற்பதைக் கண்டார். அவருடைய

கண்ணீர்தான் தன் துடைகளை அப்படிச்சுட்டது என்பதை உணர்ந்தார். இளையாழ்வாரை நோக்கி "ஏனப்பா இப்படி துக்கித்து அழுகிறாய்" என்று கேட்டார். இளையாழ்வார் பொருமலும், விம்மலுமாக "பரமபுருஷனின் திருக்கண்களுக்கு ஒரு குரங்கின் ஆசனத்தை உவமையாக்கித் தேவரீர் கூறியதைக் கேட்டேன். மனம் பொறுக்கவில்லை. அழுதேன்" என்று விண்ணப்பித்தார். யாதவப்பிரகாசர் சினம் மிக்கவராய் இளையாழ்வாரை நோக்கி "நானும் பார்த்து வருகிறேன்; நீ இவ்விதம் பலதடவை இடைமறித்து சுருதிகளுக்கு நான் கூறும் பொருள்களுக்கு மாறான பொருளைக் காண்கிறாய்; எங்களுடைய பரமாசார்யரான ஆதிசங்கர பகவத்பாதரே இப்படித்தான் உரைகண்டார். இதற்கு வேறு என்ன பொருள் கூற இயலும்!" என்று கடிந்தார். உடனே இளையாழ்வார். "ஸ்வாமீ முதலிலே தங்கள் உரைப்படியே அந்தக் கண்கள் அழகிய திருக்கண்கள் என்று கூறினீர்கள். அதனால் அந்தக் கண்களுக்கு உவமையாகக்கூறப்படும் பொருளும் கண்ணுக்கும் மனதிற்கும் அழகுதரும் பொருள்களாகவே இருக்க வேண்டுமன்றோ! குரங்கின் ஆதனத்தை கண்ணுக்கு அழகிய பொருளாக யார் கூறினாலும் சரி. எவரேனும் ஒப்புவரோ! ஆகவே அது பொருளல்ல. வேறு பொருள் இருக்க வேண்டும் என்பது விளங்கவில்லையா? என்றார். யாதவப் பிரகாசர் தம்முடைய ஆசாரியரையும் குறை கூறுகிறார் என்று எண்ணி சினம் மிக்கவராய் "வேறு என்ன பொருள். நீதான் சொல்லு" என்று வினவ இளையாழ்வார் "ஸ்வாமி அந்த சுருதிக்கு 'கம்பீராம்பஸ ஸமுத்பூதஸம்ருஷ்ட நாளரவிகர விகஸித புண்டரீக தலாமலாயதேக்ஷண:' [ஆழ்ந்த தண்ணீரில் வாழ்வதும், நாளம் என்கிற தண்டோடு கூடியிதுயிருப்பதும் இரவியின் கதிர்களால் அலரப்பெற்றதுமான தாமரையின் இதழ்போலே நீண்ட திருக்கண்களை உடையவன்] என்று அழகாகப் பொருள் கொள்ளலாமே! என்று கூறி நின்றார். யாதவப்பிரகாசர் வித்வானனபடியாலே இளையாழ்வார் சொன்ன பொருள் சுருதி வாக்கியத்திற்குச் சேரும் என்பதையும் அதுவே அழகிது, பொருத்தமானது என்பதையும் உணர்ந்தாராறாலும் அதை ஆமோதித்தால் தனக்கும் இதேபோன்று உரை கூறிப்போந்த தன்னுடைய முன்னைய ஆசாரியர்கட்கும் குறையுண்டாகும் எனக் கருதி இளையாழ்வாரை நோக்கி "நாம் சொன்னபடி பொருள் கேட்டு அதை ஒப்புக்கொள்வீராயின் நம்மிடமிருந்து வாசிக்கவேண்டும். இல்லையேல் நம்மிடம் வாசிக்கவேண்டியது இல்லை" என்று கூறி எழுந்து போய்விட்டார். இளையாழ்வாரும் தவறான உரையை ஒப்பிக் கேட்பதை விடக் கேளாமல் இருத்தலே மேல் என்று யாதவப்பிரகாசரிடம் செல்வதைத் தவிர்த்திருந்தார்.

[இளையாழ்வார் மேற்படி சுருதிக்கு இங்ஙனம் உரை கண்டது ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் "நீரார் கமலம்போல் செங்கண்மால் என்றொருவன்", "அழறலர் தாமரைக்கண்ணன்", "மென்கால் கமலத் தடம்போல் பொலிந்தன.........எம்பிரான தடங்கண்களே", "செஞ்சுடர் தாமரைக்கண் செல்வன்", "நீண்டவப் பெரியவாய கண்கள்", "கமலக்கண்ணன் அமலங்களாக விழிக்கும்" எனவரும் இடங்களை வைத்தே என்று பெரியோர் பணிப்பர்] (தொடரும்)

அழகர்கோயில் : கள்ளழகர் கோயிலில் சுந்தரராஜப்பெருமாளுக்கு ஆடிப் பெருவிழா 6—8—62 முதல் 16—8—62 வரை நடைபெற்றது.

சேலம் : பெரியமாரியம்மன் கோயிலில் ஆடிப்பெருவிழா 24—7—62 முதல் 13—8—62 வரை நடைபெற்றது.

திருவாரூர் : கமலாம்பிகா ஆடிப்பூரத் திருவிழா சொற்பொழிவும், இன்னிசையரங்கும் 26—7—62 முதல் 3—8—62 வரை நடைபெற்றன.

படைவீடு : இரேணுகாம்பாள் அம்மன் ஆடிமாத சுக்கிரவார திருவிழா 20—7—62ல் ஆரம்பித்து, வெள்ளிக்கிழமை தோறும் 31—8—62 வரை நடைபெற்றது.

அறக்கொடை விளக்கு

திரு. இர. குழந்தைவேலு, B. A. (Hons.), லால்குடி.

நம் தமிழ்நிலத்தவர் நாகரிகச் சிறப்பைத் தாயினத்தவர் உயர்நிலையால் அறிதல்கூடும். அம்மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரானவர். அங்ஙனமே மனைக்கடமையைப் பெரிது போற்றி மாண்புற்றவர் மங்கையர். பிற வினைகளில் கவலையற்றுத் திறம்பட வாழ முற்படும் வறுமை நெஞ்சம் அவர்கள்பால் அமைதல் அருமையாயிற்று. அறக்கொடையில் பங்குகொளத்தக்கவர் ஆடவரே எனப் பெண்டிரைப் பிரித்துப் புறக்கணித்தற்கியலாது. அதனைப் பெண்ணுலகும் உவப்புடன் உளம்குளிர ஏற்றுப் பெருமையுடன் பிறங்கிற்று. கல்வெட்டுக்களில் பல இடத்தும் தாயினம் அறக்கொடை விளக்காக ஒளிர்ந் திருத்தலைக் காணலாம். அறக்கொடையில் ஈடுபட்டுச் செய்யும் நற்செயலெலாம் தாய்க்குலத்தின் கொடை உள்ளத்தை உணர்த்துவன; மக்கள் தொகுதியில் நங்கையர் பெற்றிருந்த ஏற்றத்தைத் தெரிவிப்பன; தமிழ் கூறும் நல்லுலகத்தின் நாகரிக மலர்ச்சியை விரிப்பன.

விக்கியண்ணன், முதல் ஆதித்தசோழன் காலத்தவன். இச்சிற்றரசன், தமிழவேள் என்ற விளங்கும் குலப்பெயருடன் இலங்கினன். இப்புகழுடையவனைக் கடம்பமாதேவி கொழுநனாகப் பெற்று விளங்கினாள். அவள், திருநெய்த்தானத்தே எழுந்தருளியுள்ள நெய்யாடியப்பர்க்கு நந்தாவிளக்கு—அணையா விளக்கு—ஒன்று நாளும் ஒளிவிடுதல் வேண்டும் என்னும் மனநலத்துடன் நூறு ஆடுகளை அறக்கொடையாக வழங்கியுள்ளாள் :

"கடம்பமாதேவி திருநெய்த்தானத்து மாதேவர்க்கு ஒரு
நந்தாவிளக்கினுக்குக் குடுத்த ஆடு நூறு
பன் மகேஸ்வரரக்ஷை"

என்னுங் *கல்வெட்டு நெடுந்தொடர் இதற்குச் சான்றாகும்.

விளக்கிற்கு ஆட்டின் நெய்யூட்டி எரித்தல் அக்காலத்தில் நிலவிய வழக்கென அறியப்பெறும். பசுக்களும் கொடையாக விடப்பட்டன. இப்பசுக்களைக் கொண்டு நாளும் கோயில் விளக்கிற்கு நெய் ஈந்தவர் கோயில் விளக்குக் குடிமக்கள் என அழைக்கப் பெற்றனர். இதற்குச் சான்று மொழிவன கல்வெட்டுக்கள். அன்று அறக்கொடையை காத்துத் திருக்கோயிலுக்குப் பணிபுரியும் பெரும் பொறுப்பினைச் சிவனடியார் ஏற்றுள்ளனர். இச்செய்தி திருநெய்த்தானம் கிருதபுரீசுவரர் கோயில் கருவறையின் தென்சுவரில் பொறிக்கப்பெற்றிருக்கின்றது. கருவறை, இந்நாளில் 'மூலஸ்தானம்' அல்லது 'கர்ப்பக்கிருஹம்' என்னும் பரவிய வழக்குடையது. அந்நாளில் கருவறையைக் குறித்த இடம், திருவுண்ணாழிகை அல்லது அகநாழிகை என்னும் பெயரில் நிலவலாயிற்று என்பர் ஆய்வாளர். அறக்கொடையாகக் கொடுக்கும் விளக்கு வகைகளில் நந்தா விளக்கு என்பதும் ஒன்றாகும். திருநுந்தா விளக்கு, நுந்தாவிளக்கு என்ற சொற்களும் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பெற்றுள்ளன.

கடம்பமாதேவி, கோயிலுக்கு விளக்கு வழங்கியுள்ளது ஏற்புடையதே ஆம். மங்கையர்க்கு விளக்கேற்றி வழிபடும் வழக்கம் இயற்கையாய் அமைந்தது. இச்செய்தியைக் குறித்து நக்கீரர் கூறியதும் எண்ணத்தகும் :

*"பூங்குழைக் கமர்ந்த ஏந்தெழில் மழைக்கண்
மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்து
அவ்வித ழவிழ்பதங் கமழப் பொழுதறிந்து
இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
நெல்லும் மலருந் தூஉய்க் கைதொழுது
மல்ல லாவண மாலை யயர"

என்றார் நக்கீரர். அம்மகளிர் அந்திக்காலமென்று அறிந்தனர்; இரும்பால் செய்த விளக்கின் நெய்தோய்ந்த திரியைக்

---

*தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி (Volume): 3; பாகம்: 3; எண்; 89 : பக்கம்: 221.

*நெடுநல்வாடை : 38—44.

கொளுத்தி, இல்லுறை தெய்வத்திற்கு நெல்லொடு மலரும் சிதறிக் கைதொழுது மாலை வழிபாடு இயற்றினர்.

மற்றும் அணுக்கிநக்கன் பாவையின் அறக்கொடைத் திறனும் அறிந்தின்புறத் தக்கது. இரண்டாம் இராசேந்திரன் மனைவி அணுக்கிநக்கன் பாவையும் அறக்கொடையில் விளக்காகத் திகழக் காண்கிறோம். அரசர் இல்லில் புகுந்த அவளைச் செல்வப் பேரரசும் அறநெறி நிறைந்து ஓங்கிய உள்ளமும் அறக்கொடைக்குத் தூண்டிச் செயலில் இறக்கின எனல் வேண்டும். அவள், ஆண்டுதோறும் மார்கழித்திங்களில் திருவாதிரை நாளன்றும், ஆனித் திருவிழா நன்னாளன்றும் தில்லைக் கூத்தரசன் எழுந்தருளல் வேண்டும் என விழைந்தாள். அரசி உள்ளத்தில் கருக்கொண்ட நல்லெண்ணத்திற்குக் குறுக்கீடு முளைத்ததோ? இல்லை. எண்ணம் செயலாய்த் தழைத்தது. அதனோடும் அவள் விருப்பம் முடிந்துவிடவில்லை. அந்நாளில் ஆயிரம் சிவனடியார்க்குச் சோறு வழங்க எண்ணித் துணிந்தாள்.

மாசித் திருநாளில் திருத்தொண்டத் தொகை பாடுதற்கு ஏற்பாடு செய்தாள். இதனை,

*"திருமாசித் திருநாளில் திருத்தொண்டத்தொகை
விண்ணப்பஞ் செய்வார்க்குக் காசு 5 ம்"

என்னுங் கல்வெட்டுச் சொற்கள் அறிவுறுத்துவன. இவ்விழா முதலியன இனிது நிகழ நாற்பத்து நான்கு வேலி நிலங்களை விலைக்குப் பெற்றளித்திருந்தாள்.

*"விரிவு நிலன் எழுபத்தெட்டே காலேயரைக்காணி
இதில் ஓடைகளாலும் நாரை காலாற்றாலும்
கொல்லைகளாலும் நத்தங்களாலும் நீங்கு நிலன்
முப்பது நாலேகாலே யரைக்காணி நீக்கி
விளைநிலன் 44 வேலி"

எனக் குறித்த அந்நிலங்கள், இராசேந்திர சிங்கவள நாட்டுத் தனியூர் பெரும்பற்றப் புலியூர்க் கீழ் பிடாகைக் கடாரங்கொண்ட சோழப் பேரிளமை நாட்டுப் பராக்கிரம பால்குணமங்கைபுரம், தில்லை அழகநல்லூர், மதுராந்தகப் பேரிளமை நாட்டு இராசராச நல்லூர், குணமேநகைபுரம் எனப் பெயரிய ஊர்களில் பிரிந்து இடம்பெறலாயின. அத்துணை நிலங்களும் (44 வேலி) தொகுதியாக ஓரிடத்தில் அமையவில்லை. இவற்றின் விளைவுநெல் இரண்டாயிரத்து இருநூற்றைம்பது கலங்களாகும். இந்நெல், இறைவர்க்கு அணிவிக்கும் அறுவை (துணி), திருவிளக்கு எண்ணெய், திருவமுது ஆய பல வழக்கத்துச் செலவிற்கு உரியவாயின.

*"இவரே இவ்வூர் வைத்த சாலை சிங்களாந்தகனில் உண்ணும்
பிராமணர் 25 பேர்களுக்கு நிபந்தமாக இவ்வூர்ப்பால்
கொண்ட நிலன் பாழாய் சங்கோடியான பரவைநங்கை
நல்லூர்ப் பிரமாணப்படி விலை கொண்டுடைய நிலன் 15½
இதில் பயிர் செய்யவொண்ணாது நீங்கும் நிலம் 5½
நீக்கி நிலன் 10 வேலி"

என்னுங் கல்வெட்டுமொழியால், தில்லையில் சிங்களாந்தகன் என்னும் பெயரில் அறநிலையம் ஒன்று நிறுவினாள் என்பதனையும், அப்பெயரில் விளங்கிய அறநிலையம் நாளும் இருபத்தைந்து அந்தணர்க்கு உணவு ஈந்து வரலாயிற்றென்பதனையும், இப்பெருஞ்செலவிற்கு அரிசி பரவைநங்கை நல்லூரில் வாங்கியிருந்த பத்துவேலி நிலம் துணைநின்றதென்பதனையும் அறிகின்றோம். இவ்வரசியின் சோற்றுக் கொடையும், நிலக்கொடையும் புகழத்தக்கவை.

இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள திருவாதிரை விழாவை இன்றும் தமிழகத்தில் கொண்டாடுகின்றனர். சிறப்பாகத் திருத்தவத்துறையிலும் (லால்குடி), தில்லையிலும் (சிதம்பரம்) இவ்விழா ஓராண்டும் இடையீடின்றி நடைபெறலைக் காணலாம். தில்லைப் பெருநகரத்தில் இவ்விழாவின்போது இசை வல்லுநர் பலர் இசைவிருந்தளிப்பர். திருத்தவத்துறையில் பத்துநாள் விரிவாகக் கொண்டாடும் இவ்விழாவில் சமயச் சொற்பொழிவும் இசைத்தமிழ்ப் பெருக்கும் இணைந்து பங்கு பெறுவன. சேக்கிழார்,

†"ஆறணிந்த சடைமுடியார்க் காதிரைநா
டொறுமென்றும்

*தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி: 4; எண்: 223; பக்கம்: 29.

*தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி: 4; எண்: 223; பக்கம்: 29. † பெரியபுராணம்: நரசிங்கமுனையரைய நாயனார் புராணம்: செய்யுள்: 4.

வேறுநிறை வழிபாடு விளங்கியபூ சனைமேவி
நீறணியும் தொண்டர்அணைந் தார்க்கெல்லாம்
நிகழ்பசும்பொன்
நூறுகுறை யாமல்அளித் தின்னமுது நுகர்விப்பர்''

என்றமையால், இவ்வாதிரை விழாவின் பழம்பெருமை கொள்ள இடம் உண்டு. இந்நாளின் விழா நிகழ்வைக்,

*''கனைக்கு மதிர்குரல் கார்வான நீங்கப்
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் †திங்கண் மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்க''

எனவரும் பரிபாடலின் பகுதி விரித்துரைக்கின்றது. இத்தமிழ்த் தொடர்களைக், "கார்வானம் அதிர்குரல் நீங்கப் பனிமிகுதலாற் குளிரால் நடுங்குதலையுடைய மார்கழி மாதத்துத் திங்கள் மறுவொடு நிறைந்த திருவாதிரை நாளின்கண்'' என்ற பரிமேலழகருரை தெளிவாக்கும்.

மாசித் திருநாளில் திருத்தொண்டத் தொகை பாடப்பெற்றது அந்நாளின் இசைத் தமிழுணர்ச்சியை உணர்த்தும். இங்குச் சுந்தரர் திருத்தொண்டத்தொகை என்னும் நூலின் பாக்களில் நாயன்மார் அறுபத்து மூவர் பெயர்கள் குறிக்கப் பெற்றிருத்தலை எண்ண இடமுண்டு. பின்னர் நம்பியாண்டார்நம்பி, அறுபத்து மூவர் வரலாற்றுக் குறிப்பை விளக்கித் திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூல் யாத்ததையும் கருதலாம். இந்நூலில் கண்ட அறுபத்து மூவர் வரலாற்றையும் விரிவாகக் காட்டிய முதல் நூல் பெரிய புராணம்.

கொடையாக அளித்த நிலங்கள் பல்வேறு ஊர்களிலும் பரவலாக அமைந்திருத்தலே நன்மை பயக்கும். ஏனெனில், ஓரிடத்து நீர் வளம், மழைப்பெய்வு முதலியன குறையின் அதனை அடுத்து வேறு இடங்களில் செறிந்த பல்வளத்தினுலும் பெருகிய விளைவு கிடைக்கும். அங்ஙனமின்றி ஓரிடத்தில் நிலங்கள் அத்துணையும் தொகுதியாக இருப்பின் மாறுகத் தீமை விளையும். அதனுல் கோயிலின் நற்செயல்கள் தொடர்ந்து நடைபெற வழி இராது.

இன்னணம் கொடைச் சிறப்பால் இசைபட வாழ்ந்த தாயினத்தவரை அறக் கொடை விளக்குகள் எனப் புகழ்தல் தகும். இந்நல்லுள்ளங்கள் நாட்டிற் பெருக வேண்டும்.

*பரிபாடல்: 11-ஆம் பாடல்: 74—78.
†திங்களில் தோன்றும் மறுவானது முழு வடிவும் புலப்படுதற்கு ஏற்பத் திங்கள் விரிந்த அளவில் நிறைந்த முழுவடித்தில் விளங்கும்.

அறந்தாங்கி: வீரமாகாளியம்பாள் கோயிலில் பெருவிழா 7—8—62 முதல் 18—8—62 வரை நடைபெற்றது.

வடமதுரை: சௌந்தரராசப்பெருமாள் கோயிலில் ஆடிப்பெருவிழா 6—8—62 முதல் 19—8—62 வரை நடைபெற்றது.

திருக்குற்றாலம்: திருக்குற்றாலநாத சுவாமி கோயிலில் ஏழாவது சாரல் மாநாட்டையொட்டி கந்தபுராணச் சொற்பொழிவு சித்திரசபை மண்டபத்தில் 31—7—62 முதல் 9—8—62 வரை ஒவ்வொருநாள் காலை 9 மணி முதல் 12 மணிவரை திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களால் நிகழ்த்தப் பெற்றது.

நயினார்கோயில்: நாகநாதர் கோயிலில் ஆடிப்பூர உற்சவம் 2—8—62 முதல் 5—8—62 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகள் நடை பெற்றன

இராமேசுவரம்: இராமநாதசுவாமி கோயிலில் ஆடித்திருக்கல்யாணப் பெருவிழா 25—7—62 முதல் 4—8—62 வரை நடைபெற்றது.

திருவாடானை: ஆதிரத்தினேசுவரர் கோயில் பெருவிழா 24—7—62 முதல் 8—8—62 வரை நடைபெற்றது.

சென்னை: வேளாளதேனும்பேட்டை - எல்லையம்மன் கோயிலில் ஆடித்திருவிழா 3—8—62 முதல் 12—8—62 வரை நடைபெற்றது.

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

மலைநாட்டுத் திருப்பதிகளுள் திருவாட்டாற்றுப்பதியை முன்னிதழில் அநுபவிக்கத் தொடங்கினோம். அவதாரிகையும் முதற்பாட்டு மனுபவித்தோம். இப்போது இரண்டாம் பாட்டு முதலாக அநுபவிப்போமாக. நம்மாழ்வாரருளிய திருவாய்மொழியில் பத்தாம்பத்தில் ஆறும் பதிகமொன்றே திருவாட்டாற்றுப்பதியின் பாடல் என்பதை நினைப்பூட்டுகிறோம்.

2. வாட்டாற்று னடிவணங்கி
   மாஞாலப் பிறப்பறுப்பான்
   கேட்டாயே மடநெஞ்சே!
   கேசவனெம் பெருமானைப்
   பாட்டாய பலபாடிப்
   பழவினைகள் பற்றறுத்து
   நாட்டாரோ டியல்வொழிந்து
   நாரணனை நண்ணினமே.

இருள்தருமா ஞாலத்தினுள் பிறப்பையறுப்பதற்காகத் திருவாட்டாற்றெம்பெருமானுடைய திருவடிகளை வணங்கி அப்பெருமான் விஷயமாகப் பல பாசுரங்களும் பாடி, அவிச்சை கருமம் முதலான பழவினைகளைப் பற்றோடறுத்து இம்மடவுலகத்தாரோடு சேர்க்கையையும் தவிர்த்துத் திருமாலைக் கிட்டப்பெற்றோம்; நெஞ்சே! பெற்ற பேற்றின் கனத்தைக் கண்டாயே! என்பது பதப்பொருள். இனி விசேடவுரை கேளீர்.

கீழ்ச்செய்யுளில் "ஆழியானருள் தருவான் அமைகின்றான்" என்றாராழ்வார். எம்பெருமான் தம்மைத்திருநாட்டுக்குக் கொண்டு போக விரைந்ததையே அருள்தருவதாகக் கூறினர். முதற் பிரபந்தத்தின் முதற் பாசுரமே பிடித்து ஆழ்வார் பலகாலும் பிரார்த்தித்த பொருளேயன்றோ இப்போது கிடைக்கவிருக்கின்றது. பல்கால் நிர்ப்பந்தித்துக் கேட்டதைக் கொடுத்தால் அது அருள்செய்ததாகுமோ? என்று நெஞ்சு கேட்டதாக வைத்து அதற்கு விடையிறுக்கிறாராழ்வார். கேட்டாயே மடநெஞ்சே! என்று விளித்து மேலேயருளிச்செய்வது மிக அற்புதமான வார்த்தை. அறிவிலியான நெஞ்சே! நாம் கோரினது எவ்வளவு? பெற்றது எவ்வளவு? என்று ஆராயமாட்டிற்றிலையே. இப்போது எவ்வளவு பெற்றோமோ அவ்வளவும் முன்பு கோரியிருக்கிறோமா வென்பதைச் சிறிது விமர்சித்துப்பார். பொய்ந்நின்ற ஞானம் போகவேணுமென்றும், பொல்லாவொழுக்கு கழியவேணுமென்றும், அழுக்கு டம்பு தொலைய வேணுமென்றும் இவ்வளவே யன்றோ நாம் கோரினது. [அதாவது விரோதிகள் கழியவேணுமென்று மட்டுமே நாம் விரும்பியதென்கை.] நாம் பெற்றது இவ்வளவேயோ? பழவினைகள் பற்றறுத்ததற்கு மேற்பட பாட்டாய பல பாடப்பெற்றோம்; நாட்டாரோ டியல்வொழியப் பெற்றோம்; நாரணனை நண்ணப்பெற்றோம்; இவ்வளவும் அவனது அருள் பலித்தபடியன்றோ. இதை நன்கு உணர்ந்து பாராய் நெஞ்சே! என்று கூறும் முகத்தால் ஆழ்வார் தாம் பெற்ற பேற்றின் கனத்தைப் பாராட்டிக் கூறினபடி.

மாஞாலப் பிறப்பறுப்பான் வாட்டாற்றானடி வணங்கி: எம்பெருமானையடி தொழுது நாம் இரந்தது மாஞாலப்பிறப்பறுக்க வேணுமென்பது மட்டுமே; மற்றெதுவுமன்று, ஆயினும் நாம் பெற்ற பேறு காணாய் என்கிறார் தமது திருவுள்ளத்தை நோக்கி, "கேட்டாயே மடநெஞ்சே!" என்பது ஆனந்த மேலீட்டால் சொல்லுகிற வார்த்தை. **கேட்டாயே** யென்றது - நன்றாக ஆராய்ந்துபார் என்றபடி.

நாம் பெற்ற பேறு என்னவெனில்; **கேசவனெம் பெருமானைப் பாட்டாயபலபாடி** : கேசவனென்னுந் திருநாமத்திற்குக் குழலழகனென்பதும் ஒரு பொருளாதலால் தன்னுடைய குழலழகைக் காட்டி நம்மை யடிமை கொண்டானென்று ஸூசிப்பித்தவாறு. அதற்கு மேலே பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம் பாடலை நம்மையிட்டுக் கவிபாடுவித்துக் கொண்டான்; இது பெரும் பேறன்றோ. பச்சைப்பசும் பொய்கள் பேசி

மானிடத்தைக் கவிபாடுவார் மலிந்தவுலகில் என்னையென்னப்ப னெம்பெருமானைக் கவி பாடப்பெற்றதும், அது தானும் ஒரு நூறு இருநூறன்றியே ஆயிரமாப் பாடப்பெற்ற தும் நாம் வேண்டிப்பெற்றதோ? இதற்கு மேலே, நாட்டாரோடு இயல்வொழிந்து உண் டியே உடையே உகந்தோடு மிம்மண்டலத் தாரோடு சேர்க்கையறுகை சாமானிய மானதோ? இது பேறுகட்கெல்லாம் தலை யான பேறன்றோ? அஹங்கார மமகாரங்க ளுக்கு வசப்பட்டுக் கிடக்குமிந்த நாட்டா ரோடு சேர்க்கை யொழியப்பெற்றதை நெஞ்சே! நீ மதிக்கின்றிலையே?

இதற்கும் மேலே, நாரணனை நண்ணினமே- "மாதா பிதா ப்ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:" என்ற உபநிட தத்தின்படி நாராயணனென்னுஞ் சொல் லுக்கு 'ஸகலவித பந்துவுமானவன்' என்ப தும் ஒரு பொருளாகையாலே ஆபாச பந்துக் களை விட்டொழித்துப் பரமபந்துவை நண் ணப்பெற்றோமே; இவ்வளவும் நாம் இரந்து பெற்றதன்றிக்கே அவனருள் பலித்தபடி காண் நெஞ்சே! என்றாராயிற்று. (2)

3. நண்ணினம் நாராயணனை
நாமங்கள் பலசொல்லி
மண்ணுலகில் வளம்மிக்க
வாட்டாற்றான் வந்து,இன்று
விண்ணுலகந் தருவானாய்
விரைகின்றான் விதிவகையே
எண்ணின வாறாகா
இக்கருமங்களென் னெஞ்சே.

என்னுடைய அனுபவத்திற்கு வாய்த்த நெஞ்சே! பல திருநாமங்களையுஞ் சொல்லி ஸ்ரீமந்நாராயணனைக் கிட்டப்பெற்றோம்; இந் நிலத்தில் பலவகை வளங்களும் பொருந்திய திருவாட்டாற்றுப் பதியின் தலைவன் தானே வந்து இப்போது நமது கட்டளையின்படியே திருநாட்டைத் தந்தருள்பவனாகிக் காலதாம தம் பொறுக்கமாட்டானாய் விரைவு காட்டு கின்றான்; இக்காரியங்கள் நாம் எண்ணின படிக்கு மேற்பட்டு விட்டனவே என்பது பதப்பொருள். இனி விசேஷப் பொருள் கேளீர்.

இப்பாட்டும் நெஞ்சோடே கொண்டா டிச் சொல்லுவதாக அமைந்தது. நெஞ்சே! நம்முடைய பேற்றுக்கு அவன் விரையும்படி யாயிற்றே! இப்படியாகுமென்று நாம் கனவி லாவது எண்ணிற்றுண்டோ? நாமெண்ணி னது ஒன்றாய், நிகழ்ந்தது மற்றொன்றாய் முடிந்ததே, இதுவென்! என்று வியக்கிறா ராழ்வார். அன்பு தூண்டச் சொல்லுவார்க்கு இன்ன திருநாமந்தான் சொல்லவேணு மென்று ஒரு நியதியில்லாமையாலே "நாமங் கள் பல சொல்லி" என்கிறார். மண்ணுலகில் வளம்மிக்க வாட்டாறு-இங்கு 'வளம்' என்னுஞ் சொல்லால் நினைப்பது பகவத்குண ஸம்ருத் தியை யென்பர். எம்பெருமானுடைய திருக் குணங்கள் ஸ்ரீவைகுண்டத்தில் பகல்விளக் குப்போலே அப்ரகாசமாயும் அல்பப்ரகாச மாயுமிருக்கும். "இருட்டறையில் விளக்குப் போலே பிரகாசிப்பது இங்கே" என்கிற சீர் வசனபூடணப் பாசுரத்தின்படி அவற்றின் பிரகாசம் மண்ணுலகில்தான் மிக்கிருக்கு மென்க.

ஆசார்யஹிருதயத்தில்-" மோக்ஷதானத் தில் ப்ரணதபார தந்திரியம் வளம்மிக்க நதி யிலே கரைபுரளும்" என்கிற சூர்ணையினால் இத்தலத்தில் மிக விளங்கும் திருக்குணம் "அடியவரின் கட்டளைக்கு உட்பட்டிருத்த லாகிற பார தந்திரியம்" என்றருளிச் செய் தார். கேட்பாரற்ற சுதந்திரனாய்த் தேவாதி தேவனாயிருக்கிற எம்பெருமான், "நமது விதி வகையே" என்று ஆழ்வார் பலகாலுஞ் சொல்லும்படி தான் காரியஞ் செய்கைக்கு இவருடைய கட்டளையை எதிர்பார்த்திரா நின்றானென்றால் இதனின் மிக்க வள மில்லையே.

"இன்று விண்ணுலகம் விதிவகையே தருவானாய் விரைகின்றான்" என்று மூன்று மடியை இயைத்துக்கொள்வது. [இன்று] நேற்றுவரை எதிர்பார்த்ததன்று இது; இன்று இங்ஙனே விடியக் கண்டதித்தனை என்று அதிசயமாகக் கூறுகிறபடி. "விண் ணுலகில் வாழ்ச்சிதருவானாய்" என்னாமல் "விண்ணுலகம் தருவானாய்" என்றதை நோக்கிப் பேராசிரியர் [நம்பிள்ளை] அருளிச் செய்வது பாரீர். "அங்கே ஒரு குடியிருப்பு மாத்திரமே கொடுத்து விடுவானாயிருக்கின் றிலன்; 'வானவர்நாடு' என்கிற பொதுவை யறுத்து நமக்கே ஆட்சியாகத்தர விரைகின் றான்"—என்று.

விரைகின்றான்: 'ஆழ்வாரே! நான் முன் னம் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கி றேன், நீர் கடுகப்புறப்பட்டு வாரும்' என்று சொல்லிவிட்டு எம்பெருமான் தான் மூட்டை

கட்டிக்கொண்டு முன்னேபோய், சிறிது தூரஞ்சென்று திரும்பிப்பார்க்கையில் ஆழ்வார் வாராதிருப்பது கண்டு மீண்டுவந்து 'ஆழ்வீர்! ஏனிப்படித் தாமதிக்கிறீர்? வாரும், புறப்படும்' என்று சொல்லிப் பதறுகின்றான் போலும். இன்று இப்படிப் பதறுகிறவன் "தாவி வையங்கொண்ட தடந்தாமரை கட்கே, கூவிக்கொள்ளுங்கால மின்னங்குறுகாதோ?" என்று ஆழ்வார் பதறினபோது எங்கேயுறங்கினானென்று கேட்கவேண்டா; ஒரு காரியத்திற்காக வைத்திருந்தான்; அக்காரியம் முடியுமளவானவாறே விரைகின்றானென்பது யுக்தமேயன்றோ. காரியமாவது—தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலைகள் சொல்லுவிக்கை.

விரைகின்றானென்கைக்கு விஷயமுண்டோ? ஸர்வசக்தியுக்தனை தனக்கு ஆழ்வாரைக்கொண்டுபோக விருப்பமிருந்ததாகில் கொண்டுபோகத் தடையென்ன? தடுப்பாரொருவருமிலரே. விரைகின்றானென்கையாலே ஏதோ தடையிருப்பதுபோலன்றோ தெரிகிறது; அஃது என்ன தடை! என்று கேட்க நேரும். கேண்மின். தன் இஷ்டப்படி ஆழ்வாரைக் கொண்டுபோவதில் அவனுக்குச் சிறிதும் விருப்பமில்லை; 'இப்படிச்செய், இப்படிச்செய்' என்று தன்னை நோக்கி ஆழ்வார் விதிக்க அதன்படி நடந்துகொண்டால்தான் தனக்கு ஸ்வரூபஸித்தியென்று அவன் நினைத்திருக்கையாலே அந்த கட்டளையைப் பெறுவதற்காகவே விரைகின்றான்; அது பெறுததுவே தடையென்க. முதற்பாட்டிற்போல இப்பாட்டிலும் விதிவகையே என்றதனால் இது தெரியவரும்.

விரைகின்றானென்றதில் ஒரு சிறந்த நூற்கொள்கை தொனிக்கும். (அதாவது) உலகில் உடைமையைப் பெறுவது உடையவனுக்கே பணி; உடைமை தவறிவிட்டால் 'ஐயோ! நாம் தவறிவிட்டோமே' என்று அது கரையமாட்டாது. அதனைத் தேடிப் பெற்றுப் பூண்டு களிக்கவேணுமென்று உடையவனே விரைவது இயல்பு. அதுபோல இந்த ஜீவாத்மாவைப் பெறுவது இறைவனுக்கே பேறாகையாலே அவன் விரைவது தான் பொருத்தம்; ஸபலமாகக்கூடியதும் அதுதான் என்பது நுட்பொருள்.

இக்கருமங்கள் எண்ணினவாறாகா: நிகழ்ந்தவை நாமெண்ணினபடி யாகவில்லையென்று குறையுடன் கூறுவதன்று; நாம் எண்ணினவளவுக்குப் பதின்மடங்காகக் காரியம் பலித்துவிட்டதேயென்று உகப்பின் மிகுதி தோன்றச் சொன்னவாறு. உலகத்தாரிலே சிலரை நோக்கிச் சில காரியங்கள் வேண்டுகிறோம்; அவர்களும் அப்படியேயென்று தலை துலுக்கியிடுவதுமுண்டு; ஆயினும் கோரினதில் நூற்றிலொருபங்கும் பலிக்கக் காணமாட்டோம்; சிறிது பலிக்கக் கண்டாலும் அதற்கும் நம்முடைய முயற்சியே முக்கியமாயிருக்கும்; எம்பெருமான் திறமோ இவற்றுக்கு எதிர்த்தட்டாயிருக்கும். (3)

4. என்னெஞ்சத் துள்ளிருந்து இங்கிருந்
 தமிழ்நூலி வைமொழிந்து
வன்னெஞ்சத் திரணியனை
 மார்விடந்த வாட்டாற்றான்
மன்னஞ்சப் பாரதத்துப் பாண்டவர்க்
 காப்படை தொட்டான்
நன்னெஞ்சே! நம்பெருமான்
 நமக்கருள்தான் செய்வானே.

நல்ல மனமே! வலிய நெஞ்சையுடையனை இரணியாசுரனது மார்வை இருபிளவாக்கி முடித்தவனும், திருவாட்டாற்றிலே கோயில் கொண்டிருப்பவனும், அரசர்களனைவரும் அஞ்சும்படி பாரதப் போரிலே தன்னடியார்களான பாண்டவர்களுக்காக ஆயுதமெடுத்த அன்பனும், நமக்கு இறைவனுமான பெருமான் என்னெஞ்சத்துள்ளே பொருந்தியிருந்து இவ்விருப்பிலே பெரிய தமிழ் நூலாகிய இத்திருவாய்மொழியைத்தானே யருளிச்செய்து அவ்வளவோடும் நில்லாமல் நமக்கு மேன்மேலு முதவிகளைச் செய்வானுயுமிரா நின்றான்காண்-என்பது பதப்பொருள். இனி விசேடவுரை கேளீர்.

எம்பெருமான் தான் கட்டளையிடுபவனாயிருக்குமிருப்பு தவிர்ந்து ஆழ்வாருடைய கட்டளையை எதிர்பார்ப்பவனாயிருக்கும்படியைக் கீழ் முதற்பாட்டிலும் மூன்றாம்பாட்டிலும் "விதிவகையே" என்பதனாலருளிச் செய்தாரே; இது ஸம்பவிக்குமோவென்று சிலர் சங்கிப்பார்களென்று கருதி அந்த சங்கைக்குப் பரிஹாரமாக இப்பாட்டு அருளிச்செய்கிறபடி. இப்பாட்டில் இரண்டாமடியும் மூன்றாமடியும் உயிர் நிலையாயிருக்கும். எம்பெருமான் தான் அடியவர்களுக்கு விதேயன் என்னுமிடத்தைப் பிரகலாதாழ்வான் திறத்திலும் பாண்டவர்கள் திறத்திலும் காட்டிற்றாயிற்று. முன்னே நின்றதொரு ஆணைக்

காட்டி 'நீ சொல்லுகிற பகவான் இங்குளனோ?' என்று பிரகலாதனை நோக்கி இரணியன் கேட்க, அவன் எங்குமுளனென்று இயம்ப, அவனுடைய சொல்லை மெய்ப்பிக்கைக்காகவே அப்போதே அத்தூணில் நின்றும் தோன்றினபடியாலே இந்த அபதானத்தினால் பகவான் பக்தர்களுக்கு விதேயன் என்னுமிடம் வெளியாயிற்று. இங்ஙனே மற்றொரு செய்தியுமுளது. பகவான் பார்த்தசாரதியாய்த் தேரையோட்டிக்கொண்டு பாரதப்போரில் சென்று நிற்க, அர்ஜுனன் "ஸேநயோருபயோர் மத்யே ரதம் ஸ்தாபய மே அச்யுத!" [கண்ணா! இரண்டு ஸேனைகளினிடையே எனது தேரைக்கொண்டுபோய் நிறுத்து] என்று சொல்ல, அப்படியே உபயஸேனைகளினிடையே தேரைக்கொண்டுபோய் நிறுத்துவது முதலிய பல காரியங்களினால் அவ்வவதாரத்திலும் அடியார்க்கு விதேயனாயிருக்கும்படியை விளங்கக் காட்டினனாயிற்று. ஆக இங்ஙனே ஆச்ரித விதேயனாயிருப்பதையே இயல்வாகக்கொண்ட பெருமான் எனக்கு விதேயனாயிருப்பதில் என்ன ஆச்சரியம் என்றதாகக் கொள்க.

என்னெஞ்சத்துள்ளிருந்து: தாம் நெடுங்காலம் ஸம்ஸாரத்திலே விஷயாந்தரங்களிலே மண்டிக்கிடந்தமையாகிற தன்மை தோற்ற என்னெஞ்சு என்றார் ஆழ்வார்; எம்பெருமானோவென்னில் 'ஆழ்வார் என்னுடையது என்று அபிமானிக்கப்பெற்ற அந்நெஞ்சு தான் நமக்கு வேண்டியது' என்று கொண்டு மேல்விழுந்து உள்ளே புகுந்தான். மறுபடியும் வெளியேவந்தால் மீண்டும் உள்ளே புக வழி கிடைப்பது அரிதாகுமோ! என்னுமச்சத்தினால் அங்கேயே தாவரப்பொருள் போலே நிலைநின்றிருந்தான். அப்படியிருந்து அவன் செய்த செய்கைதான் என்னென்னில்; இங்கு இருந்தமிழ் நூலிவை மொழிந்து-இப்படிப்பட்ட திருவாய்மொழியை யருளிச்செய்தானாயிற்று என்கிறார். "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்று திருவாய்மொழியைத் தாமே சொன்னதாகப் பேசின ஆழ்வார் அதை எம்பெருமான் சொன்னதாக இங்குக் கூறுவது பொருந்துமோ? என்று சங்கிக்கவேண்டா. இரண்டும் பொருந்தும்; எம்பெருமான் முன்னுருச் சொல்ல ஆழ்வார் பின்னே சொன்னபடி. ஏழாம்பத்தில் (9) என்றைக்கு மென்னை யென்கிற பதிகத்தில் இதனை ஆழ்வார் தாமே விளங்கவைத்தாரென்க. (4)

(தொடரும்)

வாணியம்பாடி: பொன்னியம்மன் கோயிலில் திருவிழா 3—8—62 முதல் 15—8—62 வரை நடைபெற்றது.

குன்றக்குடி: தெய்வசிகாமணி தொடக்கப் பள்ளியில் சமயப்பயிற்சி வகுப்பை 8—7—62ல் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ. பி. எல். அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

வீரவநல்லூர்: பூமிநாதர் கோயிலில் தெப்பத்திருவிழா 11—7—62-ல் நடைபெற்றது.

பிரான்மலை: திருக்கொடுங்குன்றநாதர் கோயிலில் திருப்புகழ்க் கல்வெட்டை 8—7—62-ல் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ. பி.எல். அவர்கள் திறந்து வைத்தார்கள். 8—7—62-ல் அடிகளார் உயர்நிலைப் பள்ளியில் சமயப்பயிற்சி வகுப்பையும் துவக்கிவைத்தார்கள்.

பிரமதேசம்: ஸ்ரீ கைலாசநாத சுவாமி கோயில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 9—7—62-ல் நடைபெற்றது.

சென்னை: அருணசலேசுவரர் கோயிலில் ஆடிப்பூர பெருவிழா 24—7—62 முதல் 4—8—62 வரை நடைபெற்றது.

வெட்டுவாணம்: இரேணுகாம்பாள் அம்மன் கோயிலில் பெருவிழா 4-8-62 முதல் 18—8—62 வரை நடைபெற்றது.

திருவலஞ்சுழிக் கல்வெட்டு வரலாறு

[வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், திருவையாறு.]

இவ்வூர்ச் சிவன் கோயிலில் சோழ மன்னர் களில் மதுரை கொண்ட கோப் பரகேசரி வர்மன், அல்லது முதற் பராந்தகன், முதலாம் இராசராச சோழன், இரண்டாம் இராசேந்திர சோழன், முதற் குலோத்துங்க சோழன், விக்கிரமசோழன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவன், மூன்றுங் குலோத்துங்க சோழன் இவர்கள் காலங்களிலும், பல்லவ மன்னர்களில் சகல புவனச்சக்கரவர்த்தி கோப் பெருஞ்சிங்க தேவன் காலத்திலும் செதுக்கப் பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இறைவர் இறைவியாரின் திருப்பெயர்கள்

இக்கோயில் கல்வெட்டுக்களில் இறைவர் திருவலஞ்சுழி உடையார், திருவலஞ்சுழி ஆழ்வார் என்னும் பெயர்களாலும்; இறைவியார் **வண்டுவார் குழலி நாச்சியார்** என்னும் பெயராலும் குறிக்கப்பெற்றுள்ளனர்.

திருப்பணிகள்

இக்கோயிலின் மகாமண்டபத்திற்குத் **தீராவினை தீர்த்தான் திருமண்டபம்** என்றுபெயர். அதைக் கட்டியவன் **ஆரூரவமுது தித்தன் பெருமாள்** ஆவன். அவன் அம்மண்டபத்தை வீரமாராசன் ஐயன் வெற்றிக்காகக் கட்டினான். இச்செய்தி இம்மண்டபத்தில் வடபாலுள்ள தூண் ஒன்றில் செதுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பிரகாரத்துக் கிழக்குச் சுவர் மகாப் பிரதான திப்பரசர் மகனார் தேவராய உடையாரால் கட்டப்பெற்றது. மூன்றும் பிரகாரத்துச் சுவர் நெருப்புப் பற்றிக்கொண்டதன் விளைவாக கீழே விழுந்துவிட்டது. அது ஆர்க்காட்டுத் தலைவனும் செல்லப்பிள்ளை என்பவனும் ஆகிய சேதிராயனால் மீளவும் கட்டப்பட்டது. இத் திருக்கோயில் பரிகல மண்டபத்தைக் கட்டுவித்தவன் ஆதமங்கல முடையான் ஒற்றியூரான் பூபாலன் கருணாகரன் ஆவன். இது நிகழ்ந்தகாலம் முதற் குலோத்துங்க சோழனின் நாற்பத்துமூன்றும் ஆண்டு ஆகும். இத் திருவலஞ்சுழி உடையார் கோயில் கிழைச்சோபானப் பீடத்து இருக்கும் மண்டபம் உத்சவ மண்டபம் ஆகும். இது கட்டப்பெற்ற காலம் வீரராசேந்திர சோழதேவரின் எட்டாம் ஆண்டாகும்.

க்ஷேத்திரபாலரின் திருக்கோயில்

க்ஷேத்திரபாலர் என்பவர் வயிரவர் ஆவர். இவர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில், வெளிப்பிரகாரத்தில் இராச கோபுரத்திலிருந்து இரண்டாம் கோபுரவாசலுக்குப் போகும் வழியில், தென்பாகத்தில் இடிந்த நிலையில் கல்வெட்டுக்களுடன் கூடிய ஒருசிறு கோயிலாக இருக்கிறது. இக்கோயிலைக் கட்டியவர் முதலாம் இராசராச சோழரின் முதற் பெருந்தேவியார் தந்திசத்தி விடங்கியரான **ஸ்ரீ ஒலோகமாதேவியார்** ஆவர்.

இவ்வம்மையார் இக்கோயிலைக் கட்டியது முதலாம் இராசராச சோழனின் ஆட்சியாண்டு இருபத்தைந்து, அதாவது இற்றைக்கு 925 ஆண்டுகளுக்கு முன்னதாகும். இச்செய்தி "இராசராசதேவர் மகாதேவியார் தந்திசத்தி விடங்கியாரான ஸ்ரீ ஒலோகமாதேவியார் உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுத் திருக்குடமூக்கில்பால் திருவலஞ்சுழியில் நாம் எடுப்பித்த திருக்கற்றளி பிள்ளையார் க்ஷேத்திரபால தேவர்க்கு" (S. I. I. Vol. VIII No. 234) என்னும் கல்வெட்டுப் பகுதியால் விளங்கும்.

எழுந்தருளுவித்த பிரதிமங்கள்

"பூமருவிய திருமாதும் புவிமாதும் காமருவிய கலைமாதும் புகழ்மாதும்"—எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியையுடைய கோப் பரகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசராச தேவரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில், திருவலஞ்சுழி உடையார் திருமடைவிளாகத்தில் இருந்த தேவரடியார் ஆட்கொண்டாள் தேவும் திருவும்

See the Annual Report on South Indian Epigraphy for the years 1902 Nos. 618—634; 1928 Nos. 192—213; and South Indian Inscriptions Volume VIII Nos. 215—238.

உடையாளும், கீழ்க்கடை நின்றாளும், ஆகிய இருவரும் இக்கோயிலில் திருநாவுக்கரைய தேவர், திருவாதவூராளி, திருக்கண்ணப்ப தேவர் இவர்களை எழுந்தருளுவித்து, இவர்களின் வழிபாட்டிற்கு நில நிவந்தஞ் செய்துள்ளனர்.

சிறப்பு நாட்கள்

இக்கோயிலில் திருவாதிரை நாளுக்கும், தைப்பூசத்திருநாளுக்கும் வேண்டும் செலவினங்களுக்கு, இரண்டாம் இராசேந்திர சோழன் நிலம் அளித்திருந்தான். அதை அம்மன்னன் கங்கைகொண்ட சோழன் திருமாளிகையில் திருமஞ்சனச் சாலையில் பள்ளிப்பீடம் காலிங்கராசனில் எழுந்தருளியிருந்து விட்டதாக அவனுடைய கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

பள்ளியறை நாச்சியாரைப்பற்றிய குறிப்பு

பள்ளியறையில் எழுந்தருளியிருக்கும் இறைவியார் திருப்பள்ளியறைப் பெரிய நாச்சியார் என்னும் பெயரால் குறிக்கப்பெற்றுள்ளனர். இவர் திருமுன்பு எரிவதற்கு ஐந்துநிலை தாராகுத்து விளக்குகள் இரண்டினை திரிபுவனச் சக்கரவர்த்தி · இராசாதிராச தேவர் காலத்தில், சயங்கொண்ட மண்டலத்து ஆமூர்க் கோட்டத்துச் சிறுகுன்றை நாட்டுக்காரிகைக் குளத்துளான் பெருமான் நம்பி ஆளுடையானன செயதரப் பல்லவரையன் கொடுத்துள்ளான்.

திருவலஞ்சுழி உடையார் தேவதானங்கள்

கோப்பரகேசரிவன்மர்க்கு யாண்டு பன்னிரண்டாவதில் இன்னம்பர் நாட்டுத் தத்தங்குடி, ஒதியநத்தங் குடிப்பால் அழகத்துவப்பேறு, இவ்விடங்களில் மூவேலியும் இராசராச தேவரின் இருபத்தோராம் ஆண்டில் இன்னம்பர்நாட்டு நாவற்குடிப்பால் நங்கையார் நிலம் மூவேலி ஆக ஆறுவேலி நிலங்கள் தேவதானமாக விடப்பட்டிருந்தன.

வெள்ளைப் பிள்ளையார்

திருவலஞ்சுழியின் மக்கட் தொகை குறைந்துகொண்டே வந்தது. ஆகையால் ஊரின் நலங்கருதி வெள்ளைப் பிள்ளையார்க்கு திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவரின் பதினன்காம் ஆண்டில் நிலம் விடப்பட்டது. மற்றும் இப் பிள்ளையார்க்கு அளிக்கப்பட்ட நிவந்தம் பலவாகும்.

"உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுத் திருக்குட மூக்கில்பால் திருவலஞ்சுழி"—என்று குறிக்கப் பெற்றிருப்பதால் இவ்வூர் உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுக்கு உட்பட்டிருந்தது என்பதை அறியலாம்.

சரித்திரப் பகுதி

முதலாம் இராசராச சோழன் சிவபாத சேகரன் என்னும் பட்டம் பெற்றிருந்ததை இக்கோயிலிலுள்ள அவனுடைய இருபத்தோராம் ஆண்டுக் கல்வெட்டு உணர்த்துகிறது. முதலாம் இராசராச தேவர் திருமகளார் விமலாதித்ததேவர் மகாதேவியார் ஸ்ரீ குந்தவை நங்கையார், நடுவில் பெண்பிள்ளை நங்கையார் மாதேவடிகளார், இவர்கள் இருவர்களின் பெயர்கள் இவ்வூர்க் கல்வெட்டில் காணக் கிடக்கின்றன.

முதலாம் இராசராச மன்னனுடைய திருத்தமக்கையார் சரித்திரத்தில் **முதலாம் குந்தவையார்** எனக் கூறப்பெறுவர் ஆகலின், ஈண்டுக் குறிக்கப்பெற்ற இராசராச தேவர் திருமகளார் விமலாதிதத தேவர் மகாதேவியார் ஸ்ரீ குந்தவை நங்கையார் **இரண்டாம் குந்தவையார்** என்று அழைக்கப் பெறுவர்.

மாதேவடிகள் என்னும் பெயர்வழக்கு

மாதேவடிகள் என்பது முதற் பராந்தக சோழனது மூத்தமகனை இராஜாதித்தனின் தேவியார் பெயர் என்பதைத் திருநாவலூரில் கி. பி. 946இல் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டு முதல் முதல் தெரிவிக்கின்றது. (Annual Report on South Indian Epigraphy for the year 1902 No. 363) "ஸ்வஸ்திஸ்ரீ சகரையாண்டு எண்ணூற்றெழுபத்தொன்பதாவது வாவலூர்நாட்டுத் தேவதானத் திருவாமாத்தூருடைய மஹாதேவர்க்கு முட்டநாட்டுக் கற்பூண்டி நாடுடையான் பரபூமி கந்நவனுகிய கண்டராதித்தப் பல்லவரையன் தன் மகள் மாதேவடிகளுக்குப் பரவி வைத்த பொன்னிருபதின் கழஞ்சும் கொண்டு விளக்கு எரிக்கக்கட........ பந்மாஹேஸ்வர ரகைஷ"—என்னும் கல்வெட்டு, கி. பி. 957 (879+78=957) இல்

ஏற்பட்டதாகும். இது முட்டநாட்டுக் கற்பூண்டி நாடுடையான் பரபூமி கன்னவனுகிய கண்டராதித்தப் பல்லவரையன் மகள் **மாதேவடிகள்** என்னும் பெயர் பெற்றிருந்ததை உணர்த்துகின்றது.

கோயில் திருவிசைப்பா பாடிய கண்டராதித்த சோழதேவரது தேவியார் "மாதேவடிகளான செம்பியன்மாதேவியார்" எனக் கல்வெட்டில் கூறப்பெற்றுள்ளனர். இத் திருவலஞ்சுழியில் குறிக்கப்பெற்ற "உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருமகளார் நடுவில் பெண்பிள்ளை நங்கையார் மாதேவடிகளார் உடையார் ராஜராஜ தேவர்க்கு ஆடி அருளப் பிரசாதம் பெற்ற பொன்னில்"—என்னும் கல்வெட்டுப் பகுதி முதலாம் இராசராச தேவரின் மகளாரின் பெயர் **மாதேவடிகள்** என்பதை உணர்த்துகின்றது. எனவே இவைகளால் மாதேவடிகள் என்பது இயற்பெயரே என்பது பெறப்படும். மேலும் முதலாம் இராசராசன் தனக்குச் சைவப்பற்றை ஊட்டி வளர்த்த தன் பெரிய பாட்டியாராகிய செம்பியன்மாதேவியார்க்குரிய மாதேவடிகள் என்னும் பெயரையோ அல்லது முதற்பராந்தக சோழனது முதல் மகனாகிய இராஜாதித்தன் தேவியார்க்குரிய மாதேவடிகள் என்னும் பெயரையோ தன் மகளுக்கு இட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்க இடந்தருகின்றது.

"நடுவில் பெண்பிள்ளை நங்கையார் மாதேவடிகளார்" — என்பதால் முதலாம் இராசராசனுக்கு மாதேவடிகளார், குந்தவையார் II என்னும் இவர்களோடு மற்றொரு பெண்ணும் இருக்க வேண்டுமென்று திரு. T. A. கோபிநாதராயர் M. A. அவர்கள் சோழவம்ச சரித்திரச் சுருக்கம் இரண்டாம் பதிப்பு, பக்கம் 15இல் குறித்துள்ளனர். அவர்கள் கொள்கை மெய்யே என்பதைத் திருவையாறு ஒலோகமாதேவீச்சரக் கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது. அம் மற்றொரு மகளாரின் பெயர் **அருமொழி சந்திர மல்லியாரான கங்கமாதேவியார்** என்பதாம்.

இதை உணர்த்தும் கல்வெட்டு

இடம்:- திருவையாறு ஒலோகமாதேவீச்சரத்துக் கர்ப்ப இல்லின் தென்பக்கத்து அடிப்பாகம். (On the southern base of the Central Shrine.)

வரி (1) ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போலப் பெருநிலச் செல்வியும் தனக்கே யுரிமை பூண்டமை மநக்கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கை நாடும் கங்கபாடியும் நுளம்பபாடியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் திண்டிறல்வென்றித் தண்டாற்கொண்ட தன்னெழில்வளர் ஊழியுள்ளெல்லா யாண்டும் தொழுதகை விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் ஸ்ரீ கோராஜகேஸரி வம்மராகிய ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யா—

(2) -ண்டு உங (23) ஆவது ராஜேந்திரஸிம்ஹ வளநாட்டுப் பொய்கைநாட்டுத் திருவையாறு ஒலோமகா தேவீஸ்வரமுடைய மகாதேவர்க்கு ஸ்ரீராஜராஜ தேவர் நம்பிராட்டியார்த் தந்திசத்தி விடங்கியாரான ஒலோகமகாதேவியார் இட்ட செகண்டிகை ஒன்று நிறை எண்பத்து பலமும், மேற்படி ஒன்று நிறை எண்பத்தறு பலமும், மேற்படி ஒன்று நிறை எண்பத்தறு பலமும், மேற்படி ஒன்று நிறை எண்பத்தறு பலமும், மேற்படி ஒன்று நிறை எண்பத்தறு பலமும், மேற்படி ஒன்று நிறை எண்பத்தறு பலமும்

(3) விரலால் இருபத்து நால் விரல் கொண்டிது முழமாக இதில்பாதி பன்னிரு விரல் கொண்டிது ஒருசாண் ஆக இதில்பாதி ஆ............ சாணாக வந்த சாண் நாற் சாண்கொண்டிது ஒருமுழமாக கிடாரம் ஒன்று சாணே ஒருவிரல் உசரத்து எண் சாணே மூவிரல்வரச் சுற்றில் மேற்படி கோலால் நிறை முன்னூற்று எழுபலம். உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருமகளார் அருமொழி சந்திரமல்லியாரான கங்கமாதேவியார் ஒலோகமா தேவீஸ்வரம் முடையார்க்கு குடுத்த பொன்னின் ஈச்சோப்பி அலகு நிலைப்படி பொன் முப்பத்துநாற் கழஞ்சே...... மஞ்சாடியும் ஷெயார் குடுத்த ... ..

(4) ஒன்று மேற்படி விரலால் நாற் சாணேய் அய்விரல் அரைய் உசரத்து, அஞ் சாணேய் இருவிரல் பாதச் சுற்றில் உட்கருவும்...... விளக்கு ஒன்று, நிறை இருநூற்று இருபதின்பலம். மேற்படி திராவிளக்கு ஒன்று. மேற்ப்படி விரலால் அஞ்சாணேய் இருவிரலுசரத்து அஞ்சாண் நால்விரல் பாதச்

சுற்றில் உள்கருவும் இருப்பு நாராயமும் உள்ப் பட மேப்படி கோலால் விளக்கு ஒன்று நிறை இருநூறு மேப்படி விளக்கு + மேப்படி விரலால் அஞ்சாணுசரத்து அஞ்சாணே ஒருவிரல் பாதத்து உட்கருவும் இருப்பு நாராயமும் உள்ப்பட மேற்படி கோலால் நிறை இருநூற் றறுபதுபலம். மேல்ப்படி திராவிளக்கு + மேற்படி விரலால் ஐசாண் உச...... பாதச் சு......

(5) மூவிரலரை பாதச் சுற்று உள்க் கருவும் இருப்பு நாராயமும் உள்ப்பட மேற் படி கோலால் நிறை நூற்றெழுபதுபலம் மேற்படி திராவிளக்கு + மேற்ப்படி விரலால் நாற்ச் சாணேய் மூவிரல் உசரத்து......... கருவும் இருப்பு நாராயமும் உள்ப்பட மேற்ப் படி கோலால் நிறை நூற்று நாற்பத்து மூன்று பலம். மேற்படி திராக்கோல் மேற்ப் படி விரலால் முச்சாணுசரத்து முச்சாணேய் ஒல்விரல் தலைவளையில் சுற்று மேற்ப்படி கோலால் நிறை...... பலமும். ஆச்சணன் எலவையார் ஒலோகமாதேவீஸ்வரம் முடை யார்க்கு குடுத்த வெள்ளிமண்டை+குடினை கோலால் நிறை அறுபத்துமூன்று பலம்.

குறிப்பு

இக்கல்வெட்டில்+என்பது ஒன்று என் பதைக் குறிக்கும் அடையாளமாகும். இக் கல்வெட்டு இதுவரை தென்இந்தியக் கல் வெட்டுத் தொகுதியில் வெளிவராததாகும். சரித்திர ஆராய்ச்சி செய்வார்க்குப் பெரிதும் பயன்படும் காரணம்பற்றி இக்கல்வெட்டை வெளியிடலானேன். இதில் —— இவ்வாறு கோடு இட்ட பகுதிகளில் உள்ள கல் உடைந்துபோய் விட்டதைக் குறிக்கும். மேற் குறித்த முதலாம் இராசராச தேவரது மகளார் மகாதேவடிகளார் திருவையாற்று ஒலோகமாதேவீச்சரத்துக்கு முதலாம் இராச ராச மன்னனது 25ஆம் ஆண்டில் நிவந்தம் அளித்துள்ளனர். அது பெரியதொரு கல் வெட்டு ஆகையால் அடுத்த இதழில் வெளி யிடுவேன்.

திருவேடகம்—ஏடகநாதசாமி கோயில் ஏடெதிர் சென்ற விழா.

திருஞானசம்பந்தருக்கும் சமணர்களுக்கும் மதுரையில் ஏற்பட்ட வாதத்தில் தேவார ஏடுகளை வைகை ஆற்றில்விட அவை நீரை எதிர்த்துச் சென்று திருவேடகத்தில் நின்றதாகவும் அமைச்சர் குலச்சிறையார் அங்குச்சென்று ஏடுகளை எடுத்ததாகவும் புராணம் கூறுகிறது. இப்புராண வரலாற்றை 4—8—62 காலை 7 மணிக்கு திருவேடகத்தில் முதன் முறையாக ஏடெதிர் சென்ற திருவிழாவாக வைகை ஆற்றின் கரையில் சிறப்பாக நடத்தப்பெற்றது.

அலங்கரிக்கப்பட்ட திருஞானசம்பந்தர், குலச்சிறையார் திருவுருவங்கள் ஊர்வல மாக ஆற்றங்கரைக்கு எடுத்துச்செல்லப்பட்டன. இந்நிகழ்ச்சியைப்பற்றி ஓதுவாரின் சொற் பொழிவுக்குப் பிறகு ஏடெதிர்சென்ற விழா சமய முறைப்படி நடத்தப்பெற்றது. வெள்ளி யேடொன்றை வைகையாற்று நீரில் போட்டு எதிர்செல்லுமாறு செய்யப்பட்டது. பெருந் திரளான மக்கள் கண்டுகளித்தார்கள். பிறகு இரண்டு மூர்த்திகளையும் கோயிலுக்கு எழுந்தருளச் செய்யப்பெற்றது. சென்னை இந்துசமய அறநிலைய (ஆட்சித்)துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ. பி.எல். அவர்கள் தலைமை வகித்து விழாவின் முக்கியத்துவத்தையும் கோயிலின் சரித்திர முக்கியத்துவத்தைப்பற்றியும் விளக்கி உரையாற் றினார்கள். திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல். அவர்கள் திருவேடக்கோயில் பற்றியும், திருஞானசம்பந்தர் பாசுரத்தைப்பற்றியும் விரிவுரை யாற்றினார்கள்.

கோயில் பரம்பரை அறங்காவலர் திரு. ஓ. ஆர். எம். எம். எஸ். எஸ். எஸ். சுப்பிரமணிய செட்டியார் அவர்கள் விழா ஏற்பாட்டினைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

திருஞானசம்பந்தர் அருளிய திருமுறை

[ஸ்ரீமத் சிவஞானத் தம்பிரான் சுவாமிகள், திருவெண்காடு,
(முதுபெரும்புலவர், முத்து. சு.)]

(முன் தொடர்ச்சி)

'உள்ளம் உருகில் உடன் ஆவார்' என்று திருவாய்மூர்ப் பதிகத்தில் அருளினார் திருஞானசம்பந்தர். இதன் விளக்கமே திருவுந்தியாருள்ளும் திருக்களிற்றுப்படியாருள்ளும் இருப்பது. இதனைத் திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகத்துள்ளும் விளக்கமுறக் காணலாம். "கயிலாய மலையுளானைக் கலந்துருகி நைவார்தம் நெஞ்சின் உள்ளே பானவனைப் பள்ளியின் முக்கூடலானைப் பயிலாதே பாழே நான் உழன்றவாறே" என்றது அப்பர் திருவாக்கு. கலந்து உருகிநைதலும், நைவார் நெஞ்சின் உள்ளே சிவாநந்தபானம் பண்ணும் முடிவில்லாப்பேறும் ஆகிய இரண்டனை எய்தும் உண்மையை அது தெளிவிக்கின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளோ, திருஞானசம்பந்த சுவாமிகளைப்போலவே அக்கருத்தை எதிர்மறைத் தொடரிலேயே அமைத்து வற்புறுத்தருளினார். அது திருக்கழுமலத் திருப்பதிகத்துள், "செழுமலர்க் கொன்றையும் கூவிள மலரும் விரவிய கடைமுடியடிகளை நினைந்திட்டு அழும் மலர்க்கண்ணிணை யடியவர்க்கு அல்லால் அறிவரிது அவன் திருவடியிணை யிரண்டும் கழுமல வளநகர்க் கண்டுகொண்டு ஊரன் சடையன்றன் காதலன் பாடிய பத்தும் தொழுமலர் எடுத்தகை அடியவர் தம்மைத் துன்பமும் இடும்பையும் சூழகிலாவே" என்பது. அதில் திருப்பதிகத்தைத் தொழும் இயல்பு அடியார்க்கு உண்டு என்பதும் கூறியிருத்தல் காண்க.

இங்கு, 'தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது' 'அறவாழி அந்தணன்தாள் சேர்ந்தார்க்கு அல்லால் பிறவாழி நீந்தல் அரிது' என்னும் திருக்குறள் அமைப்பும் திருஞானசம்பந்தரும் சுந்தரப்பெருமானும் அருளிய திருவாக்கின் அமைப்பும் வாக்கிய ரூபத்தில் ஒன்றுபடுதல் அறியத்தக்கது. இவ்வாறு கூறுதல் உண்மையை வற்புறுத்தும் பொருட்டாகும்.

உள்ளம் உருகுதல் இரண்டு கருத்துடையது. மனம் நெஞ்சம் என்பனவற்றைப் பொருள் வேறுபாடு இன்றி வழங்குதல் உண்டு. 'உள்ளம்' உயிர்க்கே உரிய பெயர். அதையும் மனத்திற்கு உரியதாக வழங்கினார். அதனால், மனவுருக்கம் நெஞ்சுருக்கம் எனப்படுவதும் உயிருருக்கம் எனப்படுவதும் ஒன்றாகக் கருதப்படும் மயக்கத்திற்கு இடம் உண்டாய்விட்டது. 'உயிருருக்கம்' வேறு; நெஞ்சுருக்கமும் மனத்துருக்கமும் வேறு; 'உள்ளம் உருகில் உடனாவர்' என்றதில் இரண்டனையும் கொள்ளலாம். தவறில்லை. திருக்களிற்றுப்படியாரில் 'உயிருருக்கம்' ஒன்றே கொள்ளற்பாலது. அதுவே திருவுந்தியார்க்கும் உரியது.

"உள்ள முதல்அனைத்தும் ஒன்ற ஒருவவரில்
உள்ளம் உருகவந் துன்னுடன் ஆம்—தெள்ளி
யுணருமவர் தாங்கள் உளராக என்றும்
புணருமவன் இல்லாப் பொருள்"

—திருக்களிறு 14.

இதில் உணர்த்தியது மனத்தின் உருக்கம் அன்று. உயிருருக்கமே. "அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்" என்று மணிவாசகப் பிரானார் அருளிய திருவாசகம் உணர்த்துகின்றது. இதில் ஆவி கசிந்துருகும் உருக்கமும் ஆக்கை கசிந்துருகும் உருக்கமும் ஆகிய இரண்டும் கூறப்பட்டன. நீர்ப்பானையும் கசிகின்றது. ஆக்கை கசிவதில் வியப்பு உண்டோ? 'காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார்'க்குக் கசிதல் விளங்கும். ஆவிக்கும் ஆக்கைக்கும் உருக்கம் பொது. ஆனந்தம் பொது ஆகாது. ஆக்கை ஆனந்தம் அடையும் அறிவு உடையது அன்று. ஆவியே ஆனந்தமடைதற்கு உரியது. திருக்களிற்றுப்படியார் உயிருருக்கத்தையே தெளிவித்தது. உள்ள முதல் அனைத்தும் ஒருசேர ஒருவுதல் (—நீங்குதல்) வந்தால், உள்ளம் (உயிர்) உருகும். உயிருருக்கம் என்பது ஜீவபோதம் ஒழிதல். அது ஒழிந்தால் எது நிற்கும்? சிவ

போதம் ஒன்றே நிற்கும். ஜீவபோதம் ஒழியும் அளவும் சிவபோதம் தோன்ருது. சிவபோதம் தோன்றும் ஆயின், ஜீவபோதம் தலைகாட்டாது. உயிர்க்கு உயிராகி என்றும் உயிரோடு புணருமவன் சிவன். அச்சிவன் உயிரில் எப்பொழுதும் உள்ளான். உள்ளவனை உயிர் எப்பொழுதும் கண்டுகொண்டிருக்கத் தடை என்ன? சிவனைத் தன்பால் கொண்டிருக்கும் பேறுபெற்றும் சதா சிவதரிசனம் ஏன் உயிர்க்குக் கிடைத்திலது? நான் என்னும் ஜீவபோதம் உள்ள ஒரே காரணத்தால்தான்.

"நான்என ஒன்று இல்என்று
தானே எனும் அவரைத்
தன்னடிவைத்து இல்என்று
தான் ஆம் இறை"

என்ற சிவஞானபோத வெண்பாவின் பொருளை உணர்வார்க்கு இத்திருக்களிற்றுப்படியார் வெண்பாப்பொருள் இனிது விளங்கும். அதன் விளக்கமே இது. என்றும் புணருமவன் சிவன். உயிருக்கு உயிர் அவன். அவனைத் தன் உயிர்க்கு உயிராகப் பெற்றிருந்தும் தன் அகம்பாவத்தால் அவனைக் காணுமல் நான்நான் என்று தன்னையே மதித்து அழிகிறது உயிர். அதனுல், ஜீவபோதமே முனைத்து வளர்கிறது. சிவபோதம் தோன்றுவது இல்லை. தாங்கள் உளராதல்-ஜீவபாவம்; ஜீவபோதம் உளதாயிருத்தல். தெள்ளியுணருமவர், தாம் தற்போதம் கெட்டால் அன்றிச் சிவதரிசனம் பெறமாட்டார். என்றும் புணருமவன் சிவபெருமான். உயிர்க்குயிராயும் அறிவிற்கறிவாயும் இருக்கும் பொருள் என்றும் நீங்காமற் புணரும் பொருள் அன்ருே? அப்பொருள் ஏன் என்றும் புலப்படவில்லை? சிவபோதம் ஒளி போல்வது. ஜீவபோதம் இருள் போன்றது. இருள் இருந்தால் ஒளி தோன்ருது. ஒளி தோன்றினுல் இருள் இராது. சிவபோததோற்றமும் ஜீவபோத நீக்கமும் முறையே ஒளிதோற்றமும் இருள் நீக்கமும் போல்வன. இருள் உள்ளவரை ஒளி இல்லாப் பொருளாகக் கருதப்படும். ஜீவபோதத்தால் சிவத்தை உணரும் அளவும் சிவம்தோன்ருது. தெள்ளியுணருமவர் ஆயினும், அவர் உணர்வான்; உணர்வு; உணரப்படும் பொருள் என்னும் திரிபுடிஞானவத்தையை உடையவரே. அது நீங்காமல் நீங்கினுல் அன்றிச் சிவதரிசனம் எய்தாது. இதை 'வினு வெண்பா' என்னும் அருள் நூல்,

"காண்பானும் காட்டுவதும் காண்பதுவும்
நீத்து உண்மை
காண்பார்கள் நன்முத்தி காணுர்கள்—
காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச்
சம்பந்தன்
வாட்டும்நெறி வாரா தவர்"

என்று உணர்த்திற்று. அத்திரிபுடி ஞானத்தைத் தவிர்த்தாலும் முத்தி சித்திக்காது. அது நீங்காதிருப்பினும் முத்தி சித்திக்காது. அத்திரிபுடிஞானத்தை வாட்டும் நெறி சைவ சித்தசந்தத்திற்கே சொந்தம். அதை அந்நெறி நின்ருரே பெறவுரியர். அதனுல்தான் உமாபதி தேவநாயனுர், "தண்கடந்தைச் சம்பந்தன் (மறைஞான சம்பந்ததேவ நாயனுர் ஆகிய சந்தானகுரு) நெறியில் வாராதவர் எல்லாரும், திரிபுடிஞானத்தை வாட்டும்நெறி அறியாமல், நீத்துக் காண்பாராய் முத்திகாணுதொழிவர்" என்று அறுதியிட்டுக் கூறியருளினுர். அவ்வுண்மையின்படி, என்றும் புணருமவனுகிய சிவன், அவனருளே கண்ணுகக் காணும் அறிவைப்பெருது, ஜீவபோதத்தால் தெள்ளியுணருமவராகித், தாங்கள் உளராகின்றனர். அவர் உளராகவே அவருள்ளே என்றும் புணருமவனுகிய சிவன் இல்லாப் பொருளாக மறையநின்றுளன். அவன் மாமணிச்சோதியான் ஆக இருந்தும், தாம் உளராகவே அவன் இலனுகின்ருன்.

இதுகாறும் விளக்கியது, ஜீவபோதம் அற்ருல் அன்றி, சிவபோதம் தோற்ருது. அது தோற்றினுல் அன்றி முத்தி சித்திக்காது என்பதே. இத்தகைய பேருண்மையை விளக்குவதே திருஞானசம்பந்தர் திருவாக்கில் எழுந்ததாகிய,

"பண்ணிற் பொலிந்த வீணையர் பதினெண்
கணமும் உணரா நஞ்சு
உண்ணப் பொலிந்த மிடற்றினுர்
உள்ளம் உருகில் உடனுவார்"

என்பது. இத்திருவருட் செந்தமிழ்த் தொடரை முன் அமைத்து, நம் உய்யவந்த தேவநாயனுர், தாம் அருளிய திருவுந்தியாரில்,

"உள்ளம் உருகில் உடன்ஆவர் அல்லது
தெள்ள அரியர்என்று உந்தீபற
சிற்பரச் செல்வர்என்று உந்தீபற"

என்று விரித்துப் பாடியருளினர் எனின், திருமுறையின் பொருட்சிறப்பிற்கும் அதனல் நாம் பெறும் அருட்பெருக்கிற்கும் ஓர் எல்லை உண்டோ? அவ்வாறே அத்திருமுறையைக் குறித்து ஏதோ எழுதத்துணிந்த அடியேனது மடமைக்கும் ஓர் எல்லை உண்டோ? இதுவும் அகம்பாவத்தின் விளைவே.

இதுவரையில் அறிந்தவற்றின் சாரம் ஜீவபோதம் ஒழிந்து சிவபோதம் விளங்கி நின்று முத்தி சித்திக்கப் பெறுதல்வேண்டும் என்பதே ஆகும். ஆதலின் அதைப்பெற உயிர்கள் என்ன செய்தற்கு உரியன? உயிர்கள் சிவபூஜை ஒன்றையே செய்தற்குரியன. உயிர்கள், அறிவால் சிறியனவும் பெரியனவுமாகி வேறுபட்ட அளவுடையன. அவை எல்லாம் சிவபூஜை செய்யும் உரிமையிற் பொதுவாவனவே ஆகும். மனித்தப் பிறவி மட்டும் உரியது என்பது அடாது. பிறவிப் பெருங்கடலின் நீங்கிப் பேரின்பக்கரை ஏறல்வேண்டும் என்னும் ஞானம் எப்பிறவியில் வரினும் அப்பிறவி எல்லாம் அச்சிவபூஜை செய்வதற்கு உரிமையுடையனவே யாகும். ஆதலால்தான், சிவபூஜைக்குச் சாதியோ ஆச்சிரமமோ மற்று யாதுமோ பொருளாவதில்லை. தேவர், முனிவர், மானிடர், அந்தணன், அரசன், வணிகன், வேளாளன், பிரமசாரி, கிருகத்தன், வானப்பிரத்தன், சந்நியாசி எல்லாரும் சிவபூஜை செய்தற்கு உரியராவர். அவ்வண்ணமே, பசு, புலி, யானை, நரி, குரங்கு, கருடன், வலியன், நாரை, ஆமை, பாம்பு, சிலந்தி, நண்டு, எறும்பு முதலியனவும் சிவபூஜை செய்வதற்கு உரியவாயின என்பது பல சரிதங்களால் விளங்கிய பழைய வாய்மையாகும்.

கண்ணப்ப நாயனர் எய்திய முத்திப் பேற்றுக்கு அவர் தோன்றிய வேடசாதி குறுக்கிட்டதோ? சிலந்தி கோச்செங்கண்ணராகக்கூடாது என்று மறியல் செய்தார் எவரேனும் உளரோ? மாவலியாகாதவாறு பூவெலியை யாவர் தடுத்தார்? முசுக்கலையை முசுகுந்த சக்கிரவர்த்தியாகாதவாறு நசுக்க முயன்றார் எவர்? வயதும் சிவபூஜை செய்வதற்குத் தடையாகாது. மார்க்கண்டேயர், துருவன், கிரகபதி, வியாக்கிர பாதர்க்குத் தோன்றிய உபமந்யுமுனிவர், சுகமுனிவர், புலோமருடைய புதல்வி, இத்திருமுறையாசிரியர் திருஞானசம்பந்தர், மெய்கண்டதேவ நாயனர் முதலியோர்க்குப் பாலப்பருவம் சிவபூஜை செய்வதற்குத் தடையாயிற்ருே? இளமையிலேயே சிவபூஜை செய்யப் பட்டினத்தார்க்குத் துணிவுதந்தருளிய சைவாசாரியர்கள் இளைஞர்களேயாவார்கள்.

சிவபூஜை செய்யாமல், சிவபெருமானைக் காண்பது அரிது; அரிது; அரிது. எக்காலும் அரிது. முக்காலும் சத்தியம். சிவபூஜையை அகத்தோ புறத்தோ, கிரியையிலோ யோகத்திலோ ஞானத்திலோ, சாதனம் கொண்டோ கொள்ளாதோ, ஒருபோதோ இருபோதோ முப்போதோ நாற்போதோ சதாகாலமோ எத்திறத்திலேனும் செய்து பேரின்ப வீடு பெறலாம். அதில் சிறிதும் ஐயம் இல்லை. சிவபூஜை செய்யாதார் வீடுபேறு அடையார் என்பதிலும் ஐயம் சிறிதும் இல்லை.

"எய்தலாவது என்றுநின்னை? எம்பிரான்!
இவ்வஞ்சனேற்கு
உய்தலாவது உன்கண் அன்றி மற்றுஓர்
உண்மை இன்மையின்
பைதலாவது என்று பாதுகாத்து
இரங்கு, பாவியேற்கு
ஈதலாது நின்கண் ஒன்றும்வண்ணம்
இல்லை ஈசனே"

என்பதே அன்றி, 'போகம்வேண்டி வேண்டிலேன்' 'ஐய நின்னதல்லதில்லை' 'வேண்டும் நின்கழற்கண் அன்பு' என்னும் தொடக்கம் உடைய மணிவாசகங்களும் அவ்வையத்தைத் தவிர்த்து இவ்வையத்தைக் காக்கும் அருண்மொழிகள் ஆகும்.

உலகில், பொருள் பெற்றோர் பலர், சிவபூஜை செய்யாது இருள்வழியில் அலைந்து, அருள்பெறல் இன்றி, வீணே இறந்தொழிகின்றனர். திருவள்ளுவர்,

"அற்கா இயல்பிற்றுச் செல்வம், அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்"

என்று கழறினர். அக்கழற்றுரையினும் கழற்றிக் கழன்று, உலகில் உண்டுண்டுறங்கியுறங்கித் திரியும் மூடர்களை நோக்கி,

"தன்னது சாயை தனக்கு உதவா துகண்டு
என்னது மாடு (செல்வம்) என்று இருப்பர்கள் [ஏழைகள்
உன்னுயிர் போம் உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காண்ஒளி கண்டு கொளீரே"
—என்றார் பெரியார்.

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை (சிறுமை)யே உடைய இவ்வுலகில்,

"பண்டம் பெய்க்கூரை பழகி விழுதலால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்;
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே"

"ஊரெலாம் கூடிஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம்என்று பேர்இட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் [சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே"

அதனால், நாம், நாச்செற்று விக்குள் மேல் வாராமுன் நல்வினை ('உய்வினை' 'கைவினை' என்று திருஞானசம்பந்தர் அருளிய சிவ பூஜை)யைச் செய்தல் வேண்டும் என்பது நன்கு விளங்கும் அன்றோ?

'புண்ணியம்' என்பது சிவபூஜைக்குரிய தனிச் சிறப்புப்பெயர். "புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே, நண்ணிய ஞானத்தினால் இரண்டினையும் (திருவினையையும்) அறுத்து, ஞாலமொடு கீழ்மேலும் நண்ணுன் ஆகி, எண்ணும் இகபோகத்தே முக்திபெறும் இவன்தான்" என்னும் சித்தியில் புத்தியில்லாதவர்க்கு அப் பெயர் எப்படித் தெரியும்? அதனால், திருமந்திரத்திலே உள்ள 'புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு, நீர்உண்டு; அண்ணல் அது கண்டு அருள்புரியா நிற்கும், "எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை நண்ணறியாமல் நழுவுகின்றாரே" என்று திருமூலதேவ நாயனார் திருவாய்மலர்ந்து (நெஞ்சுருகி யழுது வருந்திச்) சொல்லியது சிவபூஜையைக் குறித்து என அறியமாட்டாராயினர். இம் மந்திரம் எத்தனையோ காலமெல்லாம் ஊமைக்கு இறைக்கும் ஏழைகளின் செவிப் படுமோ?

இதுவரை எழுதியவற்றைப் படிக்க நேரம் இல்லாதவர்கள் இதைமட்டும் படிப்பதால், முன் எழுதிய அத்தனையும் அறிந்தவராவார்கள்.

சிவபிரானை மனத்தால் எண்ணும் பழக்கமும் வாயாற் பொருள்சேர் புகழ்களைச் சொல்லும் பயிற்சியும் சிறந்தனவே.சிறந்தும், அம்மனப்பழக்கமும் நாப்பயிற்சியும் உயிர்க்கு நிலைபெறுதல் இல்லை. ஏன் எனில், நிலைபெறற்கு உரிய வழி நேரே மனத்திற்குத் தருவது அன்று. உடல் வழியாலும் நாவழியாலும் மனத்திற்குத்தரும் வழியே நிலை பெறுவது. இளமையில் எழுத்தைக் கையால் எழுதிப் பழகும் பயிற்சி மனத்தில் அவ் வெழுத்துக்களை எழுமையும் மறவாதவாறு நிலை பெறுத்துகின்றது. அதுதான் இதற்கும் அடிப்படை. காயத்தாலும் வாக்காலும் மனத்திற்குத்தரும் பயிற்சி நிலையானது. வாக்கால்மட்டும் மனத்திற்கு நிலையான பயிற்சி தர முடியாது. எத்தனையோ மக்கள் தோத்திரம் நிறையப்பாடுகின்றார்கள். அவர்கள் உள்ளம், அத்தோத்திரப் பொருளில், கல்வி நாடி கூட நிலைத்து நிற்பதில்லை. அப்பொருளின் நிலைபேற்றுக் காயத்தின் வழியாக மனத்திற்குத் தரப்படுவதே அழியாத சாதனம். வாயினுற் கூறி மனத்தினுல் நினைக்க வேண்டுவது எத்துணை அவசியமோ அத்துணை அவசியம் மனத்திற்கொண்ட பொருள் அம் மனத்தில் நிலையாக இருக்கக் காயத்தால் நிகழ்த்தும் செயலுக்கு உண்டு.

ஒவ்வொருவரும் தம் உயிர்க்கு உயிராக இருக்கும் கடவுளைக் குறித்துச் சதா தியாநம் புரியலாம். தோத்திரம் செய்யலாம். அத்தியாநமும் தோத்திரமும் காயத்தாற் செய்யும் பூஜையால்தான் உண்மைநிலையைத் தோற்றும். அவ்வுண்மையில் நிலைக்கப்பெறுமல் வெறும் பேச்சும் எண்ணமும் இருப்பதாற் பயன் இல்லை. எண்ணம் பேச்சு எல்லாம் நிலை பெறுதன. அவற்றை நிலைபெறுத்தலும் நம்மால் ஆகாது. காயத்தால் கொடுக்கும் பயிற்சியே மனத்தில் நிலைபெறச் செய்யும். மனத்தில் நிலைக்காதது உயிர்க்குப் பயன்தராது. சிவஞானம் நம்மனத்தில் நிலைத்திருக்க நாம் செய்யத்தக்கது சிவபூஜை ஒன்றே. அதைக் குறித்து வாய்ப்பேச்சும் மனநினைப்பும்,காயத்தாற் செய்யும் பூஜையைப்போலப் பயன் படா. நினைப்பும் பேச்சுமாகத்தான் முடியும். செயலாதல் இல்லை. செயல் (கர்மம்)தான் பயனை நன்கு தரும். கோடி ரூபாய் தானம் புரியலாம் என்று எண்ணலும் சொல்லலும் என்ன பயன்தரும்? தானம் புரியும் செயல் தானே பயன்தரும்?

"நினைவதும் வாய்மை மொழிவதும் அல்லால்
கனைகழல் ஈசனைக் காணல் அரிதாம்
கனைகழல் ஈசனைக் காணுற வல்லார்
புனைமலர் நீர்கொண்டு போற்ற வல்லாரே"

என்னும் திருமந்திரம் சிவபூஜையைச் செய்தால் அன்றிச் சிவதரிசனம் கிடைக்காது என்னும் உண்மையைத் தெளிவாக்கியது. அவ்வுண்மையை நம்பிய உத்தமர்கள், சிவபூஜையைச் செய்து பேரின்பம் உற்றூர்கள்.

"மஞ்சனமாலை நிலவிய வானவர் நெஞ்சினுள் ஈசன் நிலைபெறு காரணம்; அஞ்சு அமுதாம் உபசாரம் எட்டெட்டோடும் அஞ்சலியோடும் கலந்து அர்ச்சித்தார்களே" என்பது திருமந்திரம். சிவபூஜை செய்யாத உடம்பு, நிலப்பொறை என்பது முன்னோர் உட்கோள்.

"வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்"

'சிவபூஜை' ஒன்றே ஆயினும், இடத்தால், முத்திறப்படும்; 'குருலிங்க ஜங்கமம்' என்று. 1. குருபூஜை, 2. சிவலிங்கபூஜை, 3. ஜங்கம (அடியார்) பூஜை மூன்றும் சிவபூஜையே. இம்மூன்றும் திருமுறைகளில் வற்புறுத்தப்பெற்ற வழிபாடுகளாகும்.

சிவபூஜையைச் சுத்தியொடு செய்யக்கடவர். சுத்திகள் 1 பூதசுத்தி, 2 திரவியசுத்தி, 3 இலிங்கசுத்தி, 4 மந்திரசுத்தி, (ஆத்மசுத்தி) 5 ஸ்தாநசுத்தி என்பன. இவற்றுள் ஆன்மசுத்தி பூதசுத்தியில் அடங்கும். அதனால் ஐந்துசுத்தி என்பர். சுத்தியொடும் தருமமும் சிவபூஜை செய்வார்க்கு இன்றியமையாதது. தருமம் ஐந்து. அவை 1. திருநீறு அணிதல் 2. திருவடையாள (கண்மணி) மாலை 3. சீருத்திர தியாத பாராயணம் 4. சிவதரிசநம் 5. சிவ நைவேதநப்ரசாத போஜநம்.

"நறைமலிதரும் அளறொடுமுகை
நகுமலர்புகை மிகுவளர்ஒளி
நிறைபுனல்கொடு தனைநினைவொடு
நியதமும்வழி படும்அடியவர்
குறைவிலபதம் அணைதர அருள்
குணம்உடை இறைஉறை வனபதி
சிறைபுனல் அமர் சிவபுரம் அது
நினைபவர் செயமகள் தலைவரே"

என்னும் திருஞானசம்பந்தர் திருவாக்கொடு இக்கட்டுரையை முடிக்கத் திருவருள் துணை புரிந்தது. திருமுறையின் பயன் சிவபூஜை புரிவதும் பேரின்பம் எய்வதும் ஆகும்.

திருஞானசம்பந்தர் அருளிய அற்புதப் பதிகங்களைக் குறித்து அடுத்த கட்டுரையில் அறியலாம்.

(தொடரும்)

திருச்செந்தூர். சுப்பிரமணியசுவாமி கோயிலில் ஆவணித் திருவிழா 20—8—62 முதல் 31—8—62 வரை நடைபெற்றது.

தாடிக்கொம்பு: சௌந்திரராசப்பெருமாள் கோயிலில் ஆடிரத பிரம்மோற்சவம் 5—8—62 முதல் 16—8—62 வரை நடைபெற்றது.

வள்ளிமலை: இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் 20—8—62-ல் நடைபெற்றது. தமிழக அறநிலைய அமைச்சர், அறநிலைய ஆணையர் ஆகியோர் கலந்துகொண்டார்கள். சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

பெரும்பேறுகண்டிகை: சுப்பிரமணிய சுவாமிக்கும் இதர பரிவாரங்களுக்கும் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 6—9—62-ல் நடைபெறும்.

சென்னை: மயிலாப்பூர் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனமடத்தில் திரு. ப. இராமநாதபிள்ளை அவர்களால் 7, 8, 9—8—62 தேதிகளில் 'இருபா இருபஃது' வகுப்பு நடத்தப்பெற்றது.

சென்னை: ஏகாம்பரநாதர் கோயிலில் திருவிளையாடற்புராண படனப் பூர்த்தி விழா அறநிலையத்துறை ஆணையர் திரு. எம். எஸ் சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில் 13—8—62-ல் நடைபெற்றது.

சென்னை: இராயப்பேட்டை ஒயிட்ஸ்ரோடு இரத்தின விநாயகர்—துர்க்கை அம்மன் கோயிலில் உற்சவம் 12—8—62-ல் நடைபெற்றது.

சிதம்பரம் தில்லையம்மன் கோயில் கோபுரம்

தில்லையம்மன் கோயில்

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணி
[யெல்லாம்
ஊன்புக்க வேல்காளிக்(கு) ஊட்டங்காண்
[சாழலோ.

—மாணிக்கவாசகர்.

இறைவன் எல்லையில்லாத திருக்கூத்து இயற்றுமிடம் தில்லையம்பதி. அம்பெருமானுடைய ஆட்டத்தாலேயே அண்டசராசரங்களும் இயங்குகின்றன என்பது ஆன்றோர் கண்ட முடிபு. சிதம்பரத்தில் தில்லை மரங்கள் நிறைந்திருந்ததால் தில்லைவனம் என்ற பெயரும் உண்டு. இந்நகரின் வட எல்லையிலுள்ளது தில்லையம்மன் கோயில். இக்கோயில் மேற்கு நோக்கிய சந்நிதியையுடையது. கோபுரத்துடன் விளங்கும் இக்கோயிலின் முன் திருக்குளம் ஒன்றிருக்கிறது. கோபுர வாயிலைக்கடந்து உட்சென்றதும் தென்புறம் விநாயகர் சந்நிதியும், வடபுறம் முருகன் சந்நிதியும் கிழக்கு நோக்கியுள்ளன. இரண்டாவது வாயிலைக்கடந்து உட்சென்றதும் எதிரே தில்லையம்மன் சந்நிதி இருக்கிறது. அம்பிகை நான்கு முகங்கள், நான்கு கைகள், தொங்கிய ஒருதிருவடியுடன் ஞானாசனத்தில் அமர்ந்திருக்கிறாள். இரண்டாவது வாயிலின் உள்ளே

தென்புறம் கூத்தாடும் விநாயகர் காட்சியளிக்கிறார். வடபுறத்தில், தேரை ஓடச்செய்வதற்காகத் தன் கழுத்தை வாளால் வெட்டி நரபலிகொடுத்த வீரப்பெருமாள், அவனுடைய தோழர்கள் இவர்களுடைய உருவங்களும் உள்ளன. வீரப்பெருமாள் வாளால்கழுத்தைஅறுத்துக்கொள்வது போன்ற படத்தைக் காண்க. அதேபக்கத்தில் தில்லை மாகாளி வீராசனத்தில் கிழக்கு நோக்கி யெழுந்தருளியுள்ளாள். குங்குமம் நிறைந்த முகத்துடனும் திரிசூலம் தாங்கிய கையுடனும் காட்சியளிக்கிறாள். அந்த சந்நிதியில் வடபக்கச் சுவரில் சேர, சோழ, பாண்டியரின் உருவங்கள் இருக்கின்றன. வடக்குப் பிரகாரத்தில் தட்சிணாமூர்த்தி, பைரவர் சந்நிதிகள் உள்ளன. தெற்குப் பிரகாரத்திலுள்ள வீணாவாணியின் உருவம் மிகவும் அழகானது. கோயிலுக்கு வெளியே தென்புறம் வீரனார் உருவம் இருக்கிறது.

'சக்தி பெரிதா சிவம் பெரிதா' என்று பேசுவதை நாம் கேட்கிறோம். "கறைக் கண்டனுக்கு மூத்தவளே" என்று சக்தியை வியந்து பாராட்டுகிறார் அபிராமிபட்டர் தமது அபிராமி அந்தாதியில். இவ்வுலகம் சிவம் சக்தி மயம் என்பது சாத்திர சம்மதம். கயிலையங்கிரியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுடன் உரையாடிக் கொண்டிருந்த பார்வதிதேவியார் தான் பூலோகத்தில் சென்று பரத நாட்டியத்தில் நிகரில்லாமல் விளங்கவேண்டும் என்றும், அதற்குத் திருவருள் பாலிக்கவேண்டும் என்றும் இறைவனை இறைஞ்சினார். வேண்டுவார் வேண்டுவதை ஈயும் ஆண்டவனும் அருள்புரிந்தார். உமாதேவியும் நடனகாளி என்ற திருநாமத்தோடு உலகில் பல இடங்களிலும் நடனம் செய்து வெற்றி பெற்று, தில்லை வனமடைந்து தில்லைமாகாளி என்ற திருப்பெயருடன் வீற்றிருந்தாள். சிதம்பரத்தில் பதஞ்சலி வியாக்கிரபாதர் என்ற இரு முனிவரும் ஆண்டவனின் ஆனந்த தாண்டவத்தைத் தெரிசிக்க விரும்பித் தவமிருந்தனர். அவர்களுடைய அவாவை நிறைவேற்ற சிவபெருமான் திருவுளங்கொண்டு அயன், மால், தேவர்கள் முதலியவர்களுடன் தில்லையம்பதியை வந்தடைந்தார். தில்லைக் காளி எம்பெருமானை நாட்டியப்போட்டிக் கழைத்தாள். நடனம் வெற்றி தோல்வி காண முடியாதபடி நடந்தது. ஆட்ட வேகத்தில் சிவபெருமான் திருச்செவியிலிருந்த குண்டலம் கழன்று கீழே விழுந்தது. தாண்டவமாடியபடியே திருவடியினால் அக்குழையை யெடுத்து உயரத் தூக்கிக் காதில் அணிந்தார். காளி பெண்ணாதலால் அவ்வாறு செய்ய முடியாமல் நாணித் தலைகுனிந்தாள். இந்த நிகழ்ச்சியை,

சிதம்பரம் தில்லையம்மன் கோயில் வீரப்பெருமாள்.

பூவில் அயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி அளந்தோனும் தாமிருக்கப்—பாவில்
இழைஓட்டி ஆடைநெயும் ஏழை அறிவேனோ
குழைஓட்டும் பிஞ்ஞகன் தன்கூத்து

என்று திருவள்ளுவர் பாடியதாக ஒரு பாடல் நம் நாட்டில் வழங்கி வருகிறது.

தோல்வியடைந்த காளி தில்லையின் எல்லைத் தெய்வமாகப்போய்க் கிழக்குமுகமாக இருக்கும்படி சிவபெருமான் ஆணையிட்டார். அவ்வாறே சென்ற காளி, தான் செய்த தவறை உணர்ந்து தன்குற்றத்தைப் பொறுத் தருளுமாறு பரம்பொருளை வேண்டினாள். அவரும் மனமுவந்து தன் கைச்சூலத்தால் குத்தியெழுப்பிய தீர்த்தத்தில் மூழ்கியெழுந் தால் காளியின் அபசாரமும் கோரவடிவமும் நீங்கும் என்று திருவாய்மலர்ந்தார். அவ்வாறே சூலத்தால் ஏற்பட்ட தீர்த்தத்தில் மூழ்கி சாந்தசொரூபத்துடன் பிரமசாமுண்டி என்றும், தில்லையம்மன் என்றும் திருப்பெயர் கொண்டு மேற்குநோக்கி யெழுந்தருளியிருக் கிறாள். காளிதேவியின் கடுஞ்சாபத்தைப் போக்கிய தீர்த்தமாகையால் அதற்குச் சிவப் பிரியை என்றும், பிரமசாமுண்டி தீர்த்தம் என் றும் பெயர்கள் வழங்குகின்றன. அதுதான் கோயிலுக்கு எதிரிலுள்ள திருக்குளம். பேய், பிசாசு, பில்லி சூனியம், பைத்தியம் முதலிய வற்றால் பீடிக்கப்பட்டோர் இத்தீர்த்தத்தில் நீராடி, தில்லையம்மனை வழிபட்டால் அவை நீங்கப்பெறுவர். தை அமாவாசையன்று தில்லைநாதனே இங்கு எழுந்தருளுகிறார்.

கோயிலில் நான்குகால பூஜை நிகழ் கிறது. வைகாசி அமாவாசையைத் தீர்த்த வாரியாகக்கொண்டு பத்துநாள் உற்சவம் தில்லை நடராசன் திருவிழாவிற்கு முன்னரே நடைபெறுகிறது தில்லைவாழ் அந்தணரே கோயிலில் பூசனை புரிகின்றனர். சக்திபீடங்க ளில்ஒன்றாகிய இக்கோயில் மிகவும் பழமையா னது. பலகல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. திருவாசகமணி திரு. K. M. பாலசுப்பிரமணி யம் அவர்கள் தில்லையம்மன் திருப்பதிகம் என்ற பதினொரு பாடல்களுடைய நூல் ஒன்றை இயற்றியிருக்கின்றார்கள். அவற்றிலொரு பாடல் கீழ் வருவது.—

சீராரும் பச்சைக் கலாப மயிலே சிவச்
செம்மலார் மகிழு மயிலே
தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒரு
தேமரு பசுங் கிள்ளையே [செல்வி
காராரும் உருநீல வண்ணக் களஞ்சியக்
கண்ணற்கு மினிய தங்காய்!
கன்னலே கவின்மேவு மின்னலே என்னுமிடை
காட்டிமுன் நாட்டி யத்தைப்
பாராரு மக்களொடு வானுடர் புக்குநனி
பார்த்திட நடித்த பாவாய்!
பண்ணுலவு பைந்தமிழ் உண்ணிலவு மென்
பாவையர்கள் வாழும் பதி [மொழிப்
தேராரு வீதியொடு தேனுறு சோலைசூழ்
தெய்வச் சிதம்பர மெனும்
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளி உமையே!

மேலூர் கலியாணசுந்தரேசுவரர் காமாட்சியம்மன் கோயில் குடமுழுக்குப் பெருவிழா.

மேலூர் கலியாணசுந்தரேசுவரர் காமட்சியம்மன் கோயிலில் 9—7—62 காலை 9 மணிக்குக் குடமுழுக்குப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. சென்னை இந்துசமய அறநிலைய (ஆட்சி)த்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ. பி.எல். அவர்களும், மதுரை துணை ஆணையர், உதவி ஆணையர், பெருந்திரளான மக்களும் விழாவில் கலந்துகொண்டனர்.

கோயில் நிதியுடன் ஸ்ரீகள்ளழகர் தேவஸ்தானம் (ரூ. 5000); மேலூர் திருவாளர் ஜனாப் முகம்மது அனிபா இராவுத்தர் அவர்களின் நன்கொடையினாலும் (ரூ. 4601/-) மேலூர் திருமதி தனலட்சுமி அம்மாள் அவர்களின் நன்கொடையாலும் (ரூ. 300/-) பழனி ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி கோயிலின் கடன் உதவியாலும் (ரூ. 10,000/-) புதிய இராஜ கோபுரம், கலியாண மண்டபம், இதர திருப்பணி வேலைகளும் நடைபெற்றன. திருப்பணிக் குச்செலவான மொத்தத்தொகை ரூ. 37,699/-.

குடமுழுக்குப் பெருவிழாவுக்குப்பின் புதிய கலியாண மண்டபத்தை ஆணையர் அவர்கள் திறந்துவைத்தார்கள். வில்வச் செடியையும் நட்டார்கள்.

சிவஞானபோதம்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A.L.T., காஞ்சிபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

நான்காம் சூத்திரம்

அந்தக் கரண மவற்றின்ஒன் றன்(று) அவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணராது
அமைச்சர சேய்ப்ப நின்(று) அஞ்சவத்தைத்தே

என்பது சூத்திரம்.

இஃது ஆன்மாவின் பொது இலக்கணத்தையும், ஆணவத்தின் இருவகை இலக்கணங்களையும் உணர்த்துகின்றது.

இதன் பொழிப்பு: ஆன்மாவாவது மனம் புத்தி ஆங்காரம் சித்தம் எனப்படும் அந்தக் கரணங்களுள் (உட்கருவிகளுள்) ஒன்று அன்று; ஆயினும் அஃது இயற்கை மலத்தால் கட்டுண்டு உணரமாட்டாமையால் அவற்றோடு சந்தித்து நிற்கும். அங்ஙனம் நிற்றல், தானே உணரமாட்டாத அரசன் அரசியல் பொருளியல் இனவியல் என்பவற்றை உணர்தற்கு அவ்வத்துறையில் வல்ல அமைச்சரோடு கூடித் தன் தொழில் நடாத்தும் நிலையை ஒக்கும். இவ்வாறு நிற்றலால், மேலைச் சூத்திரத்தின் ஓதியபடி ஐம்புலனறிந்தும், ஒடுக்கம் அறிந்தும், உண்டிவினையின்றிக் கிடந்தும், உணர்த்த உணர்ந்தும் நிற்பதாய, நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என ஐவகைப்படும் அவத்தை வேறுபாடு உடையதாகிவரும்.

இதனால், ஆன்மாக் குறையுணர்வு உடையதாய் ஐந்தவத்தைப்படுவது என்பது விளங்கும். இதுவே ஆன்மாவிற்குப் பொதுவிலக்கணம்; பொது எனினும் தடத்தம் எனினும் ஒக்கும்.

ஆன்மா என்னும் சொற்குப் பொருள் வியாபகம் எனவும் நித்தசித்து எனவும் கூறுவர்.

சகசம்—இயற்கை, உடன் தோன்றியது.

ஆன்மா அந்தக்கரண மவற்றின் ஒன்று அன்று என்பது ஓரதிகரணம், (ஆயினும்) அவை சந்தித்தது சகச மலத்துணராது என்பது ஓர் அதிகரணம், (அஃது) அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சவத்தைத்து என்பது ஓர் அதிகரணம்: ஆக மூக்கூறுபட வைத்து ஆராயப்படும் இச்சூத்திரம்.

முதலதிகரணம்

சூத்திரப்பகுதி: (ஆன்மா) அந்தக்கரண மவற்றின் ஒன்றன்று.

வார்த்திகம்: ஈண்டு இவ்வான்மாவாவது அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தி அகங்கார சித்தங்களில் ஒன்றன்று என்றது, அவை தாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

[கண் எதிர்ப்பட்டதொரு பொருளைக் காணும்; யான் காண்கின்றேன் எனத் தன்னை நோக்கி உணராது. அதுபோல,மனம் பொறிவாயிலாகத் தட்டுப்படும் ஒருபொருளைப்பற்றி இன்னதாகலாம் என நினைந்து இதுவோ அதுவோ என ஐயுறும்; ஆனால், பற்றி நினைந்து ஐயுறுகின்றேன் எனத் தன்னைநோக்கி உணராது: அங்ஙனம் தன்னை நோக்கி உணரும் உணர்வுடையதே ஆன்மா ஆகும். அந்தக்கரணங்கள் புறத்துவிடயங்களை நோக்கி அறிவனவாய் நின்றே (பிரகாசமாய் நின்றே) தம்மை நோக்கி அறிவின்றி (அப்பிரகாசமாய்) நிற்றலால், தன்னை நோக்கியும் சித்தாய் நிற்கும் ஆன்மா அவற்றின் வேறு என்பது உணரப்படும்.]

இங்குப் பிறர் கூறும் பக்கம்

புறத்தே உள்ள பொருள்களை ஐம்பொறி வாயிலாக உணர்வதே ஆன்மா எனக் கொள்ளத்தக்கது. அவற்றை உணரும்போது, பின்வருமாறு உணர்வு வகைகள் நிகழ்கின்றன:—

பொறிகளைத்தாக்கும் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பவற்றுள் யாதேனும் ஒன்றனைப் பற்றுதலும், பின் அதனை முன் நிகழ்ந்த காட்சிகளின் வாதனைபற்றி இன்

னது எனத்துணிதலும், துணிய ஒருப்படுத லும், துணிந்ததனை முன்னைய உணர்வுக ளோடு இணைத்துச் சிந்தித்தலும் என நால் வகைப்பட அகத்தே உணர்வு நிகழக் காண் கின்றோம். இவ்வுணர்வுகளை உடையதே ஆன்மா என்றல் அமையும். இவற்றை ஆன் மாவின் செயல் எனக்கொள்ளாமல் மனத் தின் செயல், புத்தியின் செயல், ஆங்காரத் தின் செயல், சித்தத்தின் செயல் எனக் கொண்டு ஆன்மா அவற்றின் வேறு என ஏன் கொள்ளுதல் வேண்டும்? மேலும் "சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்னும் திருவாசகத்தில் சித்தம் என்றது ஆன்மாவையே குறித்தலின், அது போல ஏனையவும் ஆன்மாவிற்குப் பரியாயப் பெயர்கள் எனக்கொண்டால் என்ன தவறு?

சித்தாந்தத் துணிபு

ஒருபொருளை அறியலுறுவார்க்கு மெய் வாய்கண் மூக்குச் செவி என்பவை புறத்தே தோன்றி அதனை விடயிக்கின்றன. அவற் றைப்போல, அவற்றால் தரப்படும் பதிவுகளை உடம்பின் அகத்தே நின்று விடயிப்பன அகக்கருவிகள் எனப்பட்டன. யாதானும் ஒருபொறி வாயிலாகவரும் பொறியுணர்வை (Sensation)ப்பற்றி அதனை ஒரு பொரு ளின்பால் சார்த்தி, இஃது இன்னதாகலாம், இன்னதாகலாம் என நினைந்து ஐயநிலையில் நிற்பதே மனம் எனப்படும்; புத்தி அதனை இன்னது என நிச்சயிக்கும். இந்த நிச்சய வுணர்வைச் சவிகற்பக்காட்சி (Determinate perception) என்பர். இக்காட்சிக்கு வேண்டிய முயற்சி வடிவில் உடம்பில் வாயுக் களையும் தொழிற் பொறிகளையும் ஊக்குவிப் பதே அகங்காரம் எனப்படும். அங்ஙனம் வந்த நிச்சயவுணர்வை முன்னரே பெற் றுள்ள உணர்வுகளோடு இணைத்து அதனைப் பொருட்பெற்றி வடிவில் (In the form of concepts) மறவாது உட்கோடல் சித்தத் தின் தொழில்.

இக்கருத்தைப் பின்வரும் வெண்பாவால் சிந்தித்துணரலாம்:—

"அந்தக் கரணம் அடைவே உரைப்பக்கேள்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம்-சிந்தையிவை
பற்றியது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்தங்கு
உற்றதுசிந் திக்கும் உணர்"

—உண்மை விளக்கம் 16

ஆன்மாவுக்கும் இவற்றுக்கும் உள்ள பிரித்துக் காணமுடியாத தொடர்பை ஓர் உதாரணத்தால் தெளியலாம். காலம் என் னும் அடிப்படைப் பொருளைப் பகல், இரவு, மாதம், இருது எனப் பலவகையாகப் பகுத்து உணர்கிறோம். இப்பாகுபாடு காலத்தின்கண் இல்லை; ஆயினும் சூரியனது இயக்கம், சந் திரனது இயக்கம் முதலியவற்றோடு கூட்டி யுணரும்போது பாகுபாடு தோன்றுகின்றது. பகலவன் ஒளி உள்ள காலம் பகற்காலம்; அஃது இல்லாத காலம் இரவு; சந்திரன் ஒரு முறை வானவெளியைச் சுற்றிவரும் கால அளவு மாதம். இப்படியே பிறவும். காலம் போல ஒரு படித்தாக இருப்பது ஆன்ம உணர்வு; அது ஞாயிற்றின் செலவு முதலிய வற்றின் சேர்க்கையால் பகல், இரவு முதலிய பாகுபாடு உடையதாகி வேறு வேறு காரிய நிகழ்ச்சிக்குத் துணைக்காரணமாதல்போல, ஆன்மாவும் மனம் முதலிய கருவிகளை இட மாகக்கொண்டு உணரும்போது அவ்வுணர்வு மேற்காட்டியபடி பற்றுதல், நிச்சயித்தல், ஒருப்பட்டு எழுதல், சிந்தித்தல் என நால் வேறு வகைப்படுகிறது; இவ்வொற்றுமை இக்கருவிகள் ஆன்மாவே என்னும்படி சிற்ற லும், இவற்றின் பெயரால் ஆன்மாவைக் குறித்தலும் நிகழும். ஆயினும், காலம் ஞாயிறு முதலியவற்றின் வேறாதல்போல் ஆன்மாவும் இவற்றின் வேறேயாம்.

சிந்தித்தாய்ச் சித்தம் தெளியாதாய் ஆங்காரம்
புந்தியாய் ஆய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ளம் இவ்வேறும்;
அவ்வேறும் போதுபோல் ஆங்கு.

அவ்—அவை; இவ்-இவை. அவ்வேறும்போது போல்-(ஞாயிற்றின் செலவு முதலியவற் றோடு சேர்ந்து பகல், இரவு முதலாகப் பாகு படுத்து உணரப்படினும்) அவற்றின் வேறா கிய காலதத்துவம்போல.

அவற்றின் வேறும் போதுபோல், உள் ளம் (ஆன்மா) மனம் ஆகிப்பந்தித்தும், புந்தி யாய் ஆய்ந்தும், ஆங்காரமாய்த் தெளியாதும் சித்தமாய்ச் சிந்தித்தும், (இங்ஙனம்) தானே வெவ்வேறு துணிந்து (துணிதலால்) இவற் றின் வேறு ஆம்—என முடிக்க.

உணர்வின் வேறுபாடுகள் அனைத்தும் ஆன்மாவின் மாட்டு நிகழினும், அவ்வேறு பாட்டிற்குக் காரணம் ஆங்காங்கு ஆன்மா

வால் அதிட்டிக்கப்பெறும் கருவிகளின் வேறு பாடுபற்றியேயாம். ஆதலால், ஆன்மா அவ் வக்கருவிகளின் வேறு என்று உணரப்படும் என்றபடி.

இன்னும், நனவு நிலையில் அகக்கருவி களும் புற இந்திரியங்களும் தொழிற்படுகின் றன. கனவு நிலையில் அகக்கருவிகள் மட்டும் தொழிற்படுகின்றன. உறக்கத்தில் அகக் கருவிகளுள்ளும் மனம் புத்தி அகங்காரம் என்பவை தொழிற்படாதிருக்கச் சித்தம் மாத் திரம் தொழிற்படுகின்றது. பேருறக்கத்தில் அது தானும் தொழிற்படுவதில்லை. இவ்வனு பவம் பற்றியும் எல்லா நிலைகளிலும் உணர்ந்து வருவதாகிய ஆன்மா ஆண்டு ஆண்டு நின்று பின் செயலற்றுநீங்கும் கருவி களின் வேறு என்பது உணரப்படும்.

இனி, வேறொரு காரணம் காட்டி ஆன்மா அகக்கருவிகளின் வேறுதலைப் பெறு விக்கின்றார் ஆசிரியர்.

நாம் ஒரு பொருளைக் காணும்போது முதற்கண் அதனை "இஃதொன்று தோன்று கின்றது" (Here is an object) எனப் பொதுவாக, அதன் இருப்பு மாத்திரம் கருதி உணர்கின்றோம். இது பொதுக்காட்சி அல்லது நிருவிகற்பக்காட்சி எனப்படும்: இங்குக் காண் பது ஆன்மா; காணப்படுவது புறத்துள்ள தொரு பொருள்; கருவி ஐம்பொறிகளுள் ஒன்று. இது வாயிற்காட்சி எனவும்படும்.

பின் அதனை "இஃது இன்னது" (This is such and such) எனச் சிறப்பித்துப் பகுத்துணர்கின்றோம். இச்சிறப்புணர்வு முன் முன் கண்டு சிந்தித்து உணர்ந்துள்ளவற்றின் வாதனை நம் அடிமனத்தில் (சித்தம்) அடங்கி நிற்றல்பற்றி உண்டாகின்றது. இது மேற் சொல்லிய முறையால், மனம் பற்றியும் ஆங் காரம் ஒருப்பட்டு எழுந்தும், சித்தம் முன்னை வாதனையை வெளிப்படுத்தும் உதவப் புத்தி யால் விளைவது. இக்காட்சி சவிகற்பக் காட்சி எனவும், மானதக்காட்சி எனவும் கூறப்படும். இங்கும் காண்பது ஆன்மா; கருவி மனம் புத்தி அகங்கார சித்தங்கள்; காணப்படும் பொருள் புறத்து உள்ள பொருள்.

இனி, ஒரு பொருளை இன்னது என நிச் சயிக்கும் புத்தி, அதனை முன்னைய பழக்கம் பற்றி, விளைக்கிடாக, அதைத் தனக்கு உற வாகவோ, பகையாகவோ, நொதுமலாகவோ உணரும். இங்ஙனம் உணர்தலால், அஃது இன்பம், துன்பம், மயக்கம் எனப்படும் மூன்றுவகைக் குணங்களுள் ஒன்றாகப் பரிண மிக்கும். இவ்வாறு பரிணமித்து நிற்கும் புத் தியை ஆன்மா இஃது இன்பம், இது துன்பம், இஃது இரண்டுமில்லது என அறிந்து, பின் அக்குணம் தன்மாட்டு மிக்குத் தோன்றுத லால் யான் இன்புற்றேன், துன்புற்றேன், மயங்கினேன் என உணரும். இவ்வுணர்வு தன்வேதனைக்காட்சி எனப்படும். புறத்தே உள்ள கண்ணுக்கினியதொரு பொருளைக் கண்டு இன்புறும்போது, முன்னர் இஃ தொன்று தோன்று நின்றது என உணரும் வாயிற் காட்சியும், பின்னர் இஃது இன்னது என உணரும் மானதக் காட்சியும் அதன் பின் னர் 'இஃது இன்பம்; என்ன இன்பம்!' என்னும் தன்வேதனைக்காட்சியும் ஒன்றன்பின் ஒன் றாக, காரணகாரிய முறையில் ஆன்மாவின் உணர்வில் வந்து தட்டும், கடல் அலைபோல.

இறுதியில் உள்ள தன் வேதனைக்காட்சி யில் காண்பது ஆன்மாவே; காணப்படு பொருள் சத்துவம், இராசதம், தாமதம் (இன் பம், துன்பம், மயக்கம்) என்னும் மூன்ற னுள் ஒரு குணமயமாகப் பரிணமித்து நிற் கும் புத்தியே ஆகும்; புத்தி என்னும் சொற் குப்பொருள் போகம், நுகர்ச்சி என்பதே ஆகும். கருவி வித்தியா தத்துவங்களுள் எண்ணப்படும் கலை வித்தை அராகம் என்னும் அக அந்தக் கரணங்களாம். அகத்தே புத் தியை இஃது இன்பம், துன்பம், மயக்கம் என உணரும் வேதனைக்காட்சியில், பழக்கம் பற் றிப் புத்தியைப் புறத்தே உள்ள விடயத் தின்மேல் வீழ்த்தி (Projecting the faculty of intellect on the external object) அதனையே சுகம், துக்கம், மோகம் என மயங்கி உணர்கின்றோம்.

இதுவரை கூறியவற்றை மனம் ஒருங்கி உணர்வார்க்கு (1) மனம் முதலிய அகக் கருவிகளால் உணரும் மானதக் காட்சியில் உணரப்படும் பொருள்கள் புறத்தே நிலை பெறும் புலன்கள்; (2) உள்ளத்தால் (அக அந்தக் கரணங்களால்) உணரும் தன்வேத னைக் காட்சியில் உணரப்படும் பொருள் மனத்துக்கு மேலே உள்ள புத்தியில் உதிக் கும் சுகதுக்க மோக ரூபமாகிய குணதத்து வம். ஆதலால், மனம் முதலியவை புறத்தே நிகழும் புலன்களுக்கு வேறு ஆயினாற்போல.

உள்ளமும் (ஆன்மாவும்) குணதத்துவத்துக்கு வேறே ஆகும். இதனால் ஆன்மாக் குணதத்துவத்தின் கீழ் உள்ள மனம் புத்தி அகங்கார சித்தங்களுக்கு வேறு என்பதும், மனம் முதலியன தமக்குக் கீழ் உள்ள பொருள்களை நோக்கச் சித்தாகத் தோன்றினும், மேல் உள்ள உள்ளத்தை நோக்க அசித்தே ஆம் என்பதும் இனிது விளங்கும்.

மனமாதி யால்உணர்தல் மன்னு புலன்கள்;
மனமாதி மன்புலனின் அல்லன்—மனமேல்
உதித்தொன்றை உள்ளம் உணர்தல்; அதனில்
உதிக்கும் கடற்றிரையை ஒத்து.

முன்னர்க்காட்டிய உதாரண வெண்பா மானதக்காட்சியுள் உணர்வு கடற்றிரை போலப் பரம்பரையாக வேறு வேறு நிகழுமாறு உணர்த்திற்று; இது வாயிற்காட்சி உணர்வு, மானதக்காட்சி உணர்வு, தன்வேதனைக் காட்சி உணர்வு என்னும் மூன்றும் அவ்வாறு தோன்றி ஆன்மாவின் மாட்டு நிகழ்தலை விளக்குகின்றது.

இங்குக் கூறிய அரிய நுண்ணிய கருத்துக்களை மனம்பற்றிச் சிந்தித்தற்குத் துணையாகச் சிவஞான சித்தியிலிருந்து சில திருவிருத்தங்கள் தரப்படுகின்றன:—

(1) கருவிகள் புறத்துநிகழ்கருவி, அந்தக்கரணம், அக அந்தக்கரணம் என மூவகைப் படும் என்பது:—

வாயாதி சோத்தி ராதி புறத்துவாழ்
கருவியாகும்;
ஓயாத மனாதி காயத் துணரும்உட்
கருவியாகும்;
ஆய்வார்கட் கராக மாதி அவற்றினுட்
கருவி என்பர்;
மாயாள்தன் வயிற்றி வற்றால் துடக்குண்டு
வாழும் ஆன்மா.

(2) ஆன்மா அந்தக் கரணங்களின் வேறென்பது:—

கருவியாம் மனமும் புத்தி அகங்காரம்
சித்தம் நான்கும்
மருவிஆன் மாவே என்ன வரும்;தீபம்
எனத்தெ ரிந்தங்(கு)
ஒருவிஆன் மாவின் உண்மை உணர்ந்தவர்
தமையு யுணர்ந்தோர்;
தரும்இது பசுஞா னம்;பின் சிவஞானந்
தனக்கு மேலாம்.

(3) காட்சி மூவகையின் இலக்கணம்:—

உயிரின்ஓ டுணர்வு வாயில் ஒளியுரு
ஆதிபற்றிச்
செயிர்உறு விகற்பம் இன்றித் தெரிவ(து)
இந்திரியக் காட்சி;
அயர்வில்இந் திரிய ஞானம் ஐம்புலன்
சார்ந்து உயிர்க்கண்
மயர்வற வந்தஞானம் மானதக்
காண்டல் ஆமே.
அருந்தின்பத் துன்பம் உள்ளத் தறிவினுக்(கு)
அராகம் ஆதி
தரும் தன்வே தனையாங் காட்சி.

(தொடரும்)

கோயம்பேடு; தர்மசம்வர்த்தினி அம்பிகைக்கு 38-ஆவது ஆண்டு ஆடிப்பூர சந்தனக்காப்பு விழா 3—8—62, 4—8—62 தேதிகளில் நடைபெற்றது.

குறிஞ்சிப்பாடி: புத்துமாரியம்மன் கோயிலில் செடல்பெருவிழா 1—8—62 முதல் 12—8—62 வரை நடைபெற்றது.

கே. ஆடூர்: செல்லியம்மன், அய்யனார் ஆண்டு பிரம்மோற்சவம் 22—7—62-ல் நடைபெற்றது.

திருவாரூர்: தியாகராயசுவாமி கோயிலில் கமலாம்பிகைக்கு ஆடிப்பூரவிழா 24—7—62 முதல் 4—8—62 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன. 5—8—62 முதல் 7—8—62 வரை நம்பிஆரூரர் திருவிழா நடைபெற்றது.

உண்மை விளக்கம்*

திரு. ந. ரா. முருகவேள், M. A., M.O.L., சென்னை.

செந்தமிழ் மக்களின் பேரறிவின் பெரு விளைவாகத் திகழ்வது 'சைவசித்தாந்தம்' என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கை. அத்தத்துவக் கொள்கையினை விளக்கும் அரும் பெறல் நூல்கள் 'சித்தாந்த சாத்திரங்கள்' எனவும் 'மெய்கண்ட நூல்கள்' எனவும்வழங்கப்பெறும். சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு ஆகும். அவற்றுள் 'உண்மை விளக்கம்' என்பதும் ஒன்று.

சித்தாந்த சாத்திரங்களை முறையாகப் பயிலத் தொடங்குவோர் முதற்கண் பயிலத் தகுந்ததாய், எளிய இனிய தெளிவான முறையில் 'உண்மை விளக்கம்' மிகவும் சுருக்கமாக அமைந்து விளங்குகின்றது. சைவசித்தாந்தத்தின் அரும்பெறல் உண்மைகள் அனைத்தையும் சாரமாக வடித்தெடுத்து விளக்கும் சிறந்துயர்ந்த குறிக்கோள் கொண்டு இயற்றப்பெற்றமையின், இஃது 'உண்மை விளக்கம்' எனப் பெயர் பெற்றது. பக்குவம் வாய்ந்த தக்க மாணாக்கருக்கு அநுபவம் மிக்க ஞானதேசிகர் அருளிச் செய்யும் உபதேச முறையில் அமைந்து திகழும் இந்நூல்,செப்பலோசையுடைய வெண்பாவினால் இயன்றுள்ளமை பெரிதும் சிறப்பும் பொருத்தமும் உடையதாகக் காணப்படுகிறது.

'உண்மை விளக்கம்' இயற்றிய ஆசிரியர் 'மனவாசகங் கடந்தார்' என்பவர். பண்டைக்காலத்தில் திருமுறைகளிற் பயின்று வரும் அரிய தொடர்களைக்கொண்டு, தத்தம் மக்களுக்குப் பெயர் அமைப்பது சான்றோர்களின் வழக்கம். அம்முறையினை ஒட்டி,

"எனைநான் என்ப தறியேன் பகலிர
வாவதும் அறியேன்
மனவா சகங்க டந்தான்
எனைமத்தோன் மத்தனுக்கி..."

எனவரும் அரிய திருவாசகப் பாடலிற் பயின்றுவரும் தொடரே, இந்நூலாசிரியருக்குப் பெயராயிற்று. இங்ஙனமே சைவசித்தாந்த சாத்திரங்களுள் சிவஞானசித்தியார்க்கும் திருவருட்பயனுக்கும் உரைவகுத்த நிரம்பவழகிய தேசிகர் அவர்களுக்கும்,

"நித்த மணாளர் நிரம்ப வழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்..."

என்னும் திருவாசகப் பாடலின் தொடராலேயே பெயரமையப் பெற்றசெய்தியும், பிறவும் அறிந்தின்புறற் பாலன.

மனவாசகங் கடந்தார்

மனவாசகங் கடந்தார் திருவதிகையில் வாழ்ந்தவர். ஆசிரியர் மெய்கண்ட சிவத்தின் நேர்முக மாணாக்கர்கள் பலருள் இவரும் ஒருவர். சிவஞான சித்தியார் இயற்றியருளிய அருள்நந்தி சிவாசாரியர் இவரோடு உடன் பயின்ற நண்பராவர். திருவதிகை திருத்துறையூர் திருவெண்ணெய்நல்லூர் என்னும் மூன்று தலங்களும் ஒன்றற்கொன்று மிக அணித்தாக விளங்குவன ஆதலின், இப்பெரு மக்கள் தம்முள் தொடர்புகொண்டு நெருங்கிப் பழகுதற்கு வாய்ப்பு இருந்தது. ஏனைய எத்துணையோ பல செந்தமிழ்ச் சான்றோர்களைப் போலவே, மனவாசகங்கடந்தாரைப் பற்றியும் போதிய அளவு வரலாற்றுச்செய்தி ஏதும் நமக்குக் கிடைக்கப்பெறவில்லை. எனினும், ஆசிரியர் மெய்கண்ட சிவத்தின்பால் அருள்நந்தி சிவாசாரியாருடன் ஒருசாலை மாணாக்கராய் உடன் பயின்றவர் என்ப தொன்றே, இவர் தம் பெருமையை விளக்கப் போதியதாகும்.

"மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாதம்
மேவுதலும் ஞானம்விளைந்து ஓர்குருவின்
[அருளால்
புக்கனுட்டித் தேசிட்டை புரிந்துளோர்கள்..."

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுட்கு, ஆசிரியர் சிவஞான சுவாமிகள்,

---

* 'சைவசித்தாந்த சாத்திர வகுப்புக்குழு' வின் சார்பில், மே மாதம் 18,19,20 தேதிகளில், திரு. வி. க. மணி மண்டபத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகளைத் தழுவியது.

"ஓர்குரு எனப் பொதுப்படக் கூறினர்
ஒருசாலை மாணக்கராய்த் தம்மின்
மூத்தாரையும் தழுவுதற்கு"

என விளக்கம் வரைந்திருத்தல், தம்மின் மூத்தவராய் ஒருசாலை மாணக்கராய்த் திகழ்ந்திருந்த மனவாசகங் கடந்தார் போன்றவர்கள்பால் தாம் கொண்டிருந்த பெருமதிப்பின் பயனாகத்தான், ஒருகால் அருள்நந்திசிவம் இங்ஙனம் அருளிச்செய்தனரோ என நம்மனோரை நினைக்கச் செய்கின்றது.

இஃதெங்ஙனமாயினும், மனவாசகங் கடந்தார் அரிய பல நுண்பொருள்களை எண்பொருளவாகச் செலச்சொல்லிக் கற்பிக்க வல்ல பெருந்திற னுடையார் என்பது, அவர் தம் நூலின் அமைப்பாற் புலனாகின்றது. உணர்தற்கரிய பொருள்களை மிக எளிய இனிய முறையில், இவர் உணர்த்திச் செல்கின்றார். அதனால், "தெய்விகத் தத்துவக் கொள்கையானது எத்துணை இனிமை மிக்கதாக இருக்கின்றது! அறிவிலிகள் நினைப்பது போல, அது கடினமானதும் சுவையற்றதும் அன்று. அப்போலோவின் குழலிசையைப் போல, அஃது இனிமை மிக்க இசைநலம் உடையதாகத் திகழ்கின்றது. தேனிற் றோய்த்த இனிய பொருள்கள்போல எஞ்ஞான்றும் இனிமை பயக்கும் பெருவிருந்தாக அது விளங்குகின்றது. அதன்கண் சுவைக் குறைவோ தெவிட்டுதலோ சிறிதும் இல்லை" என்னும் கருத்தமைய,

"How charming is divine philosophy !
Not harsh and crabbed as dull fools suppose
But musical as is Apollo's lute,
And a perpetual feast of nectared sweets
Where no crude surfeit reigns."

என ஜான் மில்ட்டன் என்னும் ஆங்கிலக் கவிஞர் பாடியதனை நினைவுகூர்ந்து, நாம் வியந்து மகிழ்கின்றோம்.

ஐய வினாக்கள்

மனவாசகங் கடந்தார் தமது ஞானாசிரியராகிய மெய்கண்டாரைப் பணிந்து, அவர்பால் தமக்கு நேர்ந்த ஐயங்களை வினவுவது போலவும், அவற்றிற்கு அவர் விடைகூறிச் சைவசித்தாந்த உண்மைகளை விளக்குவது போலவும், வினாவிடை முறையில் அமைத்து இந்நூலை இயற்றியுள்ளார். "பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப் பதிபசுபாசம் தெரித்தல்" என்றபடி, முப்பொருள் உண்மைகளை விளக்குவதே சைவசித்தாந்தம். முப்பொருள்களாவன பதி (கடவுள்), பசு (உயிர்), பாசம் (தளை) என்பன. பாசம் ஆணவம் மாயை, கன்மம் என மூவகைப்படும். பாச நீக்கத்துக்கும் சிவப்பேற்றுக்கும் துணைபுரிவன, நாதன் நடமும் அஞ்செழுத்தும் ஆகும். ஆக, இவற்றைக் குறித்தே மனவாசகங்கடந்தார் தம் ஆசிரியராகிய மெய்கண்டார்பால் ஐயுற்று வினவுகின்றார்:

"ஆறாறு தத்துவம்ஏது? ஆணவம்ஏது?
அன்றேதான்
மாறா வினையேது? மற்றிவற்றின்
—வேறாகா
நான்ஏது? நீஏது? நாதன்நடம்,
அஞ்செழுத்துத்
தான்ஏது? தேசிகனே!
சாற்று"

ஆறாறு தத்துவங்கள்

காணப்பட்ட உலகத்தாலேயே காணப் படாத கடவுளின் உண்மையை அறிதல் வேண்டும். ஆசிரியர் திருவள்ளுவரும், மெய்கண்டாரும் அம்முறை தழுவியே கடவுளுண்மையைத் தத்தம் நூல்களிற் கட்டுரைத்தனர். மாணிக்கவாசகரும் "ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடும் காலமே" என அருளிச் செய்தனர். எனவே, மனிதன் அறிவு பெற்ற நாள்முதல் இவ்வுலகியற்கையைப் பலவகையில் பகுத்துணர்ந்து அறிய முயன்றான். உலகாயதர் நிலம் நீர் தீ வளி என நான்கு தத்துவங்களை மட்டுமே ஆராய்ந்தமைந்தனர். சாங்கியம் என்னும் அறிவுக் கொள்கை 25 தத்துவங்களை ஆராய்ந்தறிந்த சிறப்புடையது.

"சாங்கியம் யோகம்என் றிரண்டு தன்மைய
வீங்கிய பொருள்எலாம் வேறு காண்பன;
ஆங்கவை யுணர்ந்தவர்க் கன்றி அன்னவன்
ஓங்கிய மேல்நிலை உணரற் பாலதோ?"

எனக் கம்பர் சாங்கிய நூற் கொள்கையினைப் புகழ்ந்து போற்றினர். பரிமேலழகர் "சுவையொளியூறோசை" என்னும் திருக்குறளுரையில் சாங்கியக் கொள்கையினைப் பாங்குற விளக்கியுள்ளார். பரிபாடல் என்னும் சங்க நூலும் இச்சாங்கியக் கொள்கையினை,

"பாழெனக் கால்எனப் பாகென ஒன்றென
இரண்டென மூன்றென நான்கென ஐந்தென

ஆறெண ஏழென எட்டெனத் தொண்டென
நால்வகை யூழிஎண் நவிற்றும் சிறப்பினை''

என்னும் வரிகளாற் குறிப்பிட்டிருத்தல் காணலாம். இங்ஙனம் "ஐயைந்தும் ஆய்வதறிவு'' எனப் போற்றப்பட்ட சாங்கியக் கொள்கைக்கும் சைவசித்தாந்தத் திற்கும் பெரிதும் தொடர்புண்டு.

"நிலவுல காய தா சி நிகழ்சிவாத்
துவிதாந் தத்துக்
குலவினர் அளவ ளாவாக் கொள்கைய
தாகி, வேதத்
தலைதரு பொருளாய், இன்பாய்த்
தாவில்சற் காரி யத்தாய்,
மலைவறும் உணர்வால் பெத்த முத்திகள்
மதித்தாம் அன்றே''

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுளில் சைவசித்தாந்தத்துக்குச் சிறந்த அடிப்படைக் கொள்கையாகக் குறிப்பிடப்பெற்ற "சற்காரிய வாதம்'' (உள்ளது அழியாது இல்லாதது தோன்றாது என்னும் கொள்கை) சாங்கியர்க் குரியதே யாகும். இந்திய நாட்டுத்தத்துவக்கொள்கைகளுள் மிகவும் பழமை வாய்ந்தது சாங்கியமே என்பர். இத்தகைய சாங்கியக் கொள்கையினும் மிக ஆழ்ந்து நுணுகிச்சென்று, உலகமைப்பின் பொருட் கூறுகளையும் தோற்ற ஒடுக்க முறைகளையும் குறித்துச் சைவசித்தாந்தம் திறம்படவிளக்குகின்றது. இவ்விளக்கத்தின் விளைவே ஆறுறு தத்துவங்களைப்பற்றிய செய்திகள் ஆகும். ("The unique position of Saiva Siddhantha in the history of thought is the fact that it expounds by careful reflection the systematic account of the process of cosmic evolution which attempts to comprehend the universe as a sum total of thirty-six categories. This exposition is no mere metaphysical speculation, but is a purely logical account based on scientific principles.") முப்பத்தாறு தத்துவங்களும் முறையே ஆன்ம தத்துவம் (24) வித்தியா தத்துவம் (7) சிவதத்துவம் (5) என மூன்று வகைப்படும். அவற்றுள் ஆன்ம தத்துவம் இருபத்துநான்கும் முறையே வருமாறு:—

ஆன்ம தத்துவங்கள் 24

பூதங்கள் 5: பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்பன. இவற்றை நிலம் நீர் தீ வளி விசும்பு எனவும், மண் புனல் அனல் கால் வான் எனவும் கூறுவர். அண்டம் (Macrocosm), பிண்டம் (Microcosm) என்னும் இரண்டும் இவ்வைம்பெரும் பூதங்களின் கலப்பினால் ஆகிய காரியமேயாகும். பூதங்கள் ஐந்திற்கும் தனித்தனியே வடிவு, நிறம், எழுத்து, குணம், தொழில், குறி, தெய்வம், கலை என்பன உண்டு.

பூதம்	வடிவு	நிறம்	எழுத்து	குணம்	தொழில்	குறி	தெய்வம்	கலை
பிருதிவி	நாற்கோணம்	பொன்மை	ல	கடினம்	தாங்குதல்	வச்சிரம்	அயன்	நிவிர்த்தி
அப்பு	பிறை	வெண்மை	வ	தண்மை	பதம்செய்தல்	தாமரை	மால்	பிரதிட்டை
தேயு	முக்கோணம்	செம்மை	ர	வெம்மை	ஒன்றுவித்தல்	சுவத்திகம்	உருத்திரன்	வித்தை
வாயு	அறுகோணம்	கறுப்பு	ய	பரந்தவை திரட்டல்	சலித்தல்	அறுபுள்ளி	மகேசுரன்	சாந்தி
ஆகாயம்	வட்டம்	புகைமை	ஹ	வெளியாதல்	இடம் கொடுத்தல்	அமுத பிந்து	சதாசிவம்	சாந்தியதீதை

''இரந்தரம் ஆகி வான்தான் இடங்கொடுத்
திடும்;ச லித்துப்
பரந்தவை திரட்டும் கால்;தீச் சுட்டொன்று
வித்தல் பண்ணும்;
நிரந்தரம் குளிர்ந்து நின்று பதஞ்செயும்
நீர்;மண் தானும்
உரந்தரும் கடினம் ஆகித் தரித்திடும்,
உணர்ந்து கொள்ளே!''

''மண்புனல் அனல்கால் வான்பால் வடிவுநாற்
கோணம், ஆகும்
தண்பிறை, மூன்று கோணம், தகும்அறு
கோணம், வட்டம்;
வண்பொன்மை வெண்மை செம்மை
கறுப்பொடு தூம வண்ணம்;
எண்தரும் எழுத்துத் தானும் லவரய
வவ்வும் ஆமே!''

''குறிகள்வச் சிரத்தி ஞேடு, கோகன
தம்,சு வத்தி
அறுபுள்ளி, அமுத விந்து; அதிதெய்வம்
அயன்மால் ஆதி
செறிபுகழ் ஈச ஞேடு சதாசிவம்
பூத தெய்வம்;
நெறிதரு கலைஐந் திற்கும் நிகழ்த்துவர்
இந்த நீர்மை''

என ஆசிரியர் அருள்நந்தி சிவனரும் தமது சிவஞானசித்தியார் நூலின்கண் அருளிச் செய் திருத்தல் ஈண்டு உணர்ந்து மகிழ்தற்குரியது.

தன்மாத்திரைகள் 5: சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்பன. இவை முறையே ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் என வழங் கப்படும். ஆசிரியர் திருவள்ளுவர் ''சுவை யொளி யூறோசை நாற்றமென்றைந்தின் வகைதெரிவான் கட்டே யுலகு'' என்னும் திருக்குறளில் இவற்றைக் குறிப்பிட்டிருத் தல் காணலாம். மேற்குறித்த பூதங்கள் ஐந் தின் சூக்கும நிலையே தன்மாத்திரைகள் ஆகும். தன்மாத்திரைகளில் இருந்தே பூதங் கள் ஐந்தும் முறையே தோன்றுகின்றன. தன்மாத்திரைகள் ஐந்தும் பஞ்சபூதங்களுக் குக் காரணமாயும், பஞ்சபூதங்களைப் பற்றுக் கோடாகக்கொண்டு இந்திரியங்கள் விடயங் களை விடயிப்பதற்குத்துணை செய்வனவாயும் இருக்கும். இதனை,

''ஓசைநற் பரிச ரூப இரதகந் தங்கள் என்று
பேசும்மாத் திரைகள் ஐந்தும், பிறக்கும்பூ
தாதி கத்தில்;
நேசஇந் திரியங் கட்கு நிகழ்அறிவு இதனுற்
காண்டும்...''

''சாற்றிய பஞ்ச தன்மாத் திரைகளிற் சத்தம்
முன்னுத்
தோற்றும் வான் வளிதீ நீர்மண்...''

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுட்களா லும் தெளியலாம். தன்மாத்திரை எனினும் சூக்குமபூதம் எனினும் பொருள் ஒன்றே.தன் மாத்திரையும் ஐம்பெரும் பூதமும் தேர் ஊர் வானுக்குத் தேர்போல இந்திரியங்கட்கு ஆற் றல் விளைவித்து நிற்கும். பெரும்பூதமும் தன்மாத்திரையும் குடமும் குடமேற்பூச்சும் போலும்.

ஞானேந்திரியங்கள் 5: சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் என் பன. இவற்றை முறையே செவி தோல் கண் நாக்கு மூக்கு (மெய் வாய் கண் மூக்கு செவி) என்பர். இவை ஐந்தும் முறையே ஐம்பூதங் களைப் பற்றுக்கோடாகக்கொண்டு சுவை யொளியூறோசை நாற்றங்களை அறியும்.

''சத்தா தியைஅறியும் தானம் செவிதோல்கண்
அத்தாலு மூக்குஎன் றறி''

''நற்செவி துவக்குக் கண்நா நாசிஐங்
திணையும் நல்லோர்
புத்திஇந் திரியம் என்று புகன்றனர்;
இவைத மக்குச்
சத்தநற் பரிச ரூப இரதகந்
தங்கள் ஐந்தும்
வைத்தனர் விடயம்ஆக, அடைவினில்
மருவும் என்றே''

கன்மேந்திரியங்கள் 5: வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்பன. இவை முறையே வாய் கால் கை எருவாய் கருவாய் எனவும்படும். ஐம்பூதங்களைப் பற்றுக்கோடா கக்கொண்டு, இவைகள் பேசல் நடத்தல் கொடுத்தல் விடுத்தல் இன்புறல் என்னும் தொழில்களைச் செய்யும்.

வாக்குப்பா தம்பாணி மன்னு குதம் உபத்தம்
ஆக்கருது நாளும் அது.

''வாக்கொடு பாதம் பாணி பாயுவோ
டுபத்தம் ஐந்தும்
நீக்கினர் முன்னே கன்மேந் திரியங்கள்
எனநி னைந்தே;
ஆக்கிய வசன கமன தானமும்
விசர்க்கா னந்தம்
ஊக்கமார் ஐந்தும் ஐந்தின் தொழில்
என ஓதி னுரே''

அந்தக்கரணங்கள் 4: மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்பன. சித்தம் இஃது யாதாகற்பாற்று என ஒரு பொருளைச் சிந்திக்கும். மனம் இது குற்றியாகற்பாற்று மகனாகற்பாற்று என ஒன்றைச் சங்கற்பித்தும், அஃதாமோ அன்றோ என ஐயுற்றும் பற்றி நிற்கும். ஆங்காரமானது குற்றியென்றுதல் மகனென்றுதல் ஒன்றை நிச்சயிப்பேன் யான் என்று எழுச்சிகொள்ளும். புத்தியானது சிவன்மகன் இது குற்றி இது குடம் இஃது ஆடை என அவ்வப் பொருள்களைப் பெயர் சாதி கன்மம் குணம் என்பன பற்றிச் சிறப்பு வகையால் துணியும். கண்ணுக்குக் காட்டாகிய விளக்குப்போல ஆன்மாவுக்குக் காட்டாக நிற்பது அந்தக்கரணம்.

உண்மை விளக்கத்தில், மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் முறையில் வைத்து அந்தக் கரணங்களின் பெயர் கூறப்பட்டுள்ளது. அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பு என்பதே முறையாயினும்,

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

என ஆசிரியர் திருவள்ளுவர் கூறியவாறு போல, ஈண்டும் சித்தம் மனம் அகங்காரம் புத்தி எனற் பாலனவற்றைச் செய்யுள் நோக்கி முறை பிறழவைத்ததாகக் கொள்ளுதல் வேண்டும்.

"அந்தக் கரணம் அடைவே உரைக்கக்கேள்
அந்த மனம்புத்தியுடன் ஆங்காரம்-சிந்தைஇவை
பற்றியது நிச்சயித்துப் பல்கால்
எழுந்திருந்தங்(கு)
உற்றதுசிந் திக்கும் உணர்"
—உண்மை விளக்கம்.

பூதங்கள் ஐந்து, தன்மாத்திரைகள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, அந்தக்கரணங்கள் நான்கு ஆகிய இத்தத்துவங்கள் இருபத்துநான்கும், ஆன்மாவுக்குத் தூலவடிவில் நேரே தொடர்புற்றுப் பயன்படுதலின் ஆன்ம தத்துவம் எனப் பெயர் பெறும். இதனைச் சிகண்ட ருத்திரர் அதிட்டித்து நிற்பர்.

வித்தியா தத்துவங்கள் 7

காலம்: புத்தர் முதலானோர் காலம் என்றொரு பொருள் இல்லை என்பர். மாந்தளிர் முதலியன இளவேனிற் காலம் முதலியவற்றினன்றித் தோன்றாமையும், முல்லைப்பூ முதலியன கார்காலம் முதலியவற்றினன்றி மலராமையும் காண்கிறோம். இங்ஙனமே உலகத்துப் பொருள்களெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றிப் பிறிதொரு காலத்தில் அழிந்துபடுதல் யாவரும் அறிந்ததொன்று. ஏனைக் காரணங்களெல்லாம் தொக்கவழியும் இதற்கு முன்னர்த் தோன்றாத ஒரு பொருள் இப்பொழுது தோன்றுதற்கு அமைந்த காரணம் யாது, அது காலம் எனத் துணியப்படும்.

"ஆயஅக் காலம் மூன்றாய் ஆக்கியும்
அளித்தும் போக்கிக்
காயமோ டுலகுக் கெல்லாம் காலசங்
கையினைப் பண்ணி
நாயகன் ஆணை யாலே நடத்திடும்
சகத்தை யெல்லாம்"

அசுத்த மாயையினின்று அநந்த தேவரால் முறையே காலமும் நியதியும் கலையும், கலையின் வித்தையும், வித்தையின் அராகமும் தோன்றும். "மாயையிற் காலமோடு நியதி பின் கலாதி தோன்றும்" என்பது சிவஞான சித்தியார். தோற்ற முறைமைபற்றிக் காலம் முன்னாயினும் தொழிற்பாட்டு முறைமைபற்றிக் கலை முன்னாகலின், "அருத்திமிகும் கலை காலம் நியதியுடன் வித்தை அராகம் இவை அனந்தரால் மாயைதனில் ஆகும்" எனச் சிவப்பிரகாசத்திற் கூறப்பட்டது.

காலம் செல்காலமான எல்லையும், நிகழ்காலமான பலனும், எதிர்காலமான புதுமையும் ஆக மூன்று விதமாக இருக்கும்.

"நிகழ்காலம் கழிகாலம் எதிர்காலம் என்றே
ஓசைதர வருங்காலம் எல்லைபலம் புதுமை
உறுவிக்கும் இறைசத்தி உடனாய் நின்றே"
—சிவப்பிரகாசம் 40.

நியதி: பால் ஊழ் தெய்வம் விதி நியதி என்பன ஒருபொருட் கிளவிகள். அவரவரால் ஈட்டப்படும் வினையின் பயனை அவரவரே நுகருமாறு அரசர் ஆணைபோல நியமித்து நிறுத்துவது நியதி தத்துவம். ஒருபாற் கோடாது நடுநின்று செங்கோல் செலுத்தும் அரசன் ஆணையில் வழி, எளியோர் பொருளை வலியோர் கவர்ந்து கொள்ளுவதுபோல, நியதி தத்துவமில் வழி ஒருவர் செய்த வினைப்பயன் மற்றொருவர் கவர்வதாய் முடியும். தொல்காப்பியர் திருவள்ளுவர் இளங்கோவடிகள் முதலிய சான்றோர்களெல்லாம் இதனைத் தத்

நூல்களிற் குறிப்பிட்டு வலியுறுத்தியுள் ளமை காணலாம்.

"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு''

என்றதைப்பற்றி, ஒரு சிலர் அவரவர் வினைப் பயனை நியமித்தற்கு இருவினையே அமையும், நியதி தத்துவம் வேண்டா என்பர். இருவினை யானது நுகர்ச்சியைப் பயத்தல் மாத்தி ரையேயன்றி, அந்நுகர்ச்சி வினை செய்தவ னைச் சென்று அடையுமாறு செய்விக்க மாட்டா. ஆதலின் முதல்வனது ஆணையா கிய சத்தியை முன்னிட்டு அவர் அவர் வினைக் குரிய நுகர்ச்சியினை நியமித்து நிறுத்துதற் குக் கருவி நியதிதத்துவமேயாகும்.

"செய்வினையும் செய்வானும் அதன் பயனும்
கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள்
எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்
கில்லைஎன
உய்வகையாற் பொருள்சிவன்என் றருளாலே
உணர்ந்தறிந்தார்''

எனச் சாக்கிய நாயனுர் வரலாற்றில், ஆசி ரியர் சேக்கிழார் பெருமான் அருளிச்செய் திருத்தல் ஈண்டு அறிதற்குரியது. "நியதி பின் தோன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கும்'' என்பது சிவஞான சித்தியார். "நியதி தேச மிகும் அரசர்தரும் ஆணை, செய்தி செய்தவ ரைத் துய்ப்பிக்கும் செய்கைபோல, நேச முறும் தம் கன்மம் நிச்சயித்து நிறுத்தும்'' என்பது சிவப்பிரகாசம்.

கலை; கலை என்னும் தத்துவமானது, மூலமலத்தின் மறைப்புண்டு சூனியம்போல நின்ற ஆன்மாக்களுக்குப்போக நுகர்ச்சியின் பொருட்டு மலசத்தியிற் சிறிதே நீக்கி ஆன் மாக்களுக்குக் கிரியாசத்தியை விளக்குவது. 'கலித்தல்' நீக்குதலும் செலுத்துதலுமாகலின், மலத்தை நீக்குதலாற் கலை எனப் பெயரா யிற்று. ஆன்மாவின் கிரியாசத்தியை விளக் கிப் புத்தி தத்துவத்திற் செலுத்துவது கலை.

"அயர்விலாக் கலை பின்தோன்றி ஆணவம்
ஒதுக்கிச் சித்தின்
செயல்புரி கிரியா சத்தி தெரிவிக்கும் சிறிதே''
—சித்தியார், 145.

"வைத்தகலை தான்மூல மலம்சிறிதே நீக்கி
மருவும்வகை தெரிவிக்கும் வாயில்களின் பயனை''
—சிவப்பிரகாசம், 39.

வித்தை: கலையினின்றும் தோன்றி ஆன் மாக்களுக்கு ஞானசத்தியை விளக்கி, எவ் வகைப்பட்ட உணர்வும் ஆன்மாவிற் சென்று விடயமாதற்குக் கருவியாய் நிற்பது வித்தியா தத்துவம். புத்தி தத்துவ இயக்கத்தாற் பரந்து நிகழும் உயிரின் ஆராய்ச்சி யுணர் வுக்கு அடிப்படைக் காரணமாய், உயிரின் கண் அறிவினை முதன் முதல் எழுப்புவது இவ்வித்தியா தத்துவத்திற்கே யுரிய சிறப் பியல்பாகும். வித்தை என்பது, அறி, அறிவி எனப் பொருள்படும் வித் என்னும் தாதுவிற் பிறந்த வித்யா என்னும் வடசொல்லின் திரி பாகும்.

"வித்தை
உயர்கலை அதனில் தோன்றி
அறிவினை யுதிக்கப் பண்ணும்''
—சித்தியார், 145.

"வாயில்களின் பயனைப்
புத்திதர வித்தைஇடை நின்றறிவை உயிர்க்குப்
பொருந்தியிடும் வகைபுணர்க்கும் புனிதசத்தி
புணர்ந்தே''
—சிவப்பிரகாசம், 39.

அராகம்: இச்சை நிகழ்ந்தன்றிப் போக நுகர்ச்சி செல்லாமையானும், இச்சையாவது ஞான விசேடமேயாகலானும், வித்தியாதத்து வத்தினின்றும் அராக தத்துவம் தோன்றி ஆன்மாவுக்கு இச்சாசத்தியை விளக்கிப் பொருள்களில் விருப்பத்தை யுண்டாக்கும். இச்சை எனப் பொருள்படுவதாகிய ராக என் னும் வடசொல் தமிழில் அகரச்சாரியை பெற்று அராகம் என வழங்கப்படுவதாயிற்று.

"விச்சையின் அராகம் தோன்றி வினைவழிபோகத்
தின்கண்
இச்சையைப் பண்ணி நிற்கும்...''
—சித்தியார், 172.

"பேசரிய அராகம்தம் கன்மத்துக் கீடாய்ப்
பெற்றதனில் ஆசைதனைப் பெருகுவிக்கும்...''
—சிவப்பிரகாசம், 40.

இவ்வாறு காலம் நியதி கலை வித்தை அரா கம் என்னும் தத்துவங்கள் ஐந்தும் ஆன்மா வுக்கு உபகாரமாய், ஏனைக் கருவிகள்போல

அவத்தைப்படுதற்கு ஏதுவாய், இடையிடையே கூடுதலும் நீங்குதலும் இன்றி எக்காலத்தும் ஆன்மாவினுடனுய்க் கஞ்சுகம் (சட்டை, போர்வை) போலப் பந்தித்து நிற்றலின், இவை 'பஞ்ச கஞ்சுகம்' என வழங்கப் படும்.

புருடன்: இங்ஙனம் காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் பஞ்ச கஞ்சுகத்துடன் கூடிப் பொதுமையாற் போத்திருத்துவம் (போகம் நுகர்வோனுதற் றன்மை)எய்தி நின்ற ஆன்மா, பிரகிருதி மாயைப் போக நுகர்ச்சியின்கண் ஈடுபடுதற்கு ஏதுவாகிய பஞ்சக்கிலேசம் என்னும் பும்ஸ்துவ (போக நுகர்ச்சிக்குரிய) மலமுடையவனுய்ப் புருட தத்துவம் என நிற்கும். 'பஞ்சக் கிலேசம்' (ஐந்து குற்றங்கள்) என்பன பொருள்களைத் திரியக்காணும் உணர்வாகிய அவிச்சையும், யான் என மதிக்கும் அகங்காரமும், எனக் கிது வேண்டும் என்னும் அவாவும், பொருள் களின்பாற் செல்லும் ஆசையும், அவை கிடையாத வழி எய்தும் கோபமும் ஆகும். இப்பஞ்சக்கிலேசமே பும்ஸ்துவமலம் என்று கூறப்படும். திருவள்ளுவப் பெருந்தகை, இவ் வைந்தினையும் மூன்றாக அடக்கிக்,

"காம வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய்"

என அருளிச் செய்தனர். பஞ்ச கஞ்சுகமும் பஞ்சக்கிலேசமும் பொதுவகையானும் சிறப்பு வகையானும் போக நுகர்வோனுதற் றன் மைக்கு ஏதுவாக நிற்க, ஆன்மா புருடதத்து வம் எனப் பெயர்பெற்றுப் பிரகிருதி மாயைப் போகம் நுகர்தற்கு உரியவனுவன். ஆன்மா வியாபகமாயினும், அது புருடனுதற் கேது வாய் விசேடித்து நிற்கும் தத்துவங்கள் சட மாதல் பற்றி அடுத்ததின் தன்மையாய் நிற் கும் புருடதத்துவத்தையும் சடம் என்று உப சரித்துக் கூறுதலும் பொருந்தும். புருடதத் துவம் உண்மையாற் சித்தும், உபசாரத்தாற் சடமுமாம் என்பது உணரத்தக்கது.

"தொழில் அறிவு இச்சை மூன்றும்
வைச்சபோ திச்சா ஞானக் கிரியைமுன்
மருவி ஆன்மா
நிச்சய புருடன் ஆகிப் பொதுமையின்
நிற்பன் அன்றே"

—சித்தியார், 146.

"ஐவகையால் உறுபயன்கள் நுகரவருங் காலம்
அதுபுருட தத்துவம்என் றறைந்திடுவர்
அறிந்தோர்"

—சிவப்பிரகாசம், 40.

மாயை: ஈண்டு மாயை எனப்படுவது மும்மலங்களுள் ஒன்றாகிய மாயையன்று. இது வித்தியா தத்துவங்களுள் ஏழாவதாக நிற்பது, அரும்பில் மணம் வெளிப்படாது அடங்கி நிற்றல்போல, முக்குணங்களும் விளங்குதலின்றிச் சூக்குமமாய் நின்ற அவத்தையாகிய மூலப்பிரகிருதி (மூலப்பகுதி) யே, ஈண்டு மாயை எனக் குறிக்கப்பட்டது. ஆன்மாவிற்குக் குணம் முதல் நிலம் ஈறாகிய போக்கியங்கள் முறையே யுளவாதற் கேது வாகக் கலையினின்றும் மூலப்பகுதி என்னும் தத்துவம் தோன்றிச், சீகண்ட ருத்திரர் சத்தி கலக்கக் கலக்குண்டு, தன்னினின்றும் குண தத்துவத்தைத் தோற்றுவிக்கும்.

போக்கிய ரூபமாய் நின்ற தத்துவங்க ளுக்கெல்லாம் இது மூலகாரணமாதல் பற்றி மூலப்பகுதி என்றும், பிரகிருதி (முதற் கார ணம்) மாயைஎன்றும், பிரதானம் (முதன்மை) மான் (மகத்) என்றும், முக்குணங்களும் வியத்தமாய் விளங்காது மயில்முட்டையின் நீரில் ஐவகை நிறங்களும் போலச் சூக்கும மாய் நின்ற அவத்தையுடைமைபற்றி அவ் வியத்தம் (வெளிப்படாதது) என்றும் வழங் கப்படும்.

ஆன்மாக்களைப் போக நுகர்ச்சியிற் செலுத்தியும், அவற்றிற்குப் போக்கியப் பொருள்களாக அமைந்தும் மயக்கிநிற்றலின், மயக்குவது என்னும் பொருளில் மூலப்பிரகிரு தியை ஆசிரியர் 'மாயை' என்று குறிப்பிட் டார். "வைத்ததோர் மலமாய் மாயை மயக்க மும் செய்யும் அன்றே" எனவும், "போகசாத னம் பெத்தம் ஆமே" எனவும் அருணந்தி சிவாசாரியார் கூறியிருத்தலும் காணலாம்.

தத்துவப் படம்



*கன்மேந்திரியம்—வாக்கு, பாதம், பாணி, பாயு, உபந்தம்.

†ஞானேந்திரியம்—சோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம்.

(தொடரும்.)

திருமயிலைக்கபாலீச்சரம்

சிவாகம செம்பொருள் விளக்க விழா

சைவசமயப் பிரமாண நூல்களான சிவாகமங்களைப்பற்றி எல்லோரும் அறிந் கொள்வதற்காகத் திருமயிலைக் கபாலீச்சரதேவஸ்தானத்தின் ஆதரவில் இவ்விழா ஏற்பா செய்யப்பெற்றது. மயிலை பி. எஸ். உயர்நிலைப்பள்ளியில் 26—8—62 முதல் மூன் நாட்கள் நடைபெற்றது. சைவ ஆதீனங்களில் உள்ள ஆகம வித்துவான்களும், சிவாக ஞானமுடைய ஆதிசைவர்களும், சைவசித்தாந்த ஞானம் பெற்றவர்களும் இவ்விழாவி கலந்துகொண்டனர். முதல் நாள் தருமகர்த்தக் குழுத்தலைவர் திரு. கு. அய்யா சுப்பிரமணி முதலியார் அவர்கள் J. P. எல்லோரையும் வரவேற்றுப்பேசினார்கள். அறநிலைய ஆணை திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B.A., B.L. அவர்கள் தலைமையில் திருவாளர்க Dr. V. இராகவன் M.A. Ph., D, புதுச்சேரி திரு. J. பிலியோஸாட், N. R. பட் S. சுவாமிநாதகுருக்கள், க. வச்சிரவேலு முதலியார் B.A., L.T. முதலியோர் சொற்பொழ வாற்றினார்கள். இதைத் தொடர்ந்து இரண்டு நாட்களிலும் சிவாகம சைவசித்தாந்தப் ...றிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

மாகறல்கோயில் உள்தோற்றம்.



கலியாணசுந்தரேசுவரர் காமாட்சியம்மன் கோயில், மேலூர்
குடமுழுக்குப் பெருவிழா

அடியவர்கள் திருநட்சத்திரங்கள்

சுபகிருது — புரட்டாசி

சைவம்

3உ — திருநாளைப்போவார்நாயனார்
21உ — ஏனாதிநாயனார்
24உ — நரசிங்கமுனையரையநாயனார்
28உ — உருத்திரபசுபதிநாயனார்



சிதம்பரம் அனந்தீசுவரன் கோயிலில் அமைச்சர் திரு. கக்கன் அவர்கள்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34.
Printed at Paari Achakam, 127, Broadway, Madras-1.